ஜனவரி 04 - 10,2004 | 24 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

30/12

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



## பதவிக்காலம்: முடிவு எப்போது?



## தமிழக அரசியல்: மாறும் அணிகள்!



## உச்சப் பாதுகாப்பில் அமெரிக்கா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. - காங்கிரஸ் உறவும் ம.தி.மு.க. வின் எதிர்காலமும்

## புலிகள் ஆதரவு வைகோ என்ன செய்வார்?


வாஜ்பாய்

இந்தியாவின் மத்தியில் ஆளும் கூட்டணியிலிருந்து தி.மு.க.வெளியேறப் போகிறது என்ற நெடுநாளைய ஊகம் இவ் வாரம் உண்மையாகிவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க. —பி.ஜே.பி உறவுகள் கசந்திருந்த நிலையில் இன்றைக்கோ நாளைக்கோ என்றிருந்த இந்த வெளியேற்றம் கடைசியில் எதிர்பார்த்தபடியே நடந்து முடிந்துள்ளது.

டில்லியில் பெரும் செல்வாக்குப் பெற்ற மத்திய அமைச்சர் முரசொலிமாறன் காலமானதையடுத்து இந்த மிக முக்கிய முடிவை தி.மு.க. எடுத்துள்ளது. தி.மு.க. வின் இந்தத் தீர்மானம் ஓரளவு எதிர்பார்க்கப்பட்டது தான். என்றாலும் மத்தியில் ஆளும் பி.ஜே.பி. கட்சிக்கு மட்டும் இது பெரும் ஆச்சரியம் தந்துள்ளது.

இன்னும் ஓராண்டில் அடுத்த லோக்சபாத் தேர்தல்கள் நடக்கவிருக்கும் நிலையில் தமிழகத்தில் தி.மு.க.வுடன் கூட்டு வைக்கும் தேசிய கட்சியே தேசிய அளவில் வென்று ஆட்சி அமைக்கும் என்ற வலுவான எதிர்பார்ப்பு இருந்து வருகிறது. இதனால் தி.மு.க. வை தனது கூட்டணியிலேயே வைத்துக்கொள்ள பி.ஜே.பி. இயன்றளவு முயன்றது. பி.ஜே.பி. யையும் தி.மு.க.வையும் பிரிக்க காங்கிரஸோ படாதபாடு பட்டது.

அண்மையில் நடந்த முக்கிய வடமாநில சட்டசபைத் தேர்தல்களில் பி.ஜே.பி. கணிசமான வெற்றி பெற்றதால் பி.ஜே.பி. யை கைவிடும் தீர்மானத்திலிருந்து தி.மு.க. பின் வாங்கலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி வடமாநிலங்களில் செல்வாக்கிழந்து விட்டது எனவும் பி.ஜே.பி. அடுத்த லோக்சபா தேர்தல்களில் வெல்ல வாய்ப்பு உண்டு எனவும் ஊகங்கள் நிலவியதால் பி.ஜே.பி. யுடன் தி.மு.க. தொடர்ந்து உறவு வைத்துக் கொள்ளும் என பி.ஜே.பி. எண்ணியது.

ஆனால் கருணாநிதி வேறுவிதமாகக் கணக்குப் போட்டுள்ளார். தமிழகத்தில் அ.தி.மு.க.வின் செல்வாக்கு குறைந்துவரும் நிலையில் தி.மு.க. — காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற வாய்ப்புண்டு என அவர் கருதுகிறார். மேலும் இந்திய அரசியலில் வட இந்தியாவில் உள்ள நிலையால் தமழக அரசியல் திசை திரும்புவதில்லை.

எப்போதும் டில்லியில் ஆளும் கட்சியாக வரும் கட்சியையே மாநிலத்திலும் தமிழகம் ஆதரித்துள்ளது. எனவே வட இந்திய தேர்தல் முடிவுகளைப்பற்றிக் கவலைப்படாமல் தனது முடிவை கருணாநிதி எடுத்துள்ளார். அதாவது தமிழகத்தில் அ.தி.மு.க.வையும் மத்தியில் பி.ஜே.பி.யையும் ஆட்சியிலிருந்து அகற்ற விரும்புகிறார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வர, தி.மு.க.முழுமூச்சாகப் பாடு படப்போவது இதிலிருந்து தெளிவாகி இருக்கிறது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 356 ஆவது சட்டத்தைக் கொண்டு ஜெயலலிதா ஆட்சி கலைக்கப்படும். அவ்வாறு கலைப்பதற்கு மாநிலங்கள் அவை, மக்கள் அவை ஆகிய இரண்டிலும் பெரும்பான்மை வேண்டும். பி.ஜே.பி. போலன்றி காங்கிரஸ் அகில இந்தியாவிலும் பரந்த அளவில் பிரதிநிதித்துவம் உடைய கட்சி. அதனால் மாநிலங்களவையில் கட்சிக்குப் போதிய பெரும்பான்மை உண்டு. மக்களவையான லோக்சபாவிலும் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றால் 356 ஆவது சட்டத்தை கொண்டு அ.தி.மு.க அரசை வீட்டுக்கு அனுப்ப முடியும். இன்றைய நிலையில் தி.மு.க.வின் தேவை அதுவே.

2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க.— பி.ஜே.பி கூட்டணி தோற்றது. காங்கிரஸ்—

**பக்கத்து வீடு**

அ.தி.மு.க.—த.மா.கா. கூட்டணி வென்றது. இதற்குக் காரணம் கருணாநிதி போட்ட தப்புக் கணக்குத் தான். அதாவது த.மா.கா.— காங்கிரஸுடன் இணைந்து ம.தி.மு.க.வையும் அரவணைத்துச் சென்றிருந்தால் இலகுவாக தி.மு.க. வென்றிருக்கும். பி.ஜே.பி. யை உதற தி.மு.கதயங்கியதன் விளைவாக ஜெயலலிதா வென்று ஆளவந்தார். அவரது அட்டகாசம் தாங்கமுடியவில்லை. வை.கோ. நெடுமாறன், நக்கீரன் கோபால், அரச ஊழியர்கள், ஹிந்து பத்திரிகை, சிறுபான்மை மதத்தினர் என்று அவரது அட்டகாசத்திற்கு இலக்காகாதவர்களே இல்லை எனலாம்.

அவரது அட்டகாசம் தி.மு.க. மீதும் திரும்பியபோது மத்தியில் ஆளும் பி.ஜே.பி கண்டு கொள்ளவே இல்லை. மாறாக மாநில பி.ஜே.பி. தலைவர்கள் தொடர்ந்து தி.மு.க். வை வசைபாடிக்கொண்டும் அ.தி.மு.க.வை . வானளாவப் புகழ்ந்து வந்தனர். இதனால் எரிச்சலடைந்த தி.மு.க, காங்கிரஸ் அணிக்குத் தாவ தருணம் பார்த்திருந்தது. மறுபுறம் பி.ஜே.பி.யுடன் சிறந்த உறவு வைத்திருந்த முரசொலிமாறன் மறைந்ததும் தி.மு.க. இத்தருணத்தில் அணிமாற்ற முடிவை எடுத்ததற்கு காரணமாகும். மாறன் இருக்கும்வரை முடிவை தி.மு.க. பிற்போட்டதற்கு மற்றொரு காரணம் மாறனது மருத்துவச் செலவுகள் மத்திய அமைச்சர் என்ற வகையில் மத்திய அரசால் பொறுப்பேற்கப்பட்டதாகும்.


கருணாநிதி

எவ்வாறாயினும் மாநில பி.ஜே.பி. தலைவர்களே தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டனர் எனலாம். வாஜ்பாயை பொறுத்தவரை தி.மு.க. உறவை இறுதி வரை விரும்பினார் என்பதே உண்மை. எனினும் துணைப்பிரதமர் அத்வானி, பி.ஜே.பி. தலைவர் வெங்கையா நாயுடு ஆகியோரும் மாநில பி.ஜே.பி. தலைவர்களும் ஆடிய பித்தலாட்டத்தினால் அருமையான கூட்டாளியாகிய தி.மு.க.வின் உறவை பி.ஜே.பி. இழந்துள்ளது.

வெகுநாளாகதி.மு.க.—பி.ஜே.பி. உறவு முடிவடைவதை எதிர்பார்த்திருந்த காங்கிரஸ்கட்சி தி.மு.க. வின் முடிவால் ஏகப்பட்ட குஷி அடைந்துள்ளது. வட மாநில தேர்தல் தோல்வியால் துவண்டுபோயிருந்த காங்கிரஸுக்கு தி.மு.க. வின் உறவு பெரிதும் கை கொடுக்கும் என்பது நிச்சயம்.

இதற்கிடையில் விடுதலைப்புலிகள் ஆதரவுப் போக்கினால் காங்கிரஸுடன் இணையச் சங்கடப்படும் ம.தி.மு.க.வின் முடிவு பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. காங்கிரஸுடன் தி.மு.க. இணைந்தால் ம.தி.மு.க. என்ன செய்யும் என்பதே அந்த எதிர்பார்ப்பு. 17 மாதங்களாக வைகோவை சிறையில் அடைத்த ஜெயலலிதாவுடன் பி.ஜே.பி. இணையக்கூடும். அப்போது ம.தி.மு.க.வும் வேறு வழியின்றி தி.மு.க.— காங்கிரஸ் கூட்டணியில் இணைய நிர்ப்பந்திக்கப்படும். மற்றொரு புலிகள் ஆதரவுக்கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி 2001 சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்—அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்டு இருப்பதால் ம.தி.மு.க. வின் புலிகள் ஆதரவுக்கொள்கை காங்கிரஸ் கூட்டணியில் இணைய பெரிதாக முட்டுக்கட்டையாக இராது என்று எதிர்பார்க்கலாம்.

எஸ்.சுரேந்திரஜித்

# வாசகர் இதயம் பேசுகிறது

செபஸ்ரியான், உக்குவல.

அன்பின் சுடரே!

தினமும் திகட்டாமல் திக்கெட்டும் நடைபெறும் தகவல்களை அள்ளி வழங்கி சுடர்விடும் சுடர் ஒளியின் பிரகாசம் பாராட்டுக்குரியது. கடந்த வாரா வார மலரில் மலர்ந்த அனைத்து விடயங்களும் அருமை. அதிலும் ஜனாதிபதியின் அதிரடியில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் தாற்பரியங்களை அறிய முடிந்தது.

சமாதானத்தை முன்னெடுத்து செயற்படுவதற்கு உள்ள முட்டுக்கட்டைகள் பற்றிய தகவல், மாவீரர்களின் மகத்தான சேவைகள், வடபுல செய்திகள் ஆகியவை மூலம் பல தகவல்களை அறிய முடிந்தது. மேலும் மலையகக் கண்ணோட்டத்தில் இனவாதிகள் செயற்படுத்தப்போகும் தேசிய அரசாங்கம் எந்த வகையிலும் சிறுபான்மை மக்களுக்கு ஒத்துவராத விடயமே. சிறுபான்மை மக்களை அடக்க இனவாதிகளின் இழிவான செயலே இது. இதுசம்பந்தமாக ஆறுமுகம் தொண்டமானின் செயற்பாடு வரவேற்கத் தக்கதே!

ப.தேவி, ஆவரங்கால்.

சுடர் ஒளியே!

யாழ் எங்கும் வீர நடை போடும் சுடர் ஒளியே! உன் புகழ் என்றும் வளர என் வாழ்த்துக்கள். பித்தன் பதில்கள், தேரடி அரட்டைகள், கவிதை முத்துக்கள், அரசியல் புயல்கள் அத்தனையும் சிறந்தவை. மேலும் முதலிடத்தில் நிற்பது, ஈழத்திலே தமிழினம் அனாதையாக— ஆதரவின்றி தவித்துக்கொண்டிருக்கையில் உதவிக்கரம் நீட்டி உறுதியாய் நின்று விடுதலைப்போருக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அரசியல் செயல்வீரன், நிரந்தர புகழ் அரசன் கருணை வள்ளல் எம்.ஜி.ஆர் — எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் நட்பு.

உனது சுடர் ஒளியில் வெளிவந்த 20, 21 ஆவது அங்கத்தை வாசித்துப் பிரமித்துப் போனேன். தமிழினம் என்றும் எம்.ஜி.ஆரை மறக்காது.

செ.கோபாலகிருஷ்ணன், சுழிபுரம்.

உலகெலாம் புகழ் ஒளி பரப்பும் சுடர் ஒளியே!

திங்கள் தோறும் உன்னைக் காணாவிட்டால் என் கண்கள் தூங்க மாட்டேன் என்கின்றன. நீ வாரம் தோறும் உலகில் நடக்கும் எத்தனை, எத்தனையோ விஷயங்களை உடனுக்குடன் தருவதால் உன் மேல் எனக்கு அலாதிப்பிரியம். தென்னிலங்கை அரசியலில் குளறுபடிகள் நடக்கும் வேளைகளில் வாசகர்களின் அளவினை அறிந்து அரசியல் மர்மங்களை சூட்டோடு சூடாக கட்டுரைகளில் விளக்கும் விதம் அட்டகாசம். உன் சேவை மேலும் சிறக்கட்டும்.

பு.மைதிலி, திருநெல்வேலி.

திங்களொன்றின் தீபமாக<br>
தினந்தோறும் உலா வரும்<br>
சுடர் ஒளியே!<br>
மனதை மயக்கும் நின்<br>
ஆக்கங்கள் யாவும்<br>
மெய்சிலிர்க்க வைப்பன.<br>
திங்களின் தீபமே!<br>
உன் கதிர் எட்டுத்திக்கும்<br>
பரவி விண்மூடட்டும்.<br>
புகழ்சேர எனது இனிய<br>
நல்வாழ்த்து என்றென்றும்<br>
உனக்கே!

எஸ். வசந்தி, வட்டக்கச்சி.

தித்திக்கும் சுடர் ஒளியே!

நீ தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும் அருமை. அவற்றிலும் சில வாரங்களுக்கு முன்பு பிரசுரமாகியிருந்த சுரேஸ்கோபியின் 'ஏமாற்றம்' தமிழ்ப்பிரியனின் 'விலைமாது' சுபாவின் 'கோபம்' போன்ற தலைப்பிலான கவிதைப்புனல்கள் நன்று.

மேலும் சி. அன்பழகனின் ''உதயத்தின் அஸ்தமனம்'' என்ற சிறுகதை, விண்ணனின் 'மிஸ்டர் கூல் அன்ட் காம்' 'தன்வினை தன்னைச்சுடும்' போன்ற ஆக்கங்கள் அற்புதம்.




ஒளிர்க சுடர் ஒளி!

எஸ்.மகிந்தா, யாழ்ப்பாணம்.

சுடரே!

மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த சுடர் ஒளியே, நீசுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சூப்பர்.

பொதுவாக உன் எல்லாப் பக்கங்களுமே என் உள்ளத்தைக் கவர்ந்தவை. என்றும் நீ எம் மனங்களில் நிலைத்திருக்க வாழ்த்துக்கள்.

என்.எழில், மாங்குழம்.

சுடர் ஒளியே,

உன் வரவு கண்டு மகிழும் வாசக நெஞ்சங்களுள் நானும் ஒருத்தி.

நீ தரும் அம்சங்களுள் மசாலா, சிறுகதை, கவிதைப்புனல், வடபுலம் என பெரும்பாலும் எல்லாமே என்னைக் கவர்ந்தவை.

இன்று போல் என்றும் நீ வாசக நெஞ்சங்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளோடு உன்னிடமிருந்து விடை பெற்றுக்கொள்கிறேன்.

கவிதரன், மானிப்பாய்.

என் இதய ஒளியே!

எத்திக்கும் சுடர் பரப்பி, தித்திக்கும் தேனமுத தகவல்களை எமக்குத் தரும் சுடர் ஒளியே! உன் புகழ் ஓங்கட்டும். நீ தாங்கி வரும் அத்தனை பக்கங்களும் உண்மையிலே மெச்சத்தக்கவை. நெட் பக்கம், மசாலா பகுதி போன்றவை பிற தகவல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பை எமக்குத் தருகின்ற உனக்கு எனது நன்றிகள்.

சுமன், அட்டன்.

சுடர்ஒளியே!

நீ ஒவ்வொரு வாரமும் வரும் வேளை காத்திருக்கின்றேன். நீ தாங்கிவரும் சினிமா, மலையக பக்கங்கள் உண்மையில் எமது உணர்வுகளை தூண்டும் விதமாக அமைந்துள்ளன. மலையக மக்களாகிய எமது மக்கள் படும் துன்பங்களை வித்தியாசமான கோணங்களில் எடுத்துச் சொல்லி எமக்கு அறிவுப் பாடத்தை புகட்டும் சுடர் ஒளியே! நீ நீடூழி காலம் வாழ்க.

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிள்ளை வாதம் என்னும் இன்னல்

பெரும்பாலும் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையுள்ள இளம் பிள்ளைகளை பற்றிக்கொள்ளும் வாத நோயே இளம் பிள்ளைவாதம் எனப்படுவதாகும்.

ஆனால் இது பெரியவர்களைப் பீடிக்காது என்பதில்லை.

கையோ, காலோ உணர்விழந்து அல்லது கையும் காலுமே உணர்விழந்து போய்விடும் குழந்தைகளைக் காணும்போது நாம் நெக்குருகிப் போகிறோம். அப்படியொரு அனுதாபத்திற்குரிய நிலைமையினை உண்டாக்கும் இளம்பிள்ளைவாதம் ஒரு வகை வைரஸ் தாக்கப்படுவதால் உடலில் ஏற்படுகிறது.



நோயாளியின் மலம், எச்சில் மற்றும் கழிவுப் பொருட்களில் இந்த வைரஸ்களைக் காண முடியும்.

நோயினால் பீடிக்கப்பட்டவர்களை மட்டுமல்ல பார்ப்பதற்குத் திடகாத்திரமாக உள்ளவர்கள் போலத் தோற்றமளிப்போர் உடலிலும் இத்தகைய வைரஸ்கள் குடிகொண்டிருக்கக் கூடியவை.

பால், உணவு, தண்ணீர் ஆகியவற்றின் மூலம் இந்த வைரஸ் மற்றவர்களையும் பற்றிக்கொள்ளும்.

பெண்களை விட ஆண்களையே இந்த நோய் பெரிதும் பாதிப்பதாகச் சொல்லப்படுகிறது. டொன்ஸிலிஸ் ஆபரேசன் செய்த பின்பு தான் அடியோடு இளம்பிள்ளைவாதம் குழந்தைகளைப்பற்றிக்கொள்கிறது என்ற இன்னொரு கருத்தும் உண்டு.

இந்த நோயானது ஆரம்பத்தில் கடுமையானதாகவே இருக்கும். தலைவலி, முதுகுவலி, வாந்தி போன்றவை நோய்த் தொடக்கத்தில் இருக்கும்.

103 அல்லது 104 டிகிரி வரையில் காய்ச்சல் இருக்கும்.

நோயின் கடுமை நோயாளியின் தோற்றத்தை மிகவும்வாட்டமுடையதாகக் காட்டும். கழுத்தும், உடம்பும் மென்மைத் தன்மை இழந்து சற்றே விறைத்தது போலத் தெரியும்.

பெரும்பாலான இவ்வகை நோயாளிகள் வாதக் கோளாறு ஏற்படாமல் தப்பித்துக் கொண்டு விடுவதும் உண்டு.

ஆனால்சிலநோயாளிகளுக்கோ, நோய் கண்ட நான்கைந்து நாட்களில் தசைகளில் வாதத்திற்கான அறிகுறிகள் தோன்றும். முதன்முதலாக உடம்பிலுள்ள சில பகுதித் தசைகள் முற்றிலும் தளர்ந்துபோய்விடும்.

குறிப்பாகச் சொல்வதென்றால்—கையும் காலுமே அதிகமாக இந்நோயால் பாதிக்கப்படும் அங்கங்களாகும். இது மட்டுமல்ல ஒரு மனிதனின் உடம்பில் மிக முக்கிய பகுதியெனச் சொல்லப்படும் மூளையிலிருந்து புறப்படும் நரம்புகளும், அவற்றால் இயங்கும் தசைகளும் கூட வலுவிழந்து தளர்ந்து போய்விடும்.

இளம் வயதிலேயே இத் தசைகள் சக்தியற்றுப் போவதால் அவற்றைச் சார்ந்துள்ள எலும்புகள் மேலும் வளர சாத்தியம் உண்டு. அப்படி வளர்ச்சியடைகின்ற எலும்புகள், தசைகளால் பயன்படுத்தப்படாததால் வலிமை குன்றிவிடுகின்றன. அதைப் போல தசைகளும் சோம்பிப்போகும்.

இளம்பிள்ளைவாதம் ஏற்பட்டு கால், கை மட்டும் உணர்விழந்து போகும் பட்சத்தில் உயிருக்கு எவ்விதமான ஆபத்தும் கிடையாது.

அவ்வாறில்லாமல் மார்பு, கழுத்துப் பகுதி ஆகிய இடங்களில் உள்ள தசைகள் அப்படியே உணர்விழந்துவிடுமானால், நோய்ப்பட்டவரின் உயிருக்கே ஆபத்தாக முடிந்துவிடும்.

இளம்பிள்ளைவாத நோய்க்கெனக் குறிப்பாகச் சிகிச்சை ஒன்றுமில்லை. ஆனாலும் தகுந்த காலத்தில் தொடங்கி தக்க முறையில் பயிற்சி முறைச் சிகிச்சை அளித்து வந்தோமானால், ஓராண்டுக்காலத்திலேயே தசைகள் இயல்பான நிலையை அடைய வாய்ப்பிருக்கிறது.

இந்த நோய் கண்டவர்கள் எப்போதும் படுக்கையிலேயே இருப்பது நல்லதல்ல. அப்படியிருந்தால், வலுவிழந்த தசைகள் இன்னும் உணர்விழக்க நேர்ந்துவிடும்.

இளம்பிள்ளை வாத நோய் குணமான பின்பு தான், தசைகளைப்பிடித்துவிடும் பயிற்சி முறைச் சிகிச்சையைத் தொடங்க வேண்டும். நோய் சரிவர நீங்காமலிருக்கும் போதே இதையும் தொடங்கினால் ஆபத்தாகிவிடும்.

நோயுற்றவரைத் தனியே வைப்பது, நோய்த்தடுப்பு முறையில் மிகவும் முக்கியமானதாகும். மலம்—சிறுநீர் மூலம் நோய்க் கிருமிகள் பிறரைப்பற்றவும் வாய்ப்புண்டு என்பதால் அவற்றை மிகக்கவனமாக அப்புறப்படுத்த வேண்டும்.

இளம்பிள்ளைவாத நோய் முன்னெச்சரிக்கையாகத் தடுக்கப்படாத பட்சத்தில், நோயுற்றவர்கள் குழந்தைகளானாலும் பெரியவர்களானாலும் கை கால்கள் கோணலாகிவிடக் கூடிய ஆபத்தும் இருக்கிறது.


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

### Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

### வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
டிசம்பர் 26 -31 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 075 368426, 368427, Cell. 072 910796
**Hot Line: 0777 569205**

**கல்முனையில்..**
ஜனவரி 03, 04, ஆம் திகதி வரை சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 29329
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**
ஜனவரி 10, 11, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 22074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**
ஜனவரி 16 - 21வரை
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 24019, Hot Line: 0777 569205.



## BRIGHT Training Centre

P.O.Box- 162, S - 27 First Floor, Colombo Central Super Market Complex, Colombo- 11.T.P.2434770,Fax.2333279

### தபால் மூலம் கல்வி நெறிகள்

பதினைந்து வருடகாலமாக தபால் மூலம் கல்வி நெறிகளை போதித்த எமது நிறுவனம் இன்று வரை பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சி அளித்து மாணவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

**90 Days Spoken English & Singhala/90 நாட்களில் ஆங்கில/சிங்கள பேச்சுக்கலை**



மூன்றே மாத காலங்களில் ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க உளவியல் முறையில் மாணவர் உவந்து ஏற்கும் முறையில் தயாரிக்கப்பட்ட கல்விநெறி. இப்பாடநெறியை பயிலும் மாணவர்களுக்கு Diploma in Spoken English & Spoken Singhala நற்சான்றிதழ் வழங்கப்படும்.

### Nursery Teachers Training Course (NTTC)
பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி



ஆறே மாத காலத்தில் பாலர் முன் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி தபால் மூலம் போதிக்கப்படும். இந்நெறியை மேற்கொள்வோர் பாலர் -முன் பள்ளிக் கல்லூரியை நடாத்துவதற்கும் சுயதொழிலாக பாலர் முன்பள்ளி ஆசிரியர் ஆகவும் கடமையாற்ற முடியும். இப்பாடநெறியை திறம்பட முடிப்போர்க்கு **Diploma in Nursery Teachers Training Course** நற்சான்றிதழ் வழங்கப்படும்.

### Method of Computerised Book- Keeping & Accountancy(MCBA)
கம்பியூட்டர் மூலம் கணக்குப் பதியும் முறையும் கணக்கீடும்



ஆறே மாத காலத்தில் கடைக்கணக்கு எழுதும் முறையும், **Store-Keeping, Book - Keepers & Account Clerk** ஆகிய தொழிலை மேற்கொள்ளக்கூடிய கல்வி நெறியை மேற்கொள்வது மூலம் **Diploma in Method of Computerised Book- Keeping & Accountancy** நற்சான்றிதழும் பெறமுடியும். மேலதிக விபரங்களுக்கு மேற்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE

*BRIGHT Future in your Hand*



## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H.Ind-S.M.P.**

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடித மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

**500 gram 300/-, 250 gram 150/-**
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

**Ayur Dr. K. Sivasubramaniam,** முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 384645.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஜனவரி 04 – 10, 2004

85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## புத்தாண்டு எதிர்நோக்கும் சவால்

2003ஆம் ஆண்டு நம்பிக்கையுடன் பிறந்தது. ஆனால், அவநம்பிக்கையுடன் முடிவடைகிறது.

புதன்கிழமை நள்ளிரவு பிறக்கிறது புதிய ஆண்டு. புதிய ஆண்டு எப்படி இருக்கும்? அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு ஏற்படுமா? நாட்டில் சமாதானம் மலருமா? இப்படியான ஆதங்கங்கள் மக்கள் மனதில் எழுவது நியாயமே.

2003ஆம் ஆண்டு ஆரம்பமானபோது நாட்டு மக்கள் மத்தியில் நல்ல நம்பிக்கை இருந்தது. அப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் தடங்கல் இன்றி நடைபெற்று வந்தன. சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கக் கூடிய அளவு தென் இலங்கையில் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டிருக்கவில்லை. 20 வருடகால உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு ஏற்பட்டு இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படப் போகின்றது என்ற நம்பிக்கை நாட்டு மக்களிடம் இருந்தது.

ஆனால், சில மாதங்களே இந்த நம்பிக்கை நீடித்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு சரிவர அமுல் நடத்தாத காரணத்தால் உருவான பிரச்சினை படிப்படியாக அதிகரித்தது. சமாதானப் பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டது,

பிரச்சினைக்குக் காரணமாக இருந்தது, வடக்கு – கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கையே. நீண்ட இடைவெளிக்குப் பின்பு இது தொடர்பான புலிகளின் திட்ட வரைவு அரசிடம் கையளிக்கப்பட்டது. சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் சாத்தியங்கள் தென்பட்டன.

ஆனால், தென் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி இந்த நம்பிக்கைகளை எல்லாம் வீணடித்துவிட்டது.

மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தமது பொறுப்பில் எடுத்ததை அடுத்து உருவான அரசியல் நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. இந்த நெருக்கடி தீர்ந்தால் தான் சமாதானப் பேச்சுகளுக்கு அரச தரப்பில் யார் பொறுப்பு என்பது தெரியவரும். அதற்கு முன் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் சாத்தியம் அறவே இல்லை.

தென் இலங்கை அரசியல் நெருக்கடி தீரும் வரை சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று விடுதலைப் புலிகளும் – அதுவரை அனுசரணையாளர் பணியில் இருந்து விலகி இருக்கப் போவதாக நோர்வே தரப்பினரும் – தெளிவாகத் தெரிவித்துவிட்டனர்.

ஆகவே, புதன் நள்ளிரவு பிறக்கும் புதிய ஆண்டில் நாடு முக்கிய சவால் ஒன்றை எதிர்நோக்குகிறதென்பது தெளிவாகத் தெரிகிறது. தென் இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் சமாதானப் பேச்சுக்கள் குழம்பிப்போய் யுத்தம் ஏற்படும் ஆபத்தே அது ஆகும்.

ஆகவே, நிரந்தர சமாதானமா, யுத்தமா என்பது இன்று தென் இலங்கைத் தலைவர்களின் கையிலேயே தங்கியிருக்கிறது.

நாடு சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகளுக்கு மேல் கழிந்துவிட்டது. புரையோடிப் போய் இருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த அரை, குறை முயற்சிகள் எதுவும் வெற்றி அளிக்கவில்லை.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய சமாதான முயற்சிகளே புலிகள் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. நாடு துண்டாடப் படுவதைத் தடுக்கும் கடைசிச் சந்தர்ப்பமாகவும் இது கருதப்படுகிறது.

ஆகவே நாட்டின் தலைவிதி பெரும்பாலும் புத்தாண்டில் தெரிந்துவிடும்.

சமாதானப் பேச்சுக்கள் நீண்டகாலம் தடைப்பட்ட நிலையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. பிறக்கும் புத்தாண்டிலாவது தென் இலங்கை அரசியல்வாதிகள் ஏதாவது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்து சமாதானப் பேச்சுக்கள் தொடருவதற்கு உதவ வேண்டும். தவறினால் அது அவர்கள் செய்த மாபெரும் வரலாற்றுத் துரோகமாகிவிடும்.

# விலகிப்போகும் சமரச முயற்சிகள்

## ஜனாதிபதி பதவி நீடிப்பு அடுத்த நகர்வு

நவம்பர் 4 ஆம் திகதி மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டதை அடுத்து தென் இலங்கையில் உருவான அரசியல் நெருக்கடி தணிந்து போகும் அரசியல் அறிகுறி எதுவும் இல்லை.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தேசிய நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் பிசுபிசுத்துப் போய்விட்டன.

தமக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதியும் பிரதமரும் நான்கு தடவைகள் சந்தித்துப் பேசியும் பிரச்சினைக்குரிய விவகாரங்களில் இணக்கம் ஏற்படவில்லை. இவர்களது பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட மனோ–மலிக் அதிகாரிகள் மட்டக் குழுவும் தனக்கு வழங்கப்பட்ட கால எல்லை முடிவடைந்த நிலையில் செயலற்றுப்போய்விட்டது. டிசம்பர் 15க்குப் பின்பும் மனோ–மலிக் குழுவினர் சந்திப்பு தொடரும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் அடுத்த சந்திப்புக்கான திகதி குறித்து இதுவரை அறிவிப்பு எதுவும் இல்லை.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து புதிய சர்ச்சை ஒன்ற கிளப்பப்பட்டு வருகிறது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005 டிசம்பர் 22 ஆம் திகதி முடிவடைவதற்குப் பதிலாக, 2006 நவம்பர் 11 ஆம் திகதியே முடிவடையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியிடமிருந்து இது பற்றி இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வரவில்லை.

தென் இலங்கை அரசியல் புத்தாண்டில் பல புதிய அரசியல் திருப்பங்களைச் சந்திக்கப்போகிறது. ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சில் சில மாற்றங்களை ஏற்படுத்தி தனது பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார். அவரின் பதவிக் காலம் நீடிப்புக் குறித்தும் தகவல்கள் வெளிவருகின்றன. இவை எல்லாம் புதிய நெருக்கடிகளுக்கான அறிகுறிகளே.

ஜனாதிபதியின் பதவி நீடிப்பு சர்ச்சை தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில் ''ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான தற்போதைய நிலை தொடர்வதில் எந்தவித சிக்கலும் இல்லை'' என்று நழுவலாகக் கூறி உள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான ஒரு சர்ச்சையைக் கசிய விட்டு அரசியல் நிலைமையை நாடி பிடித்துப் பார்க்கும் ஒன்றாக இது கருதப்படுகிறது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பாக தற்பொழுது வெளிவரும் செய்திகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெளிவான விளக்கம் பெற வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் பிரதமரைக் கோரிவருகின்றனர். 2005 டிசெம்பர் 22 ஆம் திகதிவரை பதவியில் இருப்பதற்கே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை கொடுத்தனர் என்றும் அதன் பின்பும் அவர் பதவியில் இருக்க முடியாது என்றும் அமைச்சர்கள் பலரும் எதிர்ப்புக் குரல் எழுப்பி வருகின்றனர்.

2005 டிசெம்பர் 22 க்குப் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு அரசு கட்டுப்படப் போவதில்லை என்றும் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ராஜித சேனாரத்ன சவால் விட்டு வருகிறார்.

தற்போதைய அரசமைப்பின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள்.

ஜனாதிபதி முன்னர் 1994 நவம்பர் 11 ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருந்தார். இதன்படி 2000 நவம்பர் 11 ஆம் திகதி அவரது பதவிக் காலம் முடிவடைகிறது.

ஆனால், ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு சுமார் ஒரு வருடம் இருக்கும் போதே – அதாவது, 1999 டிசெம்பர் 22 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்தி வெற்றி பெற்றார்.

இதன்படி 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி அவரது பதவிக் காலம் முடிவடைய வேண்டும். ஆனால் 2000 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதியும் பிரதம நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்திருந்தார் என்பதே தற்பொழுது கசிந்துள்ள தகவல். இதன்படி 2006 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி வரை அவர் பதவியில் இருக்க முடியும் என்று வாதிக்கப்படுகிறது.

இந்த விவகாரம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியை மேலும் பின் தள்ளி விடும் என்பதில் சந்தேகம் இல்லை. பெரும்பாலும் சமரச முயற்சிகள் எல்லாம் முறிந்து போனது மாதிரித்தான்.

பிரதமருடன் இணக்கம் ஏற்படுத்தும் முயற்சியை சீர்குலைக்கும் மற்றொரு நடவடிக்கை உள்துறை அமைச்சின் சில பொறுப்புக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதாகும்.

நவம்பர் 4 ஆம் திகதி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு ஆகியவற்றை தமது பொறுப்பில் எடுத்திருந்தார்.

உள்துறை அமைச்சின் கீழ் இருந்த சிறைச்சாலைத் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இந்திய வம்சாவளி ஆட்பதிவு ஆணையாளர், தொகை மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஜனாதிபதி தற்பொழுது கொண்டுவந்துள்ளார். பொலிஸ், விசேட ரிசேர்வ் பொலிஸ், ஊர்காவல்படை, தேசிய அபாயகரமான பொருட்கள் கட்டுப்பாட்டுச் சபை ஆகியவை புதியதாக உருவாக்கப்பட்டுள்ள உள்துறை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. உள்துறை அமைச்சு ஒழிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் உள்துறை அமைச்சு இருக்கவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவி ஏற்றபின்பு ஜோன் அமரதுங்கவை அமைச்சராகக் கொண்ட உள்துறை அமைச்சு உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதி இந்த மாற்றங்கள் மூலம் தனது அதிகாரப் பலத்தை மேலும் அதிகரித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென் இலங்கை அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கூறும் முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டன என்பதையே ஜனாதிபதியின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன..

சமரச முயற்சி தோல்வி காணுமிடத்து தன்னைப் பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வதில் ஜனாதிபதி நோக்கமாக இருந்து வருகிறார்.

– சஞ்சாரன்


## சுடர் ஒளி
## பதவி வெற்றிடங்கள்
### உடனடி வேலை வாய்ப்புகள்

பத்திரிகை எழுத்துத்துறையில் உண்மையான ஆர்வமுடையவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். 'சுடர் ஒளி' நாளிதழ் மற்றும் வாரமலர் இரண்டுக்கும் பின்வருவோர் தேவை.

★ பயிலுநர் பத்திரிகையாளர்கள் (Trainee Journalists)
★ உதவி ஆசிரியர்கள் (Sub Editors)
★ அலுவலக செய்தியாளர்கள் (Staff Reporters)
★ வெளியூர்ச் செய்தியாளர்கள் (Out station Reporters)

| | | |
|---|---|---|
| அவிசாவளை | அம்பாறை | அனுராதபுரம் |
| பொகவந்தலாவை | கலஹா | தெனியாய |
| கம்பளை | காலி | ஆலிஎல |
| அட்டன் | இங்கிரிய | கந்தப்பளை |
| களுத்துறை | கிளிநொச்சி | மதுரங்குளி |
| புதுக்குடியிருப்பு | நோர்வூட் | நுவரெலியா |
| நாவலப்பிட்டி | நீர்கொழும்பு | பாணந்துறை |
| பட்டிருப்பு | பூண்டுலோயா | புசல்லாவை |
| ரத்தோட்டை | ராகலை | இறக்குவானை |
| வாகரை | எட்டியாந்தோட்டை | ஹரிஸ்பத்துவ |
| பொத்துவில் | கினிகத்தேன | நிவித்திகல |

★ மொழி பெயர்ப்பாளர்கள் (Translators) [ஆங்கிலம் மற்றும் சிங்களத்திலிருந்து தமிழுக்கு]
★ புகைப்படப் பிடிப்பாளர்கள் (Photographers)
★ கணினி சேவையாளர்கள் (Computer Staff)

அர்ப்பணிப்புடன் பணியாற்றி திறமையை வெளிப்படுத்துபவர்களுக்கு பதவி உயர்வுகளும், சம்பளப் படியேற்றங்களும், விசேட ஊக்குவிப்புகளும் காத்திருக்கின்றன.

கல்வித் தகைமை: குறைந்தபட்சம் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் சித்தி.
மொழித் தேர்ச்சி: தமிழோடு ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும் நல்ல தேர்ச்சி இருப்பின் அது மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
பொதுத் தேவைகள்: தன்னம்பிக்கை, தொழில்பற்று, செயல்களில் ஊக்கம், அர்ப்பணிப்பு, பத்திரிகையில் விசுவாசம்.
வயதெல்லை: கிடையாது.
முன் அனுபவம்: இப்போது வேலையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு உயர்ந்த இடம் கிடைக்கும்.
சிபார்சு: உங்களைச் சிபார்சு செய்யக்கூடிய - உறவினரல்லாத - இருவரது பெயர்கள், முகவரிகளுடன் உடனே விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

பிறக்கும் புதுவருடம் உங்களுக்கு எல்லா நலன்களையும் தரட்டும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக ஆசிரியர் - சுடர் ஒளி
த.பெ. 2129,
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி உச்ச பாதுகாப்பில் அமெரிக்கா


# தாக்குதல் ஆயுதமாக இன்னும் விமானங்கள்

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஈராக் மீது தாக்குதல் நடத்தி சுமார் பத்து மாதங்கள் கடந்துவிட்டன. ஈராக் யுத்தம் முடிவடைந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவித்தும் விட்டார். ஆனால், ஈராக்கில் யுத்தம் இன்னும் ஓயவில்லை. அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் சதாம் ஆதரவு தலைமறைவுப் படைகளின் தாக்குதலுக்கு தொடர்ந்து உள்ளாகி வருகின்றன. இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்க கூட்டுப்படைகளுக்கு ஆதரவாக ஈராக்கிற்கு படைகளை அனுப்ப இணங்கி இருந்த அமெரிக்காவின் நேச நாடுகள் தற்பொழுது பின்னடித்து வருகின்றன. அந்நிய நாடு ஒன்றில் தனது படைகளைப் பலி கொடுக்க இந்த நாடுகள் தயார் இல்லை.

ஈராக் பிரச்சினையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆகப்பிந்திய திருப்பம். வருட இறுதிக்குள் பெரும் தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்து அமெரிக்கா தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்திருப்பது தான்.

தீவிரவாதிகளின் தாக்குதல் ஆயுதமாக விமானங்களே இன்னும் இருப்பதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரொம் ரிட்ஜ் கூறுகிறார். 2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையம் தொடர்விமானத் தாக்குதல்களினால் தரை மட்டமாகியது. அன்றில் இருந்து இன்றுவரை விமானத் தாக்குதல் அச்சம் அமெரிக்காவில் நீங்கியபாடில்லை. தீவிரவாதிகளின் விமானத் தாக்குதலை முறியடிக்க அமெரிக்க நகரங்கள் ஆயத்தமாக இருந்து வருகின்றன.





கடந்த வாரம் அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசைனை ஈராக்கில் உள்ள அவரது சொந்த நகரத்தில் வைத்தே கைது செய்திருந்தன. அமெரிக்கப் படையின் உளவுப் பிரிவினாலேயே இவர் கைது செய்யப்பட்டார் என தகவல்கள் தெரிவித்தன. ஆனால் தற்பொழுது இதற்கு முற்றிலும் மாறாக புதிய தகவல்கள் வெளிக்கிளம்பி இருக்கின்றன. மயக்க மருந்து கலந்த உணவினால் உணர்விழந்த நிலையில் இருந்த சதாமை, குர்டிஷ் இன பழங்குடிப் படையினர் பிடித்து பதுங்கு குழிக்குள் தடுத்து வைத்து அமெரிக்கப் படையினரிடம் பேரம்பேசி விற்றனர் என்பதே அந்த தகவல். சதாம் ஹுசைன் கைதான சமயம் இருந்த தோற்றம் இதனை நம்ப வைக்கிறது.

சதாம் எப்படிக் கைது செய்யப்பட்டாலும் அவரை உயிருடன் பிடித்த பொறுப்பு ஜோர்ஜ் புஷ்ஷுக்கு உரியது தான். இதன் எதிரொலி தான் அமெரிக்க நகரங்களில் அமுலுக்கு வந்துள்ள அதி பாதுகாப்பு நடவடிக்கைகள். ஐந்து வர்ணங்களாக தரம்பிரிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைளில் தற்பொழுது அமுலுக்கு வந்திருப்பது இரண்டாவது கட்டமான ஒரேஞ்.

கடந்த மே 20 ஆம் திகதி சவூதி அரேபியாவிலும், மொரோக்கோவிலும் அல் குவைதா தீவிரவாதிகளால் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போது அமெரிக்க நகரங்கள் ஒரேஞ் பாதுகாப்பு நடவடிக்கைக்குள் கொண்டு வரப்பட்டன. பத்து தினங்கள் இது அமுலில் இருந்தது. இதற்கு உலக வர்த்தக மையம் மீதான தாக்குதலின் முதலாவது ஆண்டு நிறைவு நாளான 2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதியும் ஈராக் மீதான அமெரிக்க கூட்டுப் படைகளின் தாக்குதல் ஆரம்பிக் கப்பட்ட 2003பெப்ரவரியிலும் ஒரேஞ் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன.




வாஷிங்டனே தீவிரவாதியின் பிரதான இலக்காக இருக்கலாம் என்று புஷ்நிர்வாகம் அஞ்சுகிறது. வாஷிங் டனைச்சுற்றி ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன. நியூயோர்க்கிலும் இவற்றைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தாக்குதல்கள் எதிர்பார்க்கப்படும் மற்றைய பிரதான நகரம் லொஸ் ஏன்ஜெல்ஸ். தற்போதைய பாதுகாப்பு




நடவடிக்கைகள் காரணமாக அமெரிக்க பயணிகள் ரயில்களில் மாநில பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடும் சோதனைகள் காரணமாக விமானப் பயணங்கள் தாமதம் அடைந்துவருகின்றன.



விமானத் தாக்குதல் அபாயம் கருதி சர்வதேச விமான நிறுவனங்களுடனும்வெளி நாடுகளுடனும் அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவினர் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக பென்டகன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் எல்லைகளைக் கொண்ட கனடா — மெக்சிக்கோ ஆகாயப் பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார். கனடாவில் இருந்து அமெரிக்காவுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவக் கூடும் என்று கருதி எல்லையில் தீவிர ரோந்து நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தப் பாதுகாப்பு பிரச்சினை இன்றோ நாளையோ முடிவடைந்துவிடப் போவதில்லை. அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் எவ்வளவு காலத்துக்கு உஷார் நிலையில் இருக்கப் போகிறார்கள்? இவற்றை எல்லாம் கருதித் தான் பெரும்பாலான உலக நாடுகள் — முக்கியமாக அமெரிக்காவின் நட்பு நாடுகள்— ஈராக் மீதான படையெடுப்பின் போது அமெரிக்காவுடன் கூட்டுசேர மறுத்திருந்தன. தற்பொழுது அமெரிக்கா சிக்குண்டு தவிக்கிறது.

நாட்டை அடிக்கடி உச்ச பாதுகாப்பில் வைத்திருப்பதற்கு அமெரிக்கா லட்சக் கணக்கான டொலர்களைச் செலவிட்டு வருகிறது.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் இது பெரிய பயணம் அல்ல. ஆனால் தீவிர வாதிகளின் தாக்குதல்களை எதிர் பார்த்து தினமும் கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருப்பது தான் வேதனை தரும் விடயம்.

சஞ்சாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குடியுரிமைப் படிவத்தால் குடுமி பிடிச்சண்டை

''இது வரை காலமும் நாடற்றவர்கள் என்ற நிலையில் இருந்த இந்திய வம்சா வளியினருக்கு இலங்கைப்பிரஜைகள் என்ற அந்தஸ்தை இலங்கை அரசு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவுடன் சட்டமாக்கி விட்டது. ஆனால் இந்த மலையக தொழிற் சங்க வியாபாரிகள் இதனை ஒரு திருவிழா வாக்கி தத்தமது பெனர்களில் போட்டு ஆட்டம் போட ஆரம்பித்து விட்டனர்.'' என ஆதங்கப்பட்டார் சிவப்புச் சட்டை போஸ்டர் வீரரான சந்திரன்.

''என்ன ஐயா நாங்கள்பல தடவை முயன்றாலும் டெலிபோனில் பிடிபடாத நீங்கள்இன்று வலிய வந்து விட்டீர்களே!'' என்றோம்.

''சார் உங்களுக்கு ஒரு முக்கியமான சங்கதி சொல்ல வேண்டும் , போனவாரம் நுவரெலியா, பதுளை, கண்டி, இ.ரத்தினபுரி எல்லாஇடங்களுக்கும் போய் வந்தேன்'' என்றார். போஸ்டர் சந்திரன்.

''இதில் என்ன ஐயா புதுமை ஒன்றறை மாதமா பார்லிமெண்டில் அடைந்திருந்து விட்டு ஒரு மாற்றத்திற்காக ஊர் சுற்றப் போய் இருப்பீர்கள். உங்கள் ஊர் சுற்றுலா ஒரு பெரிய செய்தியா?'' தூண்டிலை வீசிவிட்டார் நண்பர்.

''சார் எப்பவுமே நீங்கள் எங்களை கிண்டல் அடிப்பதை விடமாட்டீர்களே! கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்'' என ஆரம்பித்தார் சந்திரன்.

''சார் மலை நாட்டில் இப்போது ஆறுமுக சாமியார் , மலைச்சந்திரனார் ஆகியோர் போட்டி போட்டுக் கொண்டு போம் அச்சடித்துக் கொடுக்கிறாங்க''

''என்ன ஐயா, தங்களுடைய சமுதாய நலன் கருதி செய்வது ஒரு சேவை தானே?''

''என்னசார் நீங்க, சேவை செய்யவேண்டாம் என்று யார் சொன்னார்கள்? தாராளமாக செய்யட்டும். ஆனால் அதை வியாபாரம் ஆக்கிவிட்டாங்களே! அது தான் வேதனை'' என்றார் போஸ்டர் சந்திரன்.

''புதுக்கதை அல்லவா சொல்லுறீங்க! அப்ளிக்கேசன் போம்களை விற்கிறாங்களா?''

''சார் இவுங்க நேரடியா விற்பனை செய்யவில்லை. இதுகளுக்கும் புரோக்கர்கள் முளைத்து விட்டனர். ஆபிஸில் இருப்பவர்கள் முதலில் போம் முடிந்து விட்டது என்ற கதையை புரோக்கர்கள் மூலம் பரப்பிவிடுகின்றனர். அதேவேளை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும் இல்லாவிட்டாவல் கடைசி வரை பிரஜா உரிமை கிடைக்காது என்ற பீதியையும் ஏற்படுத்தி விடுவார்கள். இதனால் அல்லோல கல்லோலப்படும் அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் எவ்வளவு பணம் கொடுத்தாவது பிரஜா உரிமை வாங்கிவிட வேண்டும் என அலைகின்றனர். இதை தொழிற்சங்க ஏஜண்டுகள் புரோக்கர் மூலம் காசாக்கி விடுகின்றனர்.'' என்று சொல்லி முடித்தார் போஸ்டர் சந்திரன்.ள

''ஐயா இதை எப்படித்தெளிவாக கூறுகின்றீர்கள்?.''

'சார் இங்கபாருங்க ஒருத்தருக்கு ஒருத்தர் காலை வாரி விடுவதில் கெட்டிக்காரர்கள். ஆறுமுகசாமியின் ஆட்களிடம் மலைச் சந்திரனின் ஆட்களும் மலைச் சந்திரனின் ஆட்களிடம் சாமியாரின் ஆட்களும் ஆள் வைத்து பணம் கொடுத்து போம்களை வாங்கி வைத்துள்ளனர்.''

''அப்போ இரண்டு பக்கத்தாருமே குட்டையை குழப்பி மீன் பிடிக்கின்றார்கள்'' என்றார் போஸ்டர் சந்திரன்.

''அதுசரி ஊவாவேலன் என்று எதையோ சொன்னீர்கள் அது என்ன? என்று போஸ்டர் காரரிடம் கேட்டோம்.

'' அதை சொலிலுரிங்களா? ஆடுபவர்கள் எல்லாம் ஆடிக்களைக்கட்டும் என்று அமைதியாக இருந்து விட்டு, இப்போது குடிவரவு குடிஅகல்வு திணைக்களம் வெளியிட்டுள்ள பிரஜா உரிமை பெறுவதற்கான சத்தியக் கடதாசியை வெளியிட்டு குட்டை உடைத்துவிட்டார். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் மயிரைப் பிய்த்துக் கொண்டு அலைகின்றனர்'' என்றார் சந்திரனார்.

''அப்படியானால் ஊவாவேலன் யாராவது போம் விற்றதாகக் கூறவில்லையா?'' என்று கிண்டினோம்

''இல்லை இல்லை. அந்த ஆள் நான் அவன் இல்லை என்பது போல் ''இது அந்த போம் இல்லை'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார். இங்கே குடுமி பிடி சண்டையாகிவிட்டது'' என்று கலகலப்பாகக் கூறினார் போஸ்டர் சந்திரன்.

## உதைப்பவர்களின் காலைப் பிடிப்பவர்கள் அணைப்பவர்களின் காலை வாருவதேன்

''யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே'' என்று சீரியஸாகவே கூறினார் இரத்தினக்கல் விளையும் பூமியில் தேவனுக்கே விசுவாசமாக இருந்த மூத்த அரசியல் வாதியும் கட்டடமேதையுமாக உயர்ந்த மனிதர்.

நீண்ட காலத்துக்குப் பின்பு இரத்தினம் விளையும் பூமிக்கு அவர் வருகைதந்திருந்தார் இரத்தினபுரி மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் தமிழ் சிங்கள ,இஸ்லாமிய சகோதர்கள் எந்தவித பேதமும் இன்றி ஒரே குரலில் ''அபே நாயக்கயாட ஜயவேவா''( எங்கள் தலைவர் வாழ்க) என்று கோஷமிட்டனர்.

கரும்பை சுற்றிய எறும்புகள் போல் மொய்த்துக் கொண்டனர்.

அப்போது அவசரமாக பஸ்ஸைப் பிடிக்க விரைந்த பேனா நண்பர், கூட்டத்தைகண்டு மெதுவாக எட்டிப் பார்த்தார். இதனை தேவனான வரும் கண்டு கொண்டார்.

''என்ன தொரே கண்டும் காணாதமாதிரி போறீங்க?

இப்ப நாங்க எம்.பியும் இல்லே கம்பியும் இல்லே.

அதனால நீங்களும் கணக்கு எடுக்க மாட்டீங்க போல.''

என்று கூறிக்கொண்டே நண்பரின் கைகளை அவர் பிடித்துக் கொண்டார்.

''ஐய்யய்யோ அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை.

உண்மையாகவே உங்களைக் காண வில்லை. ஊர் நண்பர்களை மறக்க முடியுமா?'' என்றார் பேனா நண்பர்.

அப்போது தேவனானவர் லெக்சர் அடிக்க ஆரம்பித்துவிட்டார். தோழர்களே! நீங்கள் எல்லாரும் மாணிக்க கல் வியாபாரம் பண்ணுறீங்க. ஒருத்தருக்கு ஒருத்தர் கைகொடுத்து உதவுறீங்க. உங்ககிட்ட தமிழர்கள் சிங்களவர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் கல்லை கொண்டு வந்து தாறாங்கள். தமிழன் கொண்டுவந்தகல் வேண்டாம், சிங்களவர்களிடம் கல்லுவாங்க மாட்டோம் என்று யாராவது சொல்லி இருக்கிறீர்களா? சொல்ல மாட்டீர்கள். ஏன் தெரியுமா? பணம், வருமானம், ஆதாயம் என்று வரும் போது உங்களுக்க ஜாதி தெரியாது, மதம் தெரியாது, சமயம் தெரியாது அப்படித் தானே!'' என்றார் தேவனானவர்.

''நாயக்க துமா. நாங்க அப்பவும் இப்பவும் எப்பவும் ஒன்னாத்தான் இருப்போம். சில நேரங்களில் காலியிலும் புத்தளத்திலும் களுத்துறையிலும் சிங்களச் சகோதரர்களும் நாங்களும் மோதிக் கொண்டது உண்மைதான். ஆனால், அதை அப்பவே மறந்து போனோம். இங்க பாருங்க ஆகக் கூடுதலா சிங்கள சகோதரங்க தான் இருக்கிறாங்கள் . ரெண்டாவதா தமிழ், முஸ்லிம்கள் இருக்கிறாங்கள் ஆனா நாங்க இங்க தனித் தனியா இருக்க முடியுமா? பெரும் பான்மையா இருக்கிறவங்களோடை ஒத்துப் போறதால தான் நிம்மதியா இருக்கோம்.'' என்றார். பிரபல வர்த்தகரும் பள்ளிவாசல் தர்மகர்த்தாவுமான மற்றுமொரு மாணிக்க கல் வியாபாரி.

ஹாஜியார் நிங்கள் சொல்றது தான் சரி . தென்பகுதியில் ஒற்றுமையா இருக்கிற நாம் வடக்கு—கிழக்கு பக்கம் போக வேண்டும்.

இங்க எப்படி பெரும் பான்மையான சிங்களவர்களுடம் இணைந்து வாழுற மாதிரி அங்கு பெரும் பான்மையாக இருக்கிற தமிழர்களுடன் ஏன் இணைந்து வாழக் கூடாது என்று கேட்போம்'' என்றார் வாசுவானவர்.

நாயக்கதுமா சொல்லுறதும் சரிதான். இங்க இப்படி வேறு மொழி பேசுகிறவங்க ஒன்றா இருக்க முடியும் என்றால் ஏன் அங்கு ஒரே மொழி பேசுறவங் ஒன்றா இருக்க முடியாது.?

அங்கே மட்டும் ஏன் தனிச்சுப் போக னும். என்று தேவனானவரின் கூற்றை ஆமோதித்தார் ஹாஜியார்.

''ஹாஜியாருக்கு விவரம் புரியுது. ஆனால், நம்பலயும் நம்ப மதத்தையும் வச்சி வியாபாரம் பண்ணுறவங்க தானே நம்பல ஒன்றா இருக்க விடாமாட்டோங்கிறாங்க?

என்னமோ ஹாஜியார் பண்டா ஐயா ஒரே மொழி என்றார். நாடு ரெண்டானது. ஒரே நாடு .இரண்டுமொழி என்றார். மூத்த தலைவரான கொல்வின் ஐயா அது இப்ப சரியாத் தானே ஆச்சு .அந்த மாதிரி ஒரே மொழி இரண்டுமதம் மூன்று பிரிவு என்று ஆக வேண்டுமா?

''வடக்கு— கிழக்கு தென்பகுதியில் வாழும் நம்மல பார்த்து மனம் திருந்தி ஒற்றுமையா அவுங்களும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்றார்'' வாசு.

''உண்மைதான் நாயக்கதுமா இங்க இருந்து நாம் எல்லோம் ஒரு பாதயாத்திரை போவம். அங்கே போய் எல்லோரும் ஒத்த மையா எங்களைப் போல் வாழ பழகிக் கொள்ளுங்கள் என்போம்'' என்று ஆமோதித்தார் ஹாஜியார்.

இந்த உரையாடல்களை அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்பேனா நண்பர்.

''என்ன சார் உங்களுக்கு ஆச்சரியமா இருக்கா? நாங்க எப்பவுமே இப்படித்தான். இங்கு நாங்க எப்படி ஒற்றுமையாக இருக்கிறோமென்று பார்த்துக்கிட்டீங்க தானே! இதை அப்படியே எழுதுங்க'' என்று பேனா நண்பருக்கு விடை கொடுத்தார் தேவனுக்[illegible] வாசுவானவர்.

என்ன ஆச்சரியம்! தாடியும் மீசையுமா[illegible] இந்த அரசியல் வாதி பேப்பர்களில் அறிக்[illegible] விடுவதோடு மட்டும் நின்று விடாமல் இன ஒற்றுமைக்காக இப்படி பாடுபடுகின்றாரே என்று வியத்து கொண்டே விடை பெற்றார் நண்பர்.

உண்மையிலேயே விசுவாசமானவர்களுக்கு எல்லாம் அவர் தேவன் தான்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.59 | | | | | | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | | | | | | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | | | | | | வணக்கம் தமிழகம் | காலைக்கதிர் |
| 7.30 | | | | | | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | களம் | ஆலோசனை நேரம் | சந்தனக்காற்று | இப்படிக்கு நீங்கள் | சங்கீத மேடை | குட்டி சுட்டி | திரைவானம் |
| 8.30 | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 9.00 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | பூஞ்சோலை | ஸ்டார் சமையல் |
| 9.30 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ஜீபூம்பா | நகைச்சுவை நேரம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | இளமை புதுமை | களம் | டொப் 10 மூவிஸ் |
| 10.30 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | ஆலோசனை நேரம் | ஹிட்ஸ் பைவ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | சினி சாய்ஸ் | சந்தனக்காற்று |
| 11.30 | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | மாங்கல்யம் | சினி சாய்ஸ் | நம்ம நேரம் |
| 12.00 | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | பி.பி.சி. நியூஸ் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 12.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | ரிலாக்ஸ்டைம் | ஹிட் லிஸ்ட் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | மை லிட்டில்போனி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மென் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | சின்னசின்ன ஆசைகள் | ஹிட் லிஸ்ட் |
| 5.00 | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | திரை இசை | வீக் என்ட் மூவி | சப்த ஸ்வரங்கள் |
| 5.30 | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | சின்னத்திரை | வீக் என்ட் மூவி | இப்படிக்கு நீங்கள் |
| 6.00—6.15 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | பிரடல்கள்/இளந்தளிர் | இளமை புதுமை | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | வீக் என்ட் மூவி | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | வீக் என்ட் மூவி | வேலன் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | வீக் என்ட் மூவி | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | நம்பிக்கை | நம்பிக்கை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நாயகர்களின் சென்னைச் சந்திப்பு! 23

1987 ஜூலை 26.

புதுடில்லி அசோக் ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் தங்கவைக்கப்பட்டிருந்த தலைவர் பிரபாகரனும் மதியுரைஞர் பாலசிங்கமும் ஏற்கனவே சென்னையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துவரப்பட்ட தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனைச் சந்திப்பதற்காக புதுடில்லியில் உள்ள தமிழக இல்லத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அதுதான் தமிழக முதல்வர், தமிழீழத் தலைவர் ஆகிய இரண்டு வரலாற்று நாயகர்களின் கடைசிச் சந்திப்பு.

இந்தச் சந்திப்பின் விவரங்களைப் பார்ப்பதற்கு முன்பு, இரண்டு நாட்களுக்கு முன்னர் — ஜூலை 24 ஆம் திகதி — இந்த இரண்டு வரலாற்று நாயகர்களுக்கும் இடையில் நடந்த முன்னைய சந்திப்பை 'ப்ளாஷ்—பாக்' ஆகக் கவனிப்பது அவசியம்.

அன்றையதினம் சுதுமலை அம்மன் கோயில் மைதானத்தில் இறங்கிய இந்திய விமானப்படையின் ஹெலிக்கொப்டரில் ஏறி, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்த தலைவர் பிரபாகரன், அவரது துணைவியர், இரு பிள்ளைகள், புலிகளின் பிரமுகர் யோகரத்தினம் யோகி, அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீபன் ஆகியோரை விமான நிலையத்தில் மதியுரைஞர் பாலசிங்கம், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம், புலிகளின் மற்றொரு பிரமுகரான கிட்டு ஆகியோர் வரவேற்றனர்.

ஹெலிக்கொப்டரிலிருந்து இறங்கி விமான நிலைய வரவேற்பு மண்டபத்துக்கு வந்த தலைவர் பிரபாவைப் பார்த்து, " என்ன தம்பி எல்லாவற்றுக்கும் சம்மதித்து விட்டீங்களாம். உண்மையா?" — என்று ஒரு கேள்வியை எழுப்பினார் பாலசிங்கம்.

வியப்போடு பார்த்தார் தலைவர் பிரபாகரன்.

" என்ன விசயம்? எதற்கு நாங்கள் சம்மதித்தோம்?" — என்று திருப்பிக் கேட்டார் அவர்.

" இல்லைத் தம்பி. ஒப்பந்தத்தை ஏற்கிறது எண்டு நீங்கள் முடிவு செய்து ஒப்புக்கொண்டு விட்டீர்களாம்"— என்றார் மதியுரைஞர் பாலா.

" என்ன ஒப்பந்தம்? யார் ஒப்புக்கொண்டது? எதற்கு சம்மதித்தோம்?" — என்று ஏக காலத்தில் சந்தேகக் கேள்விகள் பறந்து வந்தன — தலைவர் பிரபாகரனிடமிருந்து மட்டுமல்ல,யோகி மற்றும் திலீபன் ஆகியோரிடமிருந்தும்தான்.

" எனக்குத் தெரியும். இதைத்தான் நான் திரும்பத் திரும்ப பாலாவிடம் கூறினேன். தம்பியாவது இந்த ஒப்பந்தத்தை ஏற்பதாவது என்று நான் கூறவில்லையா?" — என்று மதியுரைஞரைப் பார்த்துக் கேட்டார் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம்.

" என்ன ஒப்பந்தம்? எதைப் பற்றிப் பேசுகின்றீர்கள்?" — என்று திரும்பவும் பாலாவிடம் கேட்கப்பட்டது.

மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கத் தொடங்கினார்.

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக — விடுதலைப் புலிகளின் ஆலோசனையைக் கலக்காமலேயே — இலங்கை அரசும், இந்திய அரசும் சேர்ந்து திட்டம் ஒன்றை வகுத்துள்ளன. அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உத்தேச இலங்கை— இந்திய ஒப்பந்தத்தில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ராஜீவும் ஒப்பமிடுவார்கள் என்று பேச்சடிபடுகின்றது" — என்றார் அவர்.

" கடந்த 24 மணித்தியாலத்துக்குள்தான் இது பற்றிய செய்தி சற்றுக் கசியத் தொடங்கியது. அது குறித்து தமிழீழத்தில் உங்களுக்குத் தகவல் தர நாங்கள் இங்கு (சென்னையில்) தயாரானபோது நீங்களே இங்கு புறப்பட்டு வருவதாக எங்களிடம் ( இந்திய அதிகாரிகள்) கூறினார்கள். ஒப்பந்தத்துக்கு உங்கள் தலைவர் பிரபாகரன் சம்மதித்து இசைவு தெரிவித்துவிட்டார் என்றும், அதை நேரில் உறுதிப்படுத்துவதற்காக அவரே யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டு வருகின்றார் என்றும், அவருடன் புதுடில்லி செல்லத் தயாராக இருங்கள் என்றும் எமக்குக் கடைசி நேரத்தில் கூறினார்கள். அதனால்தான் விழுந்தடித்துக் கொண்டு விமான நிலையத்துக்குப் புறப்பட்டு வந்தோம். ஆனால், இந்தியத் தரப்பின் இந்தக் கதைகளை அடேல் நம்பவில்லை. இந்தியத் தரப்பு பொய் கூறி, ஏதோ தந்திரம் செய்கின்றது என்று அடேல் தொடர்ந்து எச்சரித்து வந்தார். அது சரியாகத்தான் போய்விட்டது போலும்." — என்று விளக்கினார் மதியுரைஞர்.

அப்போதுதான் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தார் தலைவர் பிரபாகரன்.

ஈழத் தமிழ் மக்களின் பிரநிதிகளாக புலிகள் அமைப்பை அங்கீகரித்துள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அந்த அமைப்பின் தலைவருடன் பேச்சு நடத்த விரும்புகிறார் என்று தெரிவித்து — ஒரு வலைவிரித்து— அதனடிப்படையில் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அழைத்து வந்த இந்தியத்தரப்பின் உண்மை நோக்கம், இந்தியாவில் அவரை வைத்துக் கொண்டு இலங்கை — இந்திய ஒப்பந்தத்துக்கு இணங்குவதற்கு அவரைப் பணிய வைப்பதே என்பதை புலிகளின் தலைவர்கள் சந்தேகமின்றி உய்த்துணர்ந்து கொண்டனர்.



இந்தியத் தரையில் கால்பதித்தாகிவிட்டது. இனி வெறுமனே பிடிவாதம் பிடிப்பதால் மட்டும் — தாங்கள் கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக நிற்பதால் மட்டும் — காரியத்தைச் சாதித்துவிட முடியாது என்பதை அவர்கள் தங்களுக்குள்ளேயே உறுதிப்படுத்திக் கொண்டார்கள். நயவஞ்சகத் தந்திரத்தில் ஈடுபட்டிருக்கும் இந்திய அதிகார வர்க்கத்தைத் தந்திரத்தாலேயே வெல்ல வேண்டும். அதுதான் அந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான ஒரே வழிஎனவும் அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அதற்கு, முதலில் இந்தியாவில் தங்களின் தரப்பைப் பலப்படுத்தும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என முடிவு செய்தார் தலைவர் பிரபா.

அப்படி நினைத்ததும் அவரின் மனதில் பட்டவர் அவரது நெருங்கிய —ஆபத்பாந்தவரான — அன்பர் முதல்வர் எம்.ஜி.ஆர்.தான்.

விமான நிலையத்திலிருந்தபடியே தலைவர் எம்.ஜி.ஆரைச் சந்திக்க முதலில் ஏற்பாடு செய்யும்படி பணித்தார் பிரபாகரன்.

குழப்பமின்றி புலிகளின் தலைமையைப் புதுடில்லிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இந்திய அதிகாரிகள், அதற்காகத் தலைவரின் விருப்பத்துக்கு விட்டுப்பிடித்தனர். புதுடில்லிப் பயணத்தைச் சற்று தாமதிக்க இணங்கினர்.

முதலில் சென்னையில் உள்ள புலிகளின் அலுவலகத்துக்குத் தலைவரும் ஏனையோரும் சென்றனர். அங்கிருந்தபடி முதல்வர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாள்வதற்கு முதல்வர் எம்.ஜி.ஆருக்கு உதவிவரும் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இவ்விடயத்தில் இடம் பெற்றுவரும் — எடுக்கப்பட்டுவரும் — நடவடிக்கைகளை ஓரளவு அறிந்து வைத்திருந்தவர் பண்ருட்டி இராமச்சந்திரன். ஆனால், புலிகளின் தலைமையைச் சந்தித்தபோது தனக்கு ஒன்றும் தெரியாதவர் போலவும், தான் புதிதாக இவ்விடயங்களை புலிகள் தரப்பிலிருந்து அறிந்துகொள்பவர்போலவும் அவர் நடந்து கொண்டார்.

முதல்வர் எம்.ஜி.ஆர்., சுகவீனம் காரணமாக ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். எனினும், தலைவர் பிரபா சந்திக்க வேண்டும் என்று கேட்டதால், அவரை வெளியார் அதிகம் சந்தித்துப் பேசுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை, தலைவர் பிரபாவின் விடயத்தில் புறந்தள்ளப்பட்டது.

முதல்வரைச் சந்திக்க முதல்வரின் இராமாவரம் இல்லத்துக்கு புலிகளின் தலைவர் பிரபாகரன், அவரது துணைவியார், பிள்ளைகள், யோகி, திலீபன் எல்லோரும் புறப்பட்டனர்.

தலைவர் பிரபாகரன் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பின்றி ஏற்க ஒப்புக்கொண்டு விட்டார் என்று சென்னையில் இருந்த புலிகளின் தலைவர்களான கிட்டுவுக்கும், மதியுரைஞர் பாலசிங்கம் உட்பட ஏனையோருக்கும் 'கதை' விட்ட இந்திய அதிகாரிகள், அதே கதையை முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் தெரியப்படுத்தியிருக்கத் தவறவில்லை.

ஒப்பந்தத்தைத் தலைவர் பிரபாகரன் ஏற்றுவிட்டார் என்று கேள்விப்பட்டதும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கு மட்டில்லா மகிழ்ச்சி. ஒப்பந்தத்தில் என்ன கூறப்பட்டுள்ளது, அது ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்குமா என்பது குறித்தெல்லாம் அறியும் நோக்கம் எம்.ஜி.ஆருக்கு இல்லை. அப்படி விவரமாக அறிந்து கொள்ளும் உடல் நிலையும் அவருக்கு இருக்கவில்லை. சுகவீனத்தால் சோர்வுற்றுப் போயிருந்த அவருக்கு, தலைவர் பிரபாகரனுக்கு இணக்கமான தீர்வு ஒன்று எட்டப்பட்டுள்ளது என்ற தகவலே இனிப்பாக இருந்தது. ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்காத எந்த முடிவுக்கும் பிரபாகரன் இணங்கமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருந்தவர் எம்.ஜி.ஆர்., எனவே, இலங்கை — இந்திய ஒப்பந்தப்படியான தீர்வுக்கு பிரபாகரன் சம்மதித்துவிட்டார் என்று தகவல் கிடைத்ததும் ஈழத் தமிழர்கள் விரும்பும் தீர்வு அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது என்று அவர் நம்பினார். நோய்வாய்ப்பட்டிருந்த அவருக்கு அளவில்லா சந்தோஷம். தனது வாழ்நாளிலேயே ஈழத் தமிழர்களுக்கு நல்லதோர் தீர்வு கிட்டிவிட்டது என்ற நினைப்பே அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

இந்த மகிழ்ச்சியைப் பகிர்வதற்காக, தமிழகத்தில் வந்திறங்கியிருக்கும் தலைவர் பிரபாகரனை தன்னைச் சந்திக்கக் கூட்டிருவரும்படி அவர் கேட்டிருந்தார்.

***

இராமவாரம் தோட்டம். எம்.ஜி.ஆரின் இல்லத்தின் மேல்மாடி. தனது படுக்கை அறையில் நோய்ச் சிரமத்துக்கு மத்தியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார் முதல்வர்.

தலைவர் பிரபா குழுவினர் வந்திருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர்களை தனது அறைக்குக் கூட்டி வரும்படி கூறினார்.


அங்கு அறையில் கட்டிலில் அமர்ந்தபடி 'மேக்—அப்' ஏதுமின்றி மிகவும் வயோதிபத் தோற்றத்தில் காணப்பட்ட எம்.ஜி.ஆரைப் பார்த்ததும் தலைவர் பிரபாவுக்கும் ஏனையோருக்கும் அதிர்ச்சி. வழமையாக 'மேக்—அப்' இல்லாமல் சாதாரண உடற்தோற்றத்தில் யாரையும் எம்.ஜி.ஆர். சந்திப்பதில்லை. ஆனால், தலைவர் பிரபாகரனை அவசரமாகச் சந்திக்க வேண்டியிருந்ததால் அந்த விதி விலக்கப்பட்டது.

இலங்கைத் தமிழருக்கு ஏதோ விடிவு கிட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்ற தவறான வழி நடத்தலுக்கு உட்பட்டு, அந்த மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த முதல்வர் எம்.ஜி.ஆர்., தலைவர் பிரபாவைக் கண்டதும் — கை முஷ்டியைத் தூக்கிக் காட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

தலைவர் பிரபா முதல்வர் எம்.ஜி.ஆருக்கு திடீர் அதிர்ச்சியை ஏற்படுத்த விரும்பாது மௌனமாக அந்த மகிழ்வை ஏற்றுக் கொண்டார்.

பேச்சு ஆரம்பித்தது. ஆனால், எம்.ஜி.ஆர். நன்கு பேசும் உடல் நிலையில் இல்லை. அவரது செவிப்புலனும் கிரகிக்கும் ஆற்றலும் வழமைபோல் திறமையாக இருந்தன. ஆனால், திருப்பிப் பதில்கூற அவர் ரெம்பவும் சிரமப்பட்டார்.

தலைவர் பிரபாவும் ஏனையோரும் கூறுவதை அவர் ஆறுதலாக செவிமடுத்தார். பின்




னர், தழுதழுத்த குரலில் பதில் தருவார். விளக்கமின்றி வரும் அந்தப் பதிலை அருகிலிருக்கும் பண்ருட்டி இராமச்சந்திரன் ஏனையோருக்குத் தெளிவாக விளக்குவார். இப்படி பேச்சுத் தொடர்ந்தது.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் குறித்து எதுவுமே தெரிவிக்காமல் தாம் இந்தியாவுக்குக் கூட்டி வரப்பட்டிருக்கின்றார் என்ற தகவலை தலைவர் பிரபா கூறியதும் எம்.ஜி.ஆரின் முகம் இருண்டது. பண்ருட்டி இராமச்சந்திரனைக் கடுப்போடு பார்த்தார் அவர்.

பண்ருட்டி சமாளிக்க முயன்றார். "அப்படித்தான் இவங்க கூறுகிறாங்க. ஆனால், எங்களுக்கு வேறு விதமாகத்தான் அதிகாரிங்க தகவல் தந்திருக்காங்க" — என்று விளக்கினார் பண்ருட்டி.

"சரி. வந்திட்டீங்க. அவங்க கூட (மத்திய அரசுடன்) பேசுங்க. நான் திரும்பவும் உங்களைச் சந்திப்பேன். பேசுவேன்" — என்றார் எம்.ஜி.ஆர்.

தனது நம்பிக்கைக்குரிய தலைவர் பிரபாவை இந்தியத் தரப்பு ஏமாற்ற முயல்கிறது. அதன் மூலம் ஈழத் தமிழர்களின் எதிர்காலத்தையே பாழாக்கும் முயற்சி நடக்கின்றது என்று கருதி வெறுப்புற்றார் எம்.ஜி.ஆர்., அதன் பிரதிபலிப்பு அந்தச் சந்திப்பில் முற்றாக வெளிப்பட்டது.

எம்.ஜி.ஆரின் படுக்கை அறையில் 'ரி.வி.', 'டெக்' எல்லாம் இருந்தன. டெக்கிற்கு பக்கத்தில் புலிகளின் நிதர்சனம் மற்றும் அவர்களின் நடவடிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட வீடியோ கசெற்றுகளும் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை புலிகளின் பிரதிநிதிகள் ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

புலிகளின் சென்னை அலுவலகத்தின் ஊடாக அனுப்பப்படும் அந்தக் கசெற்றுகளை எம்.ஜி.ஆர். தவறாது பார்த்து தமிழீழக் களநிலைமைகளை ஆவலுடன் அறிந்து கொள்கின்றார் என்பதை அவர் மூலமே கேட்டறிந்து தலைவர் பிரபாவும் ஏனையோரும் புளங்காகிதம் அடையத் தவறவில்லை.

நோய்ப் பிணிக்கு மத்தியிலும் ஈழத்தமிழரின்பாலும் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டுதலில் நடக்கும் அவர்களின் விடுதலைப் போராட்டத்தின்பாலும் முதல்வருக்கு இருந்த ஈடுபாடு — தீவிர அக்கறை — அதிக சிரத்தை — மெய்சிலிர்க்க வைப்பது என்றால் மிகையாகாது.

மிக நீண்ட நேர சந்திப்புக்குப் பின்னர் மதியுரைஞர் பாலா, யோகி, திலீபன் ஆகியோர் உடன்வர புதுடில்லி புறப்பட்டார் தலைவர் பிரபாகரன்.

இந்தப் பின்னணியில்தான் —

இரண்டு நாட்கள் கழித்து கொழும்புக்கான இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றின் பிரசன்னத்தில் புதுடில்லி தமிழக இல்லத்தில் எம்.ஜி.ஆரைச் சந்தித்தனர் தலைவர் பிரபாகரனும் மதியுரைஞர் பாலசிங்கமும் யோகியும்.

எம்.ஜி.ஆர். முன்னிலையில் வாங்கிக் கட்டினார் டிக்ஸிற். அதனை அடுத்த வாரம் பார்ப்போமா?

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பாடம் நடத்தும் ஆசிரியர் ஒருவர், தினமும் உலகத்தில் நிலவி வரும் பல்வேறு கலாசாரங்கள் பற்றி மாணவிகளிடம் அறிமுகப்படுத்துவார். ஆனால், அறிமுகப்படுத்தும்போது மோசமான செக்ஸ் உதாரணங்களுடனேயே அறிமுகம் செய்வார்.

**ஜோக்**

இதைக்கண்ட மாணவிகள் ஒரு முடிவுக்கு வருகின்றனர். ''இனி மேல் அவர் செக்ஸ் பேசினால் நாம் வெளியே சென்றுவிட வேண்டியதுதான்'' என்று முடிவு செய்து கொண்டனர்.

அடுத்தநாள் ஆசிரியர் நுழைந்து ''இன்று நாம் பார்சிலோனா - ஸ்பெயின் ஆகிய நாடுகளில் வாழும் ஒரு இனத்தைப் பற்றிப் பார்ப்போம். இவர்களின் உடல் அமைப்பு அலாதியானது. அதாவது இவர்களில் ஆண்கள் மிகவும் வசீகரமானவர்கள். இவர்களது ஒவ்வொரு அங்க அசைவுகளும் பெண்களை சுண்டி இழுக்கும்'' என்றார்.




இடையில் மாணவிகள் எழுந்து வெளியே செல்லத் தொடங்கினர். அப்போ ஆசிரியர் அவர்களைப் பார்த்து ''எல்லோரும் எங்கே அவசரமாகப் போறீங்கள்? இங்கேயிருந்து ஸ்பெயினுக்கு போக இருந்த எல்லா விமானச் சேவைகளும் ரத்துச் செய்யப் பட்டு விட்டன'' என்றார்.

# நெட் சிரிப்பு




எங்கள் கல்வித் திட்டம் இப்படித்தான் இருக்கிறது... மாணவர்களாக படிப்பைத் தொடங்குகிறோம்.


ஆனால், படிப்பை முடித்து வெளியே வரும் போது வேறு உருவில் வருகிறோம்.

# நெட் கற்பனையில்



எமக்கு சில பாதணிகள் தேவைப் பட்டன. அவை பற்றிய விவரங்களை நெட்டில் பார்த்தபோது பறவைகளின் கால்களில் கண்ணிகளை அகற்றும் பாதணி கணினி மூலம் வடிவமைக்கப் பட்டிருந்தது.

# பிள்ளையார் வாகனம்



முன்னைய காலத்து பிள்ளையாருக்கு வாகனம் எலி. இன்றைய காலத்து பிள்ளையாருக்கும் வாகனம் எலிதான். ஆனால் அது வேறு, இது வேறு.


## சொற்சிலம்பம் போட்டி இல.88

சொற்சிலம்பம் 88 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜனவரி 18 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜனவரி 25 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ருவரி 01 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 86 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.88



## சொற்சிலம்பம் போட்டி இல.86

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 து | ப் | 2 பு | 3 த | ல் | ■ | 4 ப | 5 சு |
| ஞ் | ■ | 6 த | லை | ■ | 7 அ | தி | க |
| 8 சு | 9 வ | ர் | க் | 10 க | ம் | ■ | ம் |
| 11 த | டை | ■ | 12 க | ரு | மா | 13 தி | ■ |
| ல் | ■ | 14 உ | ன | து | ■ | 15 வா | 16 கு |
| ■ | 17 த | ட | ம் | ■ | 18 தி | ல் | லை |
| 19 வி | ச | ம் | ■ | 20 ஏ | ரி | ■ | த |
| 21 த | ம் | பு | ரா | ■ | 22 பு | ய | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல.88

**இடமிருந்து வலம்**

1. (காலக்)கெடு.
5. பாவம் செய்தவன்.
7. தாண்டி.
8. சமுத்திரம்/சாகரம்.
9. தடுமாறல்/கொன்னையாகப் பேசுதல்.
11. அரைவாசி.
12. கறுப்பு நிறத் தன்மையைக் குறிப்பது.
14. வாணிபம்/வர்த்தகம்.
16. ஒரு கீரைவகை.
18. மகளிர் கூத்து வகை.
19. கணவன்—மனைவி.
21. ரஜி..ரியின் கடைசிப்படம்.
23. சந்திரன்.
24. தலையில் தொல்லை தருவது.

**மேலிருந்து கீழ்**

1. நான் எனும் செருக்கு.
2. ஒரு திசையின் சுருக்கம்.
3. இந்தியாவின் தேசத் தந்தை.
4. நான்கு தெரு கூடும் இடம்.
5. கவிதை/பாடப்படுவது.
6. முற்கால போராயுதம்.
8. பலதும் கலந்து வருவது/கூட்டம்/மாலை.
10. சிஷ்யனுக்குத் தலைவர்.
13. வெளிச்சம் தருவது.
15. சீனி தயாரிக்கப் பயன்படும் தாவரம்.
17. உணவுக் கால்வாயில் நடப்பது.
16. பாய்.
19. மறைவில் அடிப்பது/தங்களது.
20. ..ன்றுக்கா.. உயிர் கொடுப்பது.
22. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட..கழி நிலை

## சொற்சிலம்பம்-85 பரிசு பெறுவோர்.

1. கே. அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
யாழ்ப்பாணம்.
2. எஸ். கேமானந்தினி,
பாளையடி கோவில் வீதி,
காரைதீவு.
3. சு.துவாரகி,
இல.170, திருநகர்,
கிளிநொச்சி.


**பாராட்டுப் பெறுவோர்**

1. எம். துஸ்யந்தன்,
33/28, சிவபுரி,
திருகோணமலை.
2. செல்வி.தெடிலிசியா,
30, கொழும்பு-13,
3. வை. சிவப்பிரகாசம்,
குளக்கரை லேன், கொக்குவில்.
4. க.கமால்தீன்,
புன்னக்குடா வீதி,
ஏறாவூர்-03.
5. யோசப் டொரிங்டன் ஸ்பெக்,
59/1, லேடி மெனிங் டிறைவ்,
மட்டக்களப்பு.
6. திருமதி.ரீ. மரியநாதன்,
இல.21, கிறேஞ் டெரஸ்,
பண்டாரவளை.
7. சு.லக்சி,
பலாலி வீதி,
கோண்டாவில்.
8. ஆர். பாலகிருஷ்ணன்,
218, கெந்தக்கொல்ல, மாத்தளை.
9. க.வத்சலா, வட்டு இந்து,
சித்தன்கேணி.
10. வே.குமாரசாமி,
பரமாந்தர் வளவு, கரவெட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த கட்டடத்தில் சுதந்திர கோபுரம்




நியூயோர்க் நகரில் உலக வர்த்தக நிலையம் தலைநிமிர்ந்து காட்சியளித்த இடம் மூழியாகக் கிடக்கிறது இன்று. அந்த சிதைந்த கட்டடத்தில் சுதந்திரக் கோபுரம் ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 1,776 அடி உயரமான உத்தேச சுதந்திர கோபுரம் நிர்மாணிக்கப்பட்டால் அது எப்படி காட்சி தரும் என்று கற்பனை வடிவில் சித்திரிக்கிறது இந்தப் படம். இந்தக் கோபுரமே உலகிலேயே பெரிய கட்டடமாக இருக்கும்.



விதம் விதமாக ஆடை அணிவதென்றால் பெண்களுக்கு மிகவும் ஆசைதான். அதிலும், இனிப்பான ஆடை அணிவதற்கு எந்தப் பெண்களுக்குத்தான் விருப்பம் வராது?. நியூயோர்க் நகரில் அண்மையில் ''சொக்லட்'' கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இவ்வாறு சொக்லட் ஆடை அணிந்து உல்லாசமாகப் பவனி வந்த அழகி எல்லோரையும் கலக்கிவிட்டார்.

# சொக்லட் ஆடையுடன் உல்லாச பவனி!

# சாதனை புரிந்து வரும் ''ரோபோ'' விமானம்



ஜப்பானிய சீக்கோ எப்சன் நிறுவனம் சின்னஞ்சிறிய ''ரோபோ'' விமானம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. 8.9 கிராம் எடையுள்ள இந்தச் சுயமாக இயங்கும் ''ரோபோ'' விமானம் டோக்கியோவில் நடைபெற்ற ''ரோபோ'' பொருட்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

உலகிலேயே இயங்கும் மிகச் சிறிய பறக்கும் ''ரோபோ'' இதுவாகும்.

## மசாலா மிக்ஸ்

இந்தியாவின் மும்பாய் நகரம் நாகரிகத்தில் மிகவும் உச்சத்தில் இருக்கிறது. மேற்குலக நாகரிகத்தின் கேந்திரமாகவும் மும்பாய் சாதனை படைத்திருக்கிறது. அண்மையில் மும்பையில் நடைபெற்ற அழகுக் கண்காட்சியில் மேல்நாட்டு அழகிகளையும் தூக்கி எறிந்துவிடும் அளவுக்கு இவ்வாறு கவர்ச்சி ஆடை அணிந்து வந்தார் இந்த மும்பாய் அழகி.



# மேற்கு நாகரிகத்தின் கேந்திரம் ''மும்பாய்''



இயந்திர மனிதனை விதம் விதமாகப் படைக்கும் ஜப்பானியர்கள் உலக மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தி வருகிறார்கள். அண்மையில் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர மனிதன் பந்தாடுவதிலும் திறமைசாலி. இயந்திரமனிதன் வீசும் பந்து பறக்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# இயந்திர மனிதனின் பந்து பறக்கிறது!

# ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசெம்பர் 21, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் பாக்கியராஜினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

1.கி.அகிலன், மட்டக்களப்பு. 2. சி.கிருபாகரன், நல்லூர், யாழ்ப்பாணம். 3. எம்.முஹமட் ரபீக், 137/2, காலி வீதி, கல்கிசை. 4.பா.கபிலன், திருநகர், கிளிநொச்சி. 5. எம். மோகனகுமார்,சபாபதிப்பிள்ளை வீதி ,சுன்னாகம்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

தமிழ் ரசிகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டவரும், தற்போது வாய்ப்புக்கள் ஏதும் அற்று இருக்கும் நடிகை. இவர் தமிழ் மொழியில் இரண்டு படங்களில்மட்டும் நடித்துள்ளார்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கே தோன்றும் உதயம்

அந்த மங்கலான வெளிச்சத்தில் ஜோனின் தோள் மீது கைகளைப் போட்டுக் கொண்டு நடனமாடிக்கொண்டிருந்தாள் ரோசி. பக்கத்திலே லூசி—ஜக்சன், ஜெசீலா — விட்டர், இவர்களுடன் இலங்கையர்களான திலீபன், பிரபா, சற்குரு, மாணிக்கம், பரம், கணேஸ், சுரேஸ், சந்திரக்குமார், பரமேஸ் ஆகியோரும் அந்தப் பாட்டியிலே பங்குபற்றிக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் எல்லாம் அசோக்கின் நண்பர்கள். அசோக் இலங்கையில் இருந்து ஜேர்மனி வந்து, அகதி அந்தஸ்து பெற்று, இன்று குடியுரிமையும் பெற்றுவிட்டான். இன்று அவனுடைய பிறந்தநாளை முன்னிட்டு இந்தச்சிறிய பார்ட்டி ஏற்பாடாகி இருந்தது. ஜேர்மனியின் பிறீமன் நகரில் இருக்கும் அந்த சிறிய கம்பனியில் அவன் ஒரு பட வரைஞன். அங்கு ஒரு சில அமெரிக்கர்கள் தவிர அனைவரும் ஜேர்மனியர் தான். ஒரு சில இலங்கையர்களும் வேலை செய்தார்கள். அந்தப் பார்ட்டி நிறைவு பெறும் நேரம் அவனை நோக்கி வந்தாள் ரோசி. ''வெறிநைஸ் பார்ட்டி'' என்று கூறி அவனுடைய கன்னத்தில் ஒரு முத்தத்தையும் பதித்துவிட்டுப் போய்விட்டாள்.

ரோசி ஒரு அமெரிக்கப் பெண். ஆங்கிலத்தில் தான் உரையாடுவாள். சிகப்பு நிறம். செம்படைக் கூந்தல். நீல நிறக் கண்கள். சிவந்த உதடுகள். ஒல்லி இடை, ஊடறுக்கும் பார்வை— இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அவளின் தாயும் தகப்பனும் விவாகரத்துப் பெற்று வெவ்வேறு திசைகளில் மறுமணம் செய்துகொண்டார்கள். அவளுக்கு அவர்கள் மீதும், ஏன் கல்யாணத்தின் மீதே வெறுப்பாக இருந்தது. தனது பெற்றோரைத் தூக்கி எறிந்துவிட்டு ஜேர்மனிக்கு வந்துவிட்டாள். ஆனால் அசோக்குடன் பழகிய பின்பு அவன் மீது அவளுக்கு ஓர் ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. அவனுடைய குடும்பத்தை, வாழ்க்கை முறைகளை, கலாசாரப் பாரம்பரியங்களை எல்லாம் கேட்டு அறிந்து வைத்திருந்தாள்.

அசோக் அப்படி ஒன்றும் வசதியான குடும்பத்தில் பிறந்தவன் அல்லன். குடி இருந்த காணியை ஈடு வைத்து நாற்பதினாயிரம் காசையும் கொண்டு புறப்பட்டவன் தான். ஏஜென்சியிடம் கொடுத்து கொழும்பு லொட்சுகளில் அலைந்தது, ரஷ்யாவரை போய்விட்டு திரும்பி வந்தது, அதன்பிறகு மடத்துவாசல் பிள்ளையாரின் கருணையினால் ஜேர்மனி வந்து சேர்ந்தான். இரண்டு வருடம் வேலை இல்லை. அகதிக் காசில் காலத்தை ஓட்டி, அதன் பிறகு ஒருமாதிரி வேலைசெய்து, உழைத்து, கடன் அடைத்து, வீடு கட்டி, காணி வாங்கி இன்று அவனது குடும்பம் மிகவும் வசதியான குடும்பமாக இருக்கிறது. இந்த வசதியான வாழ்க்கை அவனது ஒவ்வொரு செயலையும் மாற்றித் தான் இருந்தது. அம்மா அடிக்கடி கடிதம் போடுவாள். ''தம்பி இலங்கை வந்து மாமாவின் மகளை கல்யாணம் செய்துகொண்டு போ...'' என்று. ஆனால் அவனுக்கு இதில் அவ்வளவாய் விருப்பம் இல்லை. அதற்குக் காரணம் ரோசி.

இந்த வெள்ளையர்கள் எல்லாம் உலகத்தை அனுபவிக்கப் பிறந்தவர்கள். அவர்களது கட்டுப்பாடற்ற, சுதந்திரமான வாழ்க்கை முறை அவனுக்குப்பிடித்திருந்தது. விரும்பியபோது விரும்பியவர்களைத் திருமணம் செய்யக் கூடிய சுதந்திரம். அதே போல், பிடிக்காதபோது பிரிந்து போகக் கூடிய சுதந்திரம். இவர்களும் சந்தோசமாகத் தானே வாழ்கின்றார்கள்? கடைசிவரைக்கும் மனைவி, பிள்ளைகுட்டி, என்று மாடாய் உழைத்து தேய்ந்து போகக்கூடிய அடிப்படை வாதம் இங்கு இல்லை.

ஒவ்வொரு காலகட்டங்களில் ஒவ்வொருவரைப் பிடிப்பதும் பிடிக்காமல் விடுவதும் அந்தந்த மனோநிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொள்வதும் அவர்களது இயல்பு. ஆனால் எங்களுக்கு ஒருத்தியைக் கல்யாணம் முடித்தால் வாழ்க்கை பூராக குப்பை கொட்டிக்கொண்டு அவளோடையே மாரடிக்க வேண்டியதுதான். ''சீ... இதென்ன வாழ்க்கைமுறை? போதாக்குறைக்கு அம்மாவும் அடிக்கடி ஊருக்கு வந்து நந்தினியை கல்யாணம் முடித்துக்கொண்டு போ தம்பி என்று கடிதம் போடுவாள். அவளுடைய மாமன் மகள் தான் நந்தினி.

நந்தினி அவனோடு சிறு வயது முதல் படித்தவள். விளையாடியவள். சண்டை பிடித்தவள். ''நீ அவனுக்குத் தான்'' என்று பெரியவர்கள் உணர்த்தி அவளை வளர்த்திருந்தார்கள். அதனால் அவளும் அசோக்கினுடைய வரவை எதிர்பார்த்து இருந்தாள். மேற்குலக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள நம்மவர்கள் இப்போது அடிக்கடி ஊருக்கு வந்துபோகின்றார்களே? இந்த யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை எல்லாம் ஏற்பட்டதால் வெளி நாடுகளில் உள்ளவர்கள் எல்லாம் ஊருக்கு வருவதற்கு இது தான் தக்க தருணம். ஆனால் இந்த அசோக் மட்டும் வரவில்லை.ஏன்?



இணுவில் உத்திரன்

''ஆசை என்பது நிச்சயமாக ஒவ்வொருவருக்குள்ளும்இருக்க வேண்டியது தான். ஆனால் அது பேராசையாக இருக்காவிட்டால் சரி. சிலர் சின்னச் சின்ன ஆசைகளைக் கூட பேராசை என்று சொல்லிவிடுகிறார்கள். கிளியோப்பெற்றாவை நினைத்து ஏங்கினால் அது பேராசை. நம்ம ஊர் சுந்தரியை நினைத்தால் அது எப்படி பேராசையாக முடியும்? ஒருவரோடு சிரித்து, பேசி, உறவாட நினைப்பதெல்லாம் ஒரு சாதாரண ஆசை தான். ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் நட்புணர்வுகளை நாம் மதிக்க வேண்டும். ரோசியைப் பொறுத்த வரை அவளுடைய ஆசை எல்லாம் நிம்மதியான, இயல்பான ஒரு வாழ்க்கையைத்தான் எதிர்பார்த்திருந்தது. தனது இடது கையால் அசோக்கினுடைய இடுப்பை வளைத்தபடி நடந்துகொண்டிருந்தாள் ரோசி.

''அசோக் இந்தச் சூரியன் கூட கிழக்குத் திசையில் இருந்து உதயமாகிறதுக்கு நிறையக் காரணம் இருக்கு.''

''என்ன காரணம்''

''உங்களின்ர நாடுகளில தான் அன்பு, பாசம், அரவணைப்பு, தியாகம் போன்ற நல்ல குணங்களை உடைய மனிதர்கள் வாழ்கின்றார்கள்'' என்று கூறிச்சிரித்தாள் ரோசி. அதுவருத்தம் கலந்த சிரிப்பு.

''ஏன் ரோசி இந்த பாசம், நேசம், எல்லாம் உங்களின்ர நாடுகளில கிடையாதா?''

''இல்லை அசோக், தன்ர சுகங்களை தியாகம் செய்து தன்னுடைய குழந்தைகளுக்காகவே வாழ்கிற தாய்மை! என்ன தான் சண்டை சச்சரவுகள் இருந்தாலும் வாழ்க்கை பூராக பிரியாத திருமண பந்தம். மற்றவர்களுக்காகவே வாழ்கிற தியாக உறவுகள் எல்லாம் அங்கை தான் இருக்கு. இங்க அப்படி இல்லை அசோக். தங்களின்ர சுக துக்கத்துக்காக பிள்ளை குட்டிகளை நடுத்தெருவில் விட்டுவிட்டுப்போறவர்கள் தான் அனேகம்.'' என்று கூறும்போது ரோசியின் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது.

அசோக் அவளது தோள்கள் மீது தனது இரண்டு கைகளையும் மாலையாகப் போட்டுக்கொண்டான். அசோக் ஐ லவ் யூ அசோக், ஐ லவ் யூ அசோக் நீங்கள் என்னை திருமணம் செய்வீங்களா? நானும் நீங்களும் காலம் பூராவும் இணைந்து வாழ்வோமா?'' நேரடியாகவே கேட்டுவிட்டாள் ரோசி.

இந்த விடயங்களில் எல்லாம் அவர்களுக்குள் ஒளிவு மறைவு கிடையாது. அவனுக்கு உள்ளுக்குள் சந்தோசமாக இருந்தது. ஆனாலும் ஏதோ ஒருவித நெருடல். பயம். அது ஊராரை நினைத்த பயம்.

''இதோ பார் ரோசி. திருமணம் எல்லாம் எதற்கு? திருமணம் செய்து கொண்டால் தான் விவாகரத்து வரும். இங்கை எத்தனையோ பேர் திருமணம் ஆகாமல் ஒன்றாய் வாழ்கிறார்கள் தானே? நாமும் அப்படி வாழ்ந்தால் என்ன? நமக்கு விரும்பிய போது பிரிந்து விட முடியும். இந்த சுதந்திரம் தான் எனக்கு இங்கை மிகவும் பிடிச்சிருக்கு. கட்டுப்பாடில்லாத சுதந்திரமான வாழ்க்கை இங்கு தான் இருக்கு ரோசி. நானும் உன்னை காதலிக்கிறன், நீயும் என்னைக் காதலிக்கிறாய், இப்படியே வாழ்ந்திடுவம்'' கேட்டான் அசோக்.

அவளுடைய முகம் மாறியது. ஏதோ ஒரு வித வெறுப்பு தோன்றி மறைந்தது. எதுவும் கூறாமல் அப்படியே அவனை விட்டுவிட்டு போய்க்கொண்டிருந்தாள் ரோசி. ''ரோசி... ரோசி..!'' அவள் திரும்பிப் பார்க்கவே இல்லை.

அதன் பிறகு ரோசியை ஒரு ஐந்து மாத காலமாக எங்குமே காண முடியவில்லை. அன்று கோபத்தோடு போனவள் தான் அவள். அமெரிக்காவுக்கு போய்விட்டதாக சிலர் கூறினார்கள்.


அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. இரவு உணவு விடுதி ஒன்றுக்கு அசோக் சென்றபோது அங்கே எதேட்சையாக ரோசியைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு மேசைக்கு முன்னால் இருந்து ரோசி பியர் குடித்துக்கொண்டிருந்தாள். அருகே ஒரு கறுப்பு இனத்தவன் இருந்தான். அசோக்கைக் கண்டதும் ரோசியின் முகம் மலர்ந்தது. ''அசோக் எப்படியிருக்கிறாய் நான் உனக்கு கூறாமல் அமெரிக்கா போனதுக்கு முதலில் என்னை மன்னிச்சுக் கொள். இவர் அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட். இவரும் நானும் திருமணம் செய்வதாக இருக்கிறம்.'' என்று அவள் கூறியதும் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. கோபமாகவும் இருந்தது. ''ரோசி...யூ மீன்...'' கத்தினான்.

''யெஸ் அசோக். நீ கோபப்படுவதில் அர்த்தமேயில்லை. இந்த ஜென்மம் பூராவும் என் கூட வாழ்க்கையில பங்குகொள்ள டேவிட் தயாராக இருக்கிறான். இவன் என்ர உணர்ச்சிகளை நன்றாகவே புரிஞ்சு வைச்சிருக்கிறான். அதுவே எனக்குப் போதும். உன்னைக் கூட நான் நேசிச்சேன். அதிகமாக நேசிச்சேன் அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. உங்களின்ர நாட்டில இருக்கிற கலாசாரம், கட்டுப்பாடான வாழ்க்கைமுறை, ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற அந்தப் புனிதமான திருமணஉறவு, வாழ்க்கை பூராகவும் ஒருத்தரை ஒருவர் விட்டுவிலகாத திருமண பந்தம். இவை தான் உன்னை விரும்புறதுக்குக் காரணம். ஆனால் நீ இந்த கொஞ்ச நாளிலேயே உங்கள் நாட்டின் பாரம்பரியங்களை மறந்திட்டாய். எங்களின்ர நாகரீகத்திற்கு மாறிவிட்டாய். உன்னில கறை இருக்கு. உன்ர அன்பில சந்தேகம் இருக்கு...

ஆனால், என்னை போன்று வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு; வாழ்க்கையில் சுக துக்கங்களில் பங்குபோட ஒரு பாட்னர் தேவை. எனக்கு டேவிட்டை பிடிச்சிருக்கு. நான் வேற ஆண்களோட பழகுகிற போது அவர் அடைகிற கோபத்தை எனக்கு பிடிச்சிருக்கு. அசோக், உன்ர மனத்தை புண்படுத்துறதுக்காக இதை நான் சொல்லவில்லை. எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. அந்த சந்தோசத்தை உன்கூட பகிர்ந்துகொள்ள வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில தான் சொல்லுறன். இப்ப கூட நீ என்ர நண்பன் தான். வாழ்க்கையை ஆரம்பிக்க முன்னரே பிரிவைப்பற்றி நீ பேசியது எனக்குப் பிடிக்கவேயில்லை.நம்பிக்கை தானே வாழ்க்கை. இந்த ஜென்மம் பூராவும் டேவிட் எனக்கு ஒரு நல்ல துணைவனாய் இருப்பான்....''என்று ரோசி பேசி முடித்தபோது அசோக் மிகவும் குறுகிப் போனான்.

''ரோசி என்னை மன்னிச்சிடு.'' என்று அவன் கூறிய போது பரவாயில்லை அசோக். நீ உன்ர நாட்டில உனக்கு நிச்சயம் செய்த பெண்ணுடன் நீண்ட காலம் ஒன்றாய் வாழ வேண்டும். எனக்காக இதை நீ செய்வாயா? என்று அவள் கேட்ட போது அவனுடைய கண்கள் கலங்கின.ஒரு தடவை நந்தினியின் முகம் அவன் மனசில் வந்து போனது.

(யாவும் கற்பனை)



''உனது அலுவலகத்தில் கடமையாற்றும் ஒருத்தியை காதலித்து கல்யாணம் செய்தாயே...! வாழ்க்கை எப்படிப் போகிறது?''

''எனது சம்பளப் பணத்தில் பத்து ரூபா கூட பதுக்க முடியவில்லையே!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# சனி வருகிறது!

புத்தாண்டு விருந்தாளியாக ஒரு கோள் எமது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது!

அது தான் சனிக் கோள்!

சனி என்றதுமே எல்லோருக்கும் ஒரு கிலி பிறக்கும்! ஆனால், நாம் வரவேற்றாலும் வரவேற்காவிட்டாலும், சனி எம்முடைய புத்தாண்டு விருந்தாளியாக வந்து கொண்டிருக்கிறது!!

டிசம்பர் 31 ஆம் திகதி பூமிக்கு மிக அருகில் சனி இருக்கும்

### எட்டாத தூரம்

ஏழரைச் சனி, சனி திசை என்றால் நாம் பயப்படுகிறோம். ஆனால், பூமியிலிருந்து 102 கோடி கிலோமிட்டர் தூரத்தில் சனி இருக்கிறது!

சனியைக் கரிய நிறம் என்பார்கள். இதனால் ''கரியன்'' என்று கூட இதற்கு பெயர் உண்டு. அதனால் தான் கறுப்பு நிறக் காக்கையை சனியின் வாகனம் ஆக்கினார்கள். ஆனால் உண்மையில் சனி மஞ்சள் நிறம்! சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் வியாழனுக்கு அடுத்த பெரிய கோள் சனி. அதன் குறுக்களவு 1 இலட்சத்து 10 ஆயிரம் கிலோ மிட்டர்!

பூமியை விட சனி. பெரியது என்றாலும், எடை குறைந்தது. சனியைச் சுற்றி மூன்று வளையங்கள் உள்ளன. கோடான கோடி ஆண்டுக்கு முன்.



சனியை நெருங்கிய ஒரு சிறுகோள், நொறுங்கித் தூளாகி, இப்படி வளையங்களாக சுற்றிக் கொண்டிருக்கிறது!

சனியும் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. தன்னைத்தானே ஒருமுறை சுற்ற 10 மணி 15 நிமிடம் ஆகும். சூரியனை ஒரு முறை சுற்ற 29.42 ஆண்டுகள் ஆகும். அவ்வளவு மெதுவாகச் சுற்றுகிறது. இதனால் சனியை ''முடவன்'' என்பார்கள்.

### நெருங்குகிறது!

சூரியனைச் சுற்றும் ஒவ்வொரு முறையும் பூமிக்கு மிக அருகில் சனி வருவது வழக்கம்.

அதாவது30 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூமிக்கு அருகில் சனி வரும். இந்த ஆண்டும் அப்படி வர இருக்கிறது.

டிசெம்பர் 10 ஆம் திகதியே சனி பூமியை நெருங்கத் தொடங்கி விட்டது. டிசெம்பர் 31 ஆம் திகதி மிக நெருக்கமாக இருக்கும்.

### கண்ணால் பார்க்கலாம்!

அப்போது சனியை பெறும் கண்ணால் பார்க்க முடியும். அப்பொழுது சனி பொன் போல மின்னும்!

இரவு 8.30 மணி அளவில் வடகிழக்கு திசையில் சந்திரனுக்குக் கீழாக வலப்புறம் சனி தோன்றும். சந்திரனுடன் கூடவே உச்சி வானத்துக்கு வந்து, சூரிய உதயத்துக்கு முன் அதிகாலையில் மறைந்துவிடும்.

இப்போதே நாம் சனியைப் பார்க்க முடியும். ஆனால், டிசம்பர் 31 ஆம்திகதி இரவு, அதிக ஒளியுடன் 'பளிச்' என்று அது தெரியும்.

### 30 ஆண்டு கழித்து

அதன் பின் சனி கொஞ்சம் கொஞ்சமாக விலகிப் போகும். 2018 ஆம் ஆணடு ஜூன் மாதத்தில் வெகு தூரம் — 84 கோடி கி.மீ. தூரம் — விலகிப்போய் விடும்.

செவ்வாய்க் கோள் இந்த ஆண்டு தான் பூமிக்கு மிக அருகில் வந்தது. பார்த்தோம். அடுத்து இப்போது சனி பூமிக்கு அருகில் வருகிறது.

### விண்வெளிக் கப்பல்

சனிக்கோள் பற்றி ஆராய்ச்சி நடத்த அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ஒரு விண்வெளிக்கப்பலை அனுப்பி இருக்கிறார்கள். அதற்கு ''காசினி'' என்று பெயர். 2004 இல் ''காசினி'' விண்கலம் சனிக்கோளை அடையும்.

அந்த ''காசினி''யில் உள்ள 'கமெரா'எடுத்து அனுப்பிய படம் தான், இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது சனியிலிருந்து 11கோடி கி.மீ.தூரத்திலிருந்து, செப்டெம்பர் 9 ஆம் திகதி எடுக்கப்பட்ட படம்.

சனியில் உயிர் வளி (பிராணவாயு) இல்லை. எனவே, அங்கே உயிர்கள் இருக்க வாய்ப்பில்லை.

# கவிதைப் பூங்கா

## உலகம் இனிது

கதிரவன் கீழ்வான தங்கமுலாம்பூசும் நேரம்
மஞ்சள் நீர் பகலோன் தெளிக்கும் இனிய வைகறைப் பொழுது
மங்கையர் கை வளை குலுங்க கோலமிடும் அதிகாலை
இனிது இனிது உலகம் இனிது

அந்திமாலை காதலுக்கு வரவேற்பு வளையம் தரும் நேரம்
அதீத கனவுகளும் கற்பனைகளும் உதயமாகும் வேளை
அரும்புகள் பகலெல்லாம் போதாகி மலரும் நேரமே அந்தி
இனிது இனிது உலகம் இனிது

பொன்மாலைப் பொழுது இனிய பொன்மாலைப் பொழுது
செங்கதிரோனின் செந்நிறக் கிரணங்கள் ஒளி வீசும் நேரம்
செங்கடல் என நீலக் கடல் தோன்றும் எழில் வண்ணம்
இனிது இனிது உலகம் இனிது

மின்னும் தாரகைகள் ஒளி வீசும் இரவு நேரம்
பிறை நிலவு முகிலால் முக்காடு போடும் நேரம்
பகலெல்லாம் உழைத்தோர் உறங்கிடும் நேரம்
இனிது இனிது உலகம் இனிது.

ஆர்.பாலேந்திரா
வவுனியா.

## கல்லறையிலும் உனக்காக....!

வீதியில் செல்லும் போது
தானேயடா திருடா நீ — என்
இதயத்தைத் திருடிச் சென்றாய்
ஒரு நாள் வீதியில்
என்னை மறித்து — நீ
என்னை விரும்புவதாகவும் — என்
விருப்பத்தை யும் கேட்டது மட்டும்
இல்லாது தொலைபேசியில் என்னை
உன்னுடன் தொடர்பு கொள்ளும்படி
கூறியது நீ தானேயடா...?
இன்று என்னைக் காணும் போது
தெரியாத வண்ணம் நிற்கிறாயே...!
எதுவித காரணமும் இன்றி
என்னை மறந்து விடு என
ஒரு வார்த்தையால் கொல்கிறாயே...!
உன்னால் எனக்குள் இன்று
காதல் வைரஸ் தொடர்கிறதே....!
என் மீது உனக்கும் காதல்
இருப்பதை நான் அறிவேனடா...!
நித்தம் உன் நினைவால் — நான்
தடுமாறி நிற்கிறேனடா....!
உனக்கு காதல் வந்தால்
சொல்லியனுப்பு நான் உயிரோடு
இருந்தால் வருகிறேன் — இல்லையேல்
கல்லறையிலும் உனக்காகவே — என்றும்
காத்து இருப்பேன்...!

சி.கீதா
கொக்குவில்.

## தோழியரே!

விடியலை வேண்டி
விழித்திருந்த தாமரை
கதிரவனைக் கண்டு
இதழ்கள் விரித்து
புன்னகைக்கின்றது
சூரியனாய் தலைவன்
ஈழமதில் எம்முடன்
வழிகாட்டி நிற்கவே!
தோழியரே நீவிர்
அடிமை விலங்கை
உடைத்தெறிந்து விட்டு,
வீறு கொண்டெழும்.
மங்கைய ரென்றால்
மண்டியிடும் கூட்டம்
இல்லையென்று
உலகெங்கும்
பறைசாற்றிட
எழுவீர் என் தோழியரே!

என்.ஈசன்

## தென்றலே தூதுபோ!

தென்றலே தூதுபோ
எனது காதலனிடம் அல்ல
எனது காதலை சொல்ல
நான் அஞ்சும் எனது அப்பாவிடம்
உனது மகள் ஒருவனை உயிருக் குயிராக
காதலிக்கிறாள் — என
பக்குவமாக எடுத்துச் சொல்லு
எனது அப்பாவின் கரங்கள்
என்னை நோக்கி நீளமுன்
உன் அன்பு வார்த்தையால்
அவரின் கரத்துக்கு விலங்கிடு
தென்றலே இப் பிறப்பில் — அல்ல
மறு பிறப்பிலும் உனக்கு
நன்றியுடையவளாக இருப்பேன்
தென்றலே தூதுபோ.

ஏ.சர்வன்
புதுக்குடியிருப்பு.

## காதல் வந்ததும்...

வாசற்கதவை மூடிவைத்திருந்தவள்
இதயக் கதவையே திறந்து விட்டாள்!
நீ வருவாய் என...
இசையை இரசிக்காதவள் — இன்று
மௌனத்திலும் உன் குரல் கேட்கிறாள்!
தினமொரு முறை முகம் பார்த்தவள்
நிமிடத்திற்கொரு
முறை முகம் பார்க்கிறாள்!
கவிதையென்பதே அறியாதவள்
கனவிலும் கவிதை எழுதுகிறாள்!
அற்பமாகப் பார்த்த தாஜ்மகாலை இன்று
அதிசயமாகப் பார்க்கிறாள்!
வாழ்ந்தது போதுமென
நினைத்தவள் — உன்னுடன்
நூற்றாண்டுகள் வாழ நினைக்கிறாள்.

என். கவிப்பிரியா
யாழ்ப்பாணம்.

## முறித்து விட்டாயே

நான் சத்தம் போடாமல் வந்து
உன்னை கட்டி அணைத்து
மூக்கில் முத்தம் கொடுத்த போது
உன் இரு விழிகளிலும் என் முகம்
தெரிந்தது
அப்போது நீ சொன்னாய்
எந்த மோதல் வந்தாலும்
எங்கள் காதல் பிரியாது என்று
வசப் பேச்சை நம்பி
முத்தான முதல் காதலை
முறித்து விட்டாயே

சி.சிறிகரன்
இராமநாதபுரம், கிளிநொச்சி.

## வேசம் வேண்டாம்

வெறுக்கிறேன் உலகை — ஏன்
வாழ்வு கசந்ததனாலா — இல்லை
பார்க்கிறேன் மக்களை — ஏன்
பாரில் அவர்கள் இருப்பதனாலா — இல்லை
நீக்குகின்றேன் சொந்தங்களை — ஏன்
சொந்தங்கள் வேண்டா
மென்பதனாலா — இல்லை
மாள விரும்புகிறேன் — ஏன்
இவ்வுலகு வேண்டாம்
என்பதனாலா — இல்லை
பாசம் நீதி செத்து விட்டதென்பதால்...!

பொலிகையூர்
பொன்.சுகந்தன்

## காதல்

பார்த்தது பல முகம்
பிடித்தது உன் முகம்
எழுதுகிறேன்
உன்னிடம் பதில்
வரட்டும் என்னிடம்

பா.மீரா
மட்டுவில்.

## ஆடவரே! உமக்கோர் அறிவுறுத்தல்

நயமாகப் பேசி கன்னியை உன்
வசப்படுத்தும் ஆடவரே
கற்புக்கு பகிரங்கம்
செய்யும் கனவான்களே!
நீங்கள் ஏன் காமப்பசி
பிடித்து அலைகிறீர்கள்
கடைசியில் கண்ணீருடன்
நிற்பது பேதைதான்.
ஆடவரே உன் தேவைகளை - நீ
அனு அனுவாய் பூர்த்தி செய்கின்றாய்.
அழுகின்றாள் இரத்தக்
கண்ணீருடன் காரிகை.
சீதனத்தை பேரம் பேசும் போக்கிரிகளே!
சீரழிகின்றது நம் சமுதாயம்.
காதலே என்ன வென்று தெரியாத
உங்களுக்கேன் அன்பு.
காமப்பசிதான் உங்களுக்கு
கிடைத்த மூலவேரோ?
அனு அனுவாய் அவர்களின்
கற்பை - ஏன்
ஆரத்தி எடுக்கிறீர்கள்.
ஆண்களே நீங்களும் பெண்ணாக
இருந்தால் அலறுவீர்கள் இப்பூமியில்
காமப்பசியோடு இவ்வுலகில் அலையும்
கருமேகம் கொண்ட
இளைஞர் சமுதாயமே
காதலிக்காதீர்கள் காரிகையை
கதறுகின்றாள் கன்னியவள்.

அஞ்சலி
மருதங்கேணி.

## எதிர்பார்ப்பு

வேண்டாத பாசம்
வரவேற்ற பாவம்
விடியாமல் போச்சே
என் - வானம்
ஆனாலும் எத்தனை முறை
தோற்றாலும் தோல்வியை
ஒத்துக் கொள்ளாத
அரசியல் வாதியை போல்
என் மனம் இழந்தும்
வருடங்கள் ஆகியும்
தவிக்கிறதே மனம்
கொண்ட காதலை.

அருணாகரன்
திருநகர்,
கிளிநொச்சி.

## அவனுக்கு 'சும்மா'

எங்கேயோ தோன்றி
எங்கேயோ வாழ்ந்த
எங்களை ஒன்றாச்
சேர்த்த பாடசாலையிலே
கண்டேன் அவனை முதல் தடவை
வந்தது காதல் விழுந்தேன் வலையில்
சக மாணவியரின் சர்ச்சைக் குள்ளும்
சாதனை கண்டது ஈராண்டுக் காதல்
ஈராண்டுக் கிடையில்
அவனுக்காய் வரைந்தேன்
பல்லாயிரம் மடல்கள்
காலம் நகர்ந்தது கல்வியின்
கட்டளையால்
கம்பஸ் கிடைத்தது காதல் பிரிந்தது.
அவனிடம் இருந்து ஆயிரம் மடல்கள்
தொடர் பயணம் செய்தன என்னிடம்
விடை எழுத மறுத்தன என் கரம்
பதில் கேட்டான் ஏன் என்று பலமுறை
''சும்மா சொன்னேன்''
வெளிநாடு என்று

ப.சபிதா
யாழ். பல்கலைக் கழகம்.

## என்று தீரும் இத்தத் துயர்

இறைவா!
நீதமிழனுக்கென்றுஎழுதியதலைஎழுத்தா இது
எமதுமண்ணில்எமக்குவாழஇடமில்லையாம்
எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லை போட்டு ஆளுகினம்
எமதுஇருப்பிடங்கள்அவர்களதுபாதுகாப்புவலையமாம்
தமிழனென்றுஅடையாளம்காட்ட
அடையாளஅட்டைவேறுகாட்டவேணுமாம்
கேட்டால்கூறுகினம்உங்களதுபாதுகாப்பிற்காம்
நன்றாக பாலுக்கு பூனை காவலா?
நாம் கிட்டி புள்ளு விளையாடின திடல் இன்று
அவர்களது ஆட்டிலறித் தளமாம்
நம் தாத்தா பாத்தி கட்டி பயிர் வளர்த்த வயல்களில்
இன்று மிதி வெடிகள் விதைத்துள்ளனராம்
எமது பனந்தோப்போ இப்ப அவர்களது
உதைபந்தாட்டத்திடலாம்
எமதுவளங்களைஇங்கேஅடியோடுஅழிக்கினம்
எமது கல்வெறிவேண்டும்மாந்தோப்பு
ஊஞ்சல்ஆடி மகிழும் அம்மன் கோவில் ஆலமரம்
அவைகளைஎன்றுநான்சென்றுபார்ப்பேன்
அதில்ஊஞ்சல்தான்ஆடுவதெப்போ-அதுசரி
எனக்கின்றுஊஞ்சல்ஆடும்வயதா
என்மகனுக்குத்தான்ஓடிஆடிவிளையாடும்வயதாகிறதே
நாமென்றுதான்சொந்தமண்ணில்
சுதந்திரமாய்வாழ்வது
சமாதானம் வந்ததாம் இந்த நாட்டினிலே - நாம்
வாழ்கிறோம்இன்றுமுகாமெனும்கூட்டினிலே.

ரி.ஜெயந்தராஜ்
வராத்துப்பளை, பருத்தித்துறை.

## கண்மணியே...

அவள் முகமோ தாமரை மொட்டு
அவளோ இருபத்திரெண்டு வயது
பூங்காற்று
அவள் சுவாசமோ தாலாட்டு
அவள் விழிகளோ கவிபாட்டு
அவள் கிடைத்தால் என் வாழ்வு
காணா பாட்டு
கிடைக்கா விட்டால்
என் வாழ்வு சோகப்பாட்டு.

வெ.ரெங்கநாதன்.

## துறவி

என் இனிய உறவின்
இனியவனுக்கு எழுதுவது
நான் நானாகத்தான் இருந்தேன் - நீ
ஏன் எனது இதயத்தில் இடம் பிடித்தாய்
பெண் என்ற இலக்கணத்தில்
நானும் இரங்கியதால்
மனதில் இடம் தந்தேன்
என் வாழ்வில் முற்றுப்புள்ளி
வைத்து விட்டவனே
நான் இன்று நானாக இல்லை
நான் பச்சை மரமாக இருந்தேன் - நீ
பச்சோந்தியாக மாறியதேன்
சரி பரவாய் இல்லை
நீ வாழ் நான் என்றும் துறவிதான்
உனக்கு மகிழ்ச்சி தானே

சுதா
இராமநாதபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்'
—தனுஷ், அபர்ணா—



# அபர்ணாவுக்கு கிடைத்த முத்தம்

'புதுக்கோட்டையில் இருந்து சரவணன்' படத்தில் அபர்ணாவுக்கு லிப்—டு—லிப் கிஸ் கொடுத்துள்ளார் தனுஷ். பார்க்க அடக்க ஒடுக்கமாய் இருந்தாலும் அபர்ணாவும் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்ததோடு, கவர்ச்சியில் புகுந்து ஜாம்.. ஜாம் என்று விளையாடியிருக்கிறாராம்.

காட்சியை தயாரிப்பாளர் விளக்கியதும் தனுஷை விட அதிக உற்சாகமாய் குதித்து ரெடியானதோடு தனுஷோடு இதழோடு இதழ் சேர்த்திருக்கிறார் அபர்ணா. தனுஷும் சும்மா இல்லை. அபர்ணாவின் உதட்டை குத்தகைக்கு எடுத்துவிட்ட மாதிரி வைத்த வாயை எடுக்காமல் நின்றிருந்தாராம்.

கமல்ஹாசனுக்குப் பின் இப்படி வாயோடு வாய் சேர்த்த முதல் தமிழ் ஹீரோ தனுஷ்தான் என்கிறார்கள். இது தவிர படத்தில் ஏகத்துக்கும் 'வீர, தீர, ஈர' விளையாட்டுக்களாம். இருவரும் நீரில் குதித்து உருண்டு புரண்டு நடித்து பாடல் காட்சிகளுக்கு 'மெருகு' ஏற்றியிருக்கிறார்களாம். சென்னைப் பெண்ணான அபர்ணா இந்த அளவுக்கு துணிவார் என்று முதலில் டைரக்டர் எதிர்பார்க்கவில்லையாம்.

ஆனால், படிப்பிடிப்பு தளத்தில் தனுஷுடன் படு லூட்டி அடித்ததோடு, அவருடன் படு நெருக்கம் காட்டுவதிலும் தனக்கு எந்தவித தயக்குமும் இல்லை என்பதை அபர்ணா சொல்லாமல் சொன்னதால், தைரியமாய் அவரிடம் 'வேலை' வாங்கிவிட்டார்களாம். பொங்கலுக்கு வரப் போகும் இந்தப் படம் வென்றால் தொடர்ந்து 4 ஹிட் கொடுத்தவர்கள் பட்டியலில் சேர்ந்துவிடுவார் தனுஷ்.

இதற்கிடையே அவரது திருடா திருடி படம் நூறாவது நாளைக் கடந்து தயாரிப்பாளர் கிருஷ்ணகாந்துக்கு ஏதத்துக்கும் லாபத்தை அள்ளித் தந்துள்ளதாம். இந்தப் படத்தின் பாடல் உரிமையை வாங்கி ஸிடி, கசட்கள் வெளியிட்ட ரோஜா கம்பைன்ஸ் நிறுவனத்துக்கும் ஏகப்பட்ட கோடிகள் தேறிவிட்டனவாம்.



—சதா—

# நன்றிக் கடன்

தனுஷின் தந்தையான கஸ்தூரிராஜாவை ராஜ்கிரணிடம் சேர்த்துவிட்டு சினிமாவில் வாழ்வு தந்தவர் இசைஞானி இளையராஜா என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது ஒரு படம் எடுக்க முடிவு செய்து தனுஷின் கால்ஷீட்டை இளையராஜா கேட்க உடனே அதைக்கொடுத்து நன்றிக் கடன் தீர்த்தாராம் கஸ்தூரி ராஜா. இளையராஜாவை சினிமாவில் அறிமுகப்படுத்திய பஞ்சு அருணாச்சலம் தனுஷின் கால்ஷீட் கேட்டு அலைந்தார். இதை அறிந்த இளையராஜா தனுஷிடம் வாங்கிய கால்ஷீட்டை அவரிடம் தந்து தனது நன்றிக் கடனைக் காட்டினாராம். பஞ்சு சினிமாவுக்கு வந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டதால் இந்தப் படம் மிக பிரம்மாண்டமான தயாரிப்பாக வெளியாகவுள்ளதாம்.

***

*ஆட்டோ கிராப் படத்தின் மூலமாக தமிழ் சினிமா வரலாற்றில் அழுத்தமான தன் முத் திரையைப் பதிக்கப் போவதாக நம்பிக்கை யோடு சொல்லி வரு கிறார் டைரக்டர் சேரன்.

***

*ஹோலிவூட் முன்னணி இயக்குநர்களின் படங்களுக்கு இசையமைக்க வாய்ப்புகள் வந்து கொண்டிருப்பதால் ஹரிஸ் ஜெய ராஜ் உற்சாகமாக இருக்கிறார்.

# வசீகரனைக் ... செய்த பிரிய...

பாரதிராஜாவின் அறிமுக நாயகியான பிரியாமணி,
கனான வசீகரனை வசீகரித்து விட்டார் என்று செய்தி உ...
கும் படம் "கண்களால் கைது செய்". இதில் பெங்களூ...
யும், வசீகரனும் ஜோடியாக நடிக்கிறார்கள்.

அட்டகாசமான அழகுடன் உள்ள பிரி...மணிக்கும், ...
வசீகரனுக்கும் இடையே நிஜத்திலும் காதல் பூத்து விட்ட...
ஜோடியாக தியேட்டர்களில் பார்க்க முடிகிறது. இருவருமே ...
கள் பார்ப்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருப்ப...
தியேட்டர்களுக்கு கைகோர்த்தபடி வந்து செல்வதை அடிக்க...

இதனால் ஹோலிவுட்டின் தற்போதைய காதலர்கள் பட்...
விட்டனர். இதற்கு முன் மும்பை மாடல் ஒ...ருடன் பிரி...
தது. அது என்ன ஆனது என்று தெரியவில்லை.

முதல் படம் வெளியாகும் முன்னரே பிரியாமணிக்கு...
குவிந்துள்ளன. தனுஷுடன் பாலுமகேந்திரா இயக்கத்தி...
நிலையில் இந்தக் காதலால் சான்ஸ்கள் கை நழுவிப் போ...
டியவர்கள் எடுத்துச் சொல்ல ஆரம்பித்துள்ளார்களாம்.

உதாரணத்துக்கு ஸ்னேகாவின் கதையை அவரிடம் சொ...
அவருக்குக் காதல் அரும்பியதால் ஸ்னேகாவை தமிழ் சினி...
கட்டியது நினைவிருக்கலாம். இதன் பின்னர் ஸ்ரீகாந்...
கொண்டார் ஸ்னேகா.

இது ஒரு பக்கம் இருந்தாலும், முதல் படம் ரிலீஸாவதற்கு...
விட்ட இந்த ஜோடிக்கு அந்தப் படத்தின் இயக்குனர் பாரதிரா...
கூறுகிறார்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கோவில்'
—சிம்பு—

க் கைது
ரியாமணி

ரியாமணி, தனது முதல் படத்தின் நாய
செய்தி உலா வருகிறது. பாரதிராஜா இயக்
ங்களுடைச் சேர்ந்த மொடல் பிரியாமணி

ரிக்கும், அதே அளவுக்கு எடுப்பாக உள்ள
த்து விட்டதாம். இருவரையும் அடிக்கடி
இருவருமே இந்தி மற்றும் ஆங்கிலப் படங்
க இருப்பதால், அந்தப் படங்கள் ஓடும்
தை அடிக்கடி பார்க்க முடிகிறது.

லர்கள் பட்டியலில் இருவரையும் சேர்த்து
டன் பிரி மணிக்கு காதல் இருந்து வந்

யாமணிக்கு ஏகத்துக்கும் வாய்ப்புக்கள்
இயக்கத்திலும் நடித்து வருகிறார். இந்
ழுவிப் போகலாம் என அவருக்கு வேண்
களாம்.

வரிடம் சொல்கிறார்களாம். ஸ்ரீகாந்துடன்
தமிழ் சினிமாவின் இளம் நடிகர்கள் ஓரம்
ர் ஸ்ரீகாந்துடனான உறவை முறித்துக்

லீஸாவதற்கு முன், காதலை ரிலீஸ் செய்து
ார் பாரதிராஜாவின் ஆசி இருப்பதாகவும்



'கண்களால் கைது செய்'
—வசீகரன், பிரியாமணி—

# துணிந்தார் கௌசல்யா!



'கௌசல்யா'

பிரபல ஹீரோக்களுக்கு ஜோடியாக நடித்துக் கொண்டிருந்தவருக்கு வாய்ப்புகள் குறைந்து போக திடீரென காணாமல்போனார் கௌசல்யா.

'திருமலை படத்தில் ரகுவரனுக்கு மனைவியாக தோன்றினார். இப்போது 'மனதில்' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். இழுத்துப் போர்த்திக் கொண்டு மட்டும் நடிக்கப்போவதில்லையாம். கிளாமர் ரோலும் செய்யத் தயார் என்பதுதான் இப்போதைய இவருடைய அறிவிப்பு. அதற்காகவே தன்னைத் தயார்படுத்தியும் வருகிறார். இதனால் இவருக்கு வாய்ப்புகளும் தேடி வர ஆரம்பித்திருக்கிறது. இனி மாறுபட்ட கௌசல்யாவைப் படங்களில் காணலாம்.

***

தனது படங்களில் ரஜனியைப்போல் வசனம் பேசும் விஜய். கில்லியில். 'ஈட்டிக்கு ஒருபக்கம்தான் கூர். கில்லிக்கு ரெண்டுபக்கமும் கூர். என்கிறாராம் இந்த வசனம் ரசிகர்களிடம் மிகப் பிரபல்யம் ஆகும் என்கிறது கில்லி யூனிட்.

***

'பாய்ஸ்' ஹீரோவான சித்தார்த்திடம் கதை சொல்லப் போகிறவர்களுக்கு முதலில் ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டுமாம். ஏன் என்றால் சித்தார்த்திடம் ஆங்கிலத்தில்தான் கதை சொல்ல வேண்டுமாம். தமிழில் சொன்னால் அவருக்குப் பிடிக்காதாம். அவருக்கு கதை சொல்லப் போகும் இயக்குநர்கள் தமிழ் படத்தில் நடிப்பதற்காகத்தானே தவி— ஹாலிவூட் படங்களில் நடிப்பதற்காக இல்லை என்பதை யாராவது ஒருவர் அவருக்கு தெளிவு படுத்தினால் நல்லது. சென்னையில் பிறந்த வளர்ந்தவருக்குத் தமிழ் தெரியாதா? இப்படி அதிகம் பேசியவர்கள் நீண்ட நாளைக்கு திரையில் இருந்ததில்லை. இதை அவர் மாதவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அவரும் ஒரு காலத்தில் இப்படிப் பேசிக் கொண்டிருந்தவர் தானே.

* மன்மதன் படத்திற்காகத் தனது தந்தையைப் போல கதை, திரைக்கதை எழுதியுள்ளார் சிம்பு. மேலும் டி.ராஜேந்தரின் கதை, வசனத்தில் சிம்பு ஒரு படத்தை தானே இயக்கவும் போகிறார். தெலுங்கில் டி..ஆர். இயக்கப் போகும் படத்தை அவர் அங்குள்ள ஹீரோவை வைத்து இயக்கினாலும் தமிழில் அதே கதைக்கு சிம்புவை வைத்து இயக்கப் போகிறார். இந்தத் திட்டம் முடிந்ததும் சிம்புவை இயக்குநராக்கும் புரொஜெக்ட்டில் இறங்கப்போகிறார் டி..ஆர்.

***

* தொப்பை ஜோதிகாவா இருந்து. ஸ்லிம் ஜோதிகாவாக மாறியவர். இப்போது தமிழ்பேசும் ஜோதிகாவாக மாற ஆசைப்படுகிறார். அதற்காக அவர் தமிழ் சொல்லிக் கொடுக்க நல்ல பெண் டியூஷன் மாஸ்டரைத் தேடிக் கொண்டிருக்கிறார். உங்களுக்குத் தெரிந்தால் ஜோதிகாவுக்குச் சொல்லுங்களேன். அதெல்லாம் இருக்கட்டும் என்ன திடீர் பாசம் தமிழ் மீது? குஷ்புவைப்போல தமிழ் மருமகளாக மாற உத்தேசமோ என்னவோ.

***

* ஆர்.பி.சௌத்திரிக்காக அவரது மகன் ஜீவாவை வைத்து, 'மௌனம் பேசியதே' அமீர் இயக்கப்போகும் படத்திற்குப் பெயர் வைத்தாகிவிட்டது. 'ராம்' இதுதான் படத்தின் பெயர். இதில் ஜீவாவுக்கு ஜோடியாக முன்னணி நடிகை ஒருவரைக் கேட்டு, அவரது திகதி கிடைக்காததால் கஜாலாவுக்கு கிடைத்திருக்கிறது அந்த வாய்ப்பு.

***

* ரஜனி பேசிய பிரபல வசனங்களான ' ஒரு தடவை சொன்னா' வசனத்தையே பெயராகக் கொண்டு சில மாதங்களுக்கு முன்பு ஒரு படம் சின்னி ஜெயந்த் கதாநாயகனாக நடித்து வெளிவந்தது ஞாபகமிருக்கலாம். இப்பொழுது ' பாட்ஷா' படத்தில் வரும் 'நான் ஏழைக் கெல்லாம் சொந்தக் காரன்டா' எனும் வரியிலிருந்து 'ஏழைக்குச் சொந்தக் காரன்' எனும் வரியை உருவி சின்னி ஜெயந்த் அடுத்து ஒரு படத்திலும் கதாநாயகனாக நடிக்கிறார். பாட்ஷாவில் சுரேஷ் கிருஷ்ணாவிடம் உதவி இயக்குநராக இருந்த கிரண் இயக்குகிறார் இப்படத்தை.

***

* சன்.ரி.வியின் 'காமெடி டைம்' நிகழ்ச்சியை சிட்டி பாபுவுடன் இணைந்து நடத்தி வந்த அர்ச்சனாவிற்கு என்ன ஆச்சு?. சில நாட்களாகக் காணவில்லையே என்று கலங்கிப் போயிருக்கும் 'காமடி டைம்' ரசிகர்களுக்காக இத்தகவல். அர்ச்சனாவிற்கு 'அப்பண்டிஸ்' எனும் குடல் வால் நோயாம். அந்த வாலை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்திக்கொள்ளப் போயிருக்கிற அவர். கூடிய விரைவில் காதல் கொண்ட கப்பல் இன்ஜினியர் ஒருவருடன் திருமாணத்தை முடிக்கப்போகின்றார்.

***

*கடந்த சில நாட்களாக நேப்பியர் பாலத்தில் ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள். காரணம் மணிரத்னம் தனது ஆயுத எழுத்து படத்திற்காக சூர்யா — மாதவனை வைத்து சண்டைக் காட்சி ஒன்றை படமாக்கிக் கொண்டிருந்தார். இதற்கு இவ்வளவு பெரியபாதுகாப்பு என்றால் அதற்கும் காரணம் இருக்கிறது. இதே சீனைத் தான் ஹிந்திக்காக கொல்கத்தாவில் ஹூக்ளி பாலத்தில் வைத்து எடுத்த போது விவேக் ஒபராய்கு விபத்து ஏற்பட்டது. அப்படி ஒரு சம்பவம் இங்கேயும் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இத்தனை ஏற்பாடாம்.

***

*'சிந்தாமல் சிதறாமல்' படத்தில் நடிக்கும் சோனா படிப்பின் மீது அக்கறை கொண்டவராம். வெளிநாடு பறந்துபோய் கல்வி கற்றும் வந்திருக்கிறாராம். இன்றைய நாயகிகள் படிப்பையும் நடிப்படையும் போற்றுகிறவர்களாக இருக்கிறார்கள்.

***

*ஒவ்வொரு பற்களிலும் சிரித்தேன் என்ற 'பாய்ஸ்' படத்தின் பாடல்வரியைப்போல உன் உதட்டுக்கு சொல்லிவை முத்தத்தாலே உதைப்பேன் என்ற 'ஜோர்' படத்தின் பாடல் வரியும் பரவலாக பேசப்படும் என கவிஞர் கபிலன் எதிர்பார்க்கிறார்.

***

*புதுக்கோட்டையிலிருந்து சரவணன் படத்தில் தனுஷ் உடன் ஒற்றைப் பாடலுக்கு அதிவேக டான்ஸ் போடும் தாரிகா. கிளாமர் ரோல் வாய்பென்றாலும், கரெக்டர் ரோல் கிடைத்தாலும் நடிக்கத் தயாராக உள்ளார். இனி டைரக்டர்கள்தான் மனசு வைக்க வேணும்.

***

*தான் இயக்கிய படங்கள் இன்னும் வெளிவராத நிலையில் நடிப்பதென முடிவெடுத்திருக்கிறார் டைரக்டர் அகத்தியன். 'திரு' படத்தில் இவருக்கு சொல்லிக் கொள்ளும்படியான வேடம் கொடுத்திருக்கிறார்கள் திரு படத்தின் டைரக்டரும் தயாரிப்பாளரும்.



—தனுஷ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டேஸ்ட்கடை தணிகாசலம்

**அ**ன்று ஞாயிற்றுக்கிழமை. ஆசுவாச மாக வீட்டில் இருந்த தணிகாசலம் அண் ணன் குளிப்பதற்கு தயாரானார்.

அப்போது மன்றச் செயலாளர் சிவலிங்கமும் சில மாணவர்களும் வந்தனர்.

''வணக்கம் அண்ணே''

''வாங்க வணக்கம். இப்பதான் குளிக்க ரெடியானேன். என்ன விஷயம் காலையிலேயே...?''

''அவசரம் ஒன்றும் இல்லைங்க அண்ண. நீங்க குளிச்சிட்டு வாங்க. நாங்க ஆத்தாகிட்ட பேசிக்கிட்டு இருக்கோம்'' — என்றார் சிவலிங் கம்.

''எனக்கு என்ன அவசரம்? இன்றைக்கு லீவு நாள் தானே! ஆறு தலா குளிக்கலாம் இப்படிவாங்க'' என்று கூறிக் கொண்டே துண்டை தோளில் போட்டுக் கொண்டு நாற் காலியில் அமர்ந்து விட்டார் தணிகா சலம் அண்ணன்.

''அண்ணே இவங்க நாலு பேருக் கும் ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி யில் அட்மிசன் கிடைச்சி இருக்கு. போகும் முன் உங்க கிட்ட ஆசீர் வாதம் வாங்கிட்டுப் போகவந் தாங்க' என்று கூறினான் சிவலிங் கம்.

''அப்படியா! ரொம்பச் சந்தோசம். உங்க அப்பா அம்மாகிட்ட நீங்க ஆசீர்வாதம் வாங் கினாலே போதும் அவுங்கதான் உங்களை ஆளாக்கிய தெய்வங்கள். அதை மறந்து விடக் கூடாது'' என்றார் தணி அண்ணன்.


''அண்ணே அப்பா அம்மாவுக்கு அடுத்த படியாக இன்னும் சொல்லப் போனா அவுங் களுக்கும் மேலே நின்று எங்களை ஆளாக்க ஊக்கப்படுத்தி இருக்கீங்க. உங்களிடம் ஆசீர்வாதம் வாங்காட்டா எங்களுக்கு நிறைவே இருக்காது.''என்றாள் ரேகா.

''அடடே! நம்ப செல்வநாயகம் மகளா? ஏ.எல்.பரீட்சையில் கெட்டித்தனத்தை காட் டின மாதிரி கொலிஜ்ஜிலேயும் மொத ஆளா வரணும். எல்லாரும் நல்லா படிச்சி பெரிய வாத்திமாரா வரனும்.''

''ரொம்ப நன்றிங்க அண்ணே.''

''யாரப்பா இது?'' மாரிமுத்து மகன் சிவராமன் தானே! என்று தணி அண்ணன் செல்லமாக முதுகில் தட்டிக் கொடுத்தார்.''

''அது சரி நீங்க ரெண்டு பேரும் முந்தி யும் பிந்தியும் தானே படிச்சீங்க. அது எப்படி இரண்டு பேக்கும் ஒரே தடவையில் எட்மிசன்



கிடைச்சிச்சு?'' என்று வியப்புடன் கேட்டார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்னே! நீங்க கேட்பதும் சரியான கேள்விதான். வழமையா ஒவ் வொரு வருசமும் ஏ.எல்.பாஸ் பண்ணிற வங்களில் இருந்து 500 பேர் எடுப்பாங்க. இப்ப என்னடான்னா அதை 250 பேரா கொறைச்சிப் புட்டாங்க''என்றான் சிவலிங் கம்.

''என்ன சிவா! அப்படிச் சொல்ற? இந்த முறை 500 பேருக்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது என்றுதானே பேப்பர்ல போட்டு இருந்தாங்க.''

''செய்தி சரிங்க அண்ணே. இந்த முறை 500 பேருக்கு அனுமதி. 2001 ஆம் ஆண்டில் 250 பேருக்கும் 2002 ஆம் ஆண்டில் 250 பேருக்கும் மொத்தமா 500 பேருக்கு என்று தானே போட்டு இருக்கு.''

''சிவா சொல்லுறதும் சரிதான். இப்படிப் பார்த்தா இரண்டு வருசத்திலயும் 500 பேருக்கு சான்ஸ் இல்லாம போச்சி.''

''ஆமாங்க அண்ணே ஆட்டை கடிச்சி, மாட்டைக் கடிச்சி, மனிதனைக் கடிக்கிற கதையா இப்ப நமக்கு இருந்த ஒரே ஒரு இடத்திலயும் கை வச்சிப் புட்டாங்கள்.''

''என்ன தம்பி இந்த கல்வி அமைச்சர் என்னென்னா ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி யில் பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டும்தான் ஆசிரியர் பதவி, அவர்கள் மட்டும் தான் ஏ.எல்.தகுதி உடையவர்கள் என்று சொல் றார். இதை தட்டிக் கேட்கவும் உண்மையை எடுத்துச் சொல்லவும் ஆள் இல்லையா? இது பெரிய அநியாயமாக இல்ல இருக்கு.''

''உண்மை தாங்க அண்ணே! வருசா வருசம் பல ஆயிரம் பிள்ளைகள் ஏ.எல். பாஸ் பண்ணுராங்க. ஆனால், வருசா வரு சம் 500 பேருக்கு என்று இருந்ததை இப்ப என்னடானா 250 ஆக குறைச் சிப்புட்டாங்க. கல்வி மந்திரி சொல்ற மாதிரி இவுங்க மட்டும் தான் ஏ.எல். தகுதி உள்ளவுங்களா? மத்தவுங்க எல் லாம் மட்டை அடிக்கவா?'' என்று சற்று ஆதங்கப் பட்டவனாகக் கூறி விட்டான் சிவலிங்கம்.

''சிவா உன்னுடைய ஆதங்கம் நியாயமானது தான். நாம நம்ப தலை வர் மார்கிட்ட போவம். யூனிவசிட் டிக்கு போக முடியாமலும், ஸ்ரீ பாத கல் லூரிக்கு போக முடியாமலும் இருக் கும் மாணவர்களின் நிலைமை என்ன ஆவது? இனிமேல் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரும் போது ஏ.எல்.படித்தவர்கள் மத்தியில் போட்டிப் பரீட்சைகளை நடத்தியே தெரிவு செய்ய வேனும்னு கோரிக்கை ஒன்றை முன் வைப்போம்''

இப்படிக் கூறினார் தணி அண் ணன்.

''இங்க பாருங்க. இப்ப நீங்க எல் லாம் எட்மிசன் வாங்கீட்டீங்க. அங்க போய் ஆர்ப்பாட்டம், போராட்டம், சத்தியாக்கிரகம், அது இது என்று கூத்தாடக் கூடாது. நீங்க படிக்க போறீங்க. உங்க லெட்சியத்துடன் படிக்கனும்'' அவர் களையும் ஆசீர்வதித்தார் தணிகாசலம் அண் ணன்.

அப்போது வீட்டில்இருந்து வந்த ஆத்தா,என் னப்பா புள்ளைகள வெறுங் கையோடு ஆனுப் பலாமா! என்று எதையோ தணி அண்ணன் கையில் கொடுத்தார். இல்ல ஆத்தா அதை நீங் களே கொடுக்கனும் என்றுதானே உங்களை அழைத்தேன் என்றார் தணி அண்ணன்.

அதைக் கேட்ட ஆத்தா ஆளுக்கு ஆயிரம் ரூபாவாக நால்வருக்கும் கொடுத்து நால் வரையும் உச்சி மோர்ந்து வழி அனுப்பி வைத்தார்.




# அடிப்படை உரிமைக்கு வேட்டு இனிமேலும் வேண்டாம் கூட்டு

**தொ**ழில் பிணக்குகள் தொழிலுறவுச் சட்டத்தின் படி சகல தொழில் துறைகளுக் கும் சம்பள நிர்ணய சபைகள் இருக்கின் றன. காலத்துக்குக் காலம் ஏற்படும் வாழ்க் கைச் செலவு அதிகரிப்பு, விலைவாசி உயர்வுகள் ஏற்படும் வேளையிலும்—

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் போதும்— இந்த சம்பள நிர் ணய சபைகள் கூடி தனியார் துறையினருக் கான சமகால சம்பள அதிகரிப்பை தீர்மா னிக்கின்றன.

சாதாரண கடைச் சிப்பந்திகள், ஹோட் டல் ஊழியர்கள் முதல் தோட்டத் தொழிலா ளர்கள், ஊடகவியலாளர்கள் வரை சகல தரப்பினருக்கும் இந்த சம்பள நிர்ணய சபை கள் இருக்கின்றன.

நேரடியாக தொழில் ஆணையாளரின் கண்காணிப்பில் இயங்கும் இச் சபைகளில் முதலாளிகள், தொழில் தருநர், ஊழியர்க ளின் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரதி நிதிகள் என ஒரு துறையைச் சார்ந்த சகல ரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

வழங்கப்படும் சம்பள உயர்வு தொடர் பாக விரிவாக விவாதிக்கப்பட்டு பெரும் பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் இறுதி முடிவு எடுக்கப்படும். பெரும் பான் மையினரின் தீர்வின்படி சம்பள உயர்வுக ளும் வழங்கப்படும். அவை அரச வர்த்த மானியிலும் பிரசுரிக்கப்படும்.

இம் மாதிரியான சம்பள நிர்ணய சபை கள் தேயிலை, றப்பர், தென்னந்தோட்டத் தொழிலாளர்களுக்காக தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்த மூன்று சம்பள நிர்ணய சபைகள் மட்டுமே செயற்படுவதில்லை. நியாயப்படி வாழ்க்கைச்செலவுப் புள்ளி அடிப்படையில் சம்பள உயர்வுகள் வழங்கப் பட வேண்டும்.

இது ஏன்?

தொழிலாளர்களின் ஏக தலைவர்கள் தாமே என்று கூறிக்கொண்ட சிலதொழிற்சங்கத் தலைவர்கள் தமது சுயநலத்துக்காக தோட்ட முத லாளிகளிடமும் அதே வேளை அரசாங்கத் திடமும் சந்தோசத்தையும், அற்ப சலுகைக ளையும் பெற்றுக் கொண்டு இந்த மூன்று சம் பள நிர்ணய சபைகளின் செயற்பாடுக ளுக்கு சாவு மணி அடித்துவிட்டனர்.

நாங்கள் தோட்ட முதலாளிமார்களுடன் பேசி கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து கொள்கி றோம். வாழ்க்கைச் செலவு சுட்டெண்படியோ, அல்லது சம்பள நிர்ணய சபையின் தீர்வின் படியோ தேவை இல்லை. எங்களுக்கு தோட் டத்துரைமார்தான் கண் கண்டதெய்வம். கூட்டு ஒப்பந்தமே போதும் என்று தோட்டத் தொழிலாளர்களையே முதலாளிமாரிடம் ஒட்டு மொத்தமாக அடகு வைத்து விட்டனர்.

இவர்களுடைய முதலாவது கூட்டு ஒப்பந் தம், தொழிலாளர்களுக்கு பத்துச் சதவீத சம் பள உயர்வை மட்டும் வாங்கிக் கொடுத்தது. தலைவர்களை வாழ வைக்கும் உண்டிய லான தொழிற்சங்க சந்தாவைக் செக் ரோ லில் பிடித்துக் கொடுக்கும் சலுகையை மட் டும் நிரந்தரமாகப் பெற்றுக் கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்களின் இரத்தத்தை யும் வியர்வையையும் உறிஞ்சி, முது கெலும்பை முறிக்கும் தோட்ட நிர்வாகங்கள், இந்த தொழிற்சங்க முதலாளிகளுக்கு நாய்க்கு எலும்புத்துண்டை தூக்கி வீசுவது போல் சந்தாவை செக் ரோலில் கழித்து ஒரே செக்காக சங்கங்களுக்கு அனுப்பி விடுகின் றனர். இதை எவரும் மறுக்க முடியாது.

சர்வதேச மட்டத்தில் உழைக்கும் தொழி லாளர்கள் தொடர்பாக பல்வேறு கூட்டு ஒப் பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருக்கின் றன. அவை அனைத்தும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற் கான ஒப்பந்தங்கள்.

ஆனால், மலையகத் தலைவர்கள் செய் துள்ள கூட்டு ஒப்பந்தம் அடிப்படை உரிமை களுக்கே வேட்டு வைப்பதாக அமைந்துள் ளது.

அதாவது, இரண்டு வருடங்களுக்கு சம் பள உயர்வு கேட்கமாட்டோம்,தொழிற்சங்கப் போராட்டம் நடத்தமாட்டோம் என அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்து விட்டனர். போதையில் செய்து கொண்ட இந்த ஒப்பந் தத்தை மறந்து திடீர் வேலை நிறுத்தம் செய்து விட்டு கோர்ட்டுக்குப் போய் பதில் சொல்ல வேண்டிய இக் கட்டான நிலையும் இந்த தொழிற் சங்கத் தலைவர்களுக்கு எற்பட்ட துண்டு.

எனவே, தோட்டத்தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கும், உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் கூட்டு ஒப்பந்தங்கள் இனிமேல் வேண்டவே வேண்டாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.


அண்மையில் நிதி அமைச்சரால் சமர்ப் பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் தோட் டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர் பாக திட்டவட்டமாக எதுவும் சொல்லப்பட வில்லை.

ஆனால் நிதி அமைச்சர் கே.என் .சொக்ஸி, தொழில் அமைச்சர் மஹிந்த சமர சிங்க , பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷமன் கிரிஎல்ல ஆகியோர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர் பாக சம்பள நிர்ணய சபை மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தையாவது தொழிற்சங் கத் தலைவர்கள் நழுவவிடாமல், காட்டிக் கொடுக்கும் போட்டி மனப்பான்மையையும் தலைமைத்துவ போட்டிகளையும் கைவிட்டு சமூக உணர்வுடன் தோட்டத் தொழிலாளர் களின் சம்பள நிர்ணய சபையை மீண்டும் உயிரோட்டம் பெறச் செய்ய வேண்டும். அடிப் படை உரிமைக்கு வேட்டு வைத்த கூட்டு ஒப் பந்தத்துக்கு ஒட்டு மொத்தமாக வேட்டு வைக்க வேண்டும். மலையகத் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா? இல்லை வழமைபோல் இம்முறையும் காலை வாரி விடுவார்களா? காலம் பதில் சொல்லட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரோமத்தால் சங்கடமா?

அழகாக இருக்க யாருக்குத் தான் விருப்பமில்லை? தற்காலத்தில் பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் கூட அழகு நிலையங்களினை நோக்கிப் புறப்படுகிறார்கள் என்றால் அழகுக்கு ஒவ்வொருவரும் கொடுக்கும் முக்கியத்துவம் பற்றி நாம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. ஆனால் இந்த அழகைப் பேணிப் பாதுகாப்பதற்காக அவர்கள் படும் பாடு தான் சொல்லில் அடங்காதது. அந்த வகையில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்றுதான் உரோமம் வளர்தல். இது சில பெண்களுக்கு கைகளிலும், கால்களிலும்அதிக அளவில் இருப்பது மட்டுமல்லாது சில பெண்களுக்கு முகத்திலும் இருப்பது தான் கவலைக்கு உரிய விடயமாகும். இந்த வேண்டாத உரோமங்களை அகற்றுவது எப்படி? தொடர்ந்து மஞ்சள் தேய்த்துக் குழிப்பதால், வேண்டாத உரோமங்கள் வளராது என்ற நம்பிக்கை பழங்காலம் முதலே பழக்கத்தில் இருந்து வருகிறது. மஞ்சள் தேய்த்துக் குழிக்கப் பழக்கமில்லாதவர்களும், ஓய்வில்லாமல் அலுவலகங்களிலும் மற்ற துறைகளிலும் பணிபுரியும் சகோதரிகளுக்கும் மஞ்சள் தேய்த்துக் குழிப்பதால் சிரமம் ஏற்படக்கூடும். இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே தற்பொழுது அழகு நிலையங்களில் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. கால், கையிலுள்ள உரோமத்தை நீக்குவதற்கு Wax Method என்ற முறை கையாளப்படுகிறது. இது உஷ்ண மெழுகு(Hot Wax), குளிர்ச்சிமெழுகு (ColdWax) என இருவகைப்படும். இது தவிர உரோமத்தைக் கத்தி கொண்டு நீக்குவது கூடாது. அப்படிச் செய்தால் உரோமம் தடித்து வளர்ந்து உடலையே விகாரப்படுத்தி விடும்.

இந்த மெழுகு முறையில், உஷ்ண மெழுகு கடைகளில் டெபிலிடேடரி வாக்ஸ் என்ற பெயரில் விற்கப்படுகிறது. அதை உருக்கிக் கைகளில் உரோமம் உள்ள பகுதியில் பூச வேண்டும். அந்த மெழுகுப் பூச்சின் மீது சிறிது நேரம் சென்றதும் மெல்லிய ஏடு போன்று ஒரு படிவம் உருவாகும். மெழுகு காய்வதற்குள் அந்தப் படிவை எடுத்துவிட வேண்டும். அவ்வாறு எடுக்கும்போது மெழுகு படிவத்துடன் உரோமங்களும் சேர்ந்து வந்து விடும்.

குளிர்ச்சி மெழுகு மருந்துக் கடைகளில் கேட்டால் தருவார்கள். குளிர்ச்சி மெழுகை கத்தி போன்ற தட்டையான பொருளால் எடுத்து, உரோமம் உள்ள பகுதியில் தடவி, அதன் மீது மெல்லிய பருத்தியால் ஆன சிறிய துணியை ஒட்ட வேண்டும். சிறிது நேரம் அப்படியே விட்ட பின் உரோமம் படிந்துள்ள திசைக்கு எதிர்ப்புறமாக ஒட்டிய பருத்தித் துணியை உரித்து எடுக்க வேண்டும். எடுக்கும்போது துணியுடன் உரோமங்களும் வந்துவிடும்.

இவ்வாறு மாதம் ஒரு முறை என்ற பழக்கம், நாளடைவில் சில மாதங்களுக்கு ஒரு முறை என்று மாறும் அளவுக்கு உரோமத்தின் வளர்ச்சி குறையும். நாளடைவில் வளர்ச்சி நின்று விடலாம். இம் முறைகளை கை, கால்களிலுள்ள உரோமத்தின் வளர்ச்சியைத் தடுக்கப் பயன்படுத்தலாம்.

அது ஒருபுறமிருக்க, முகத்தில் வளரும் முடிக்கு என்ன செய்யலாம்? என்ற கேள்வி கூட சிலர் மனதில் எழுவது புரிகிறது. ஆம். இதனை ''எலக்ட்ராலசிஸ்'' என்ற முறையில் மின்சார ஊசி கொண்டு, ஒவ்வொரு உரோமமாகக் களைந்து விடுவார்கள். இந்த முறையில் திரும்பவும் உரோமம் வளருவதில்லை. ஆனால், இது கொஞ்சம் கடினமான வேலை. மேலும், அதிக கவனமாகச் செய்ய வேண்டிய முறையுமாகும்.

அனுபவம் நிறைந்த நிபுணர்களால் மட்டுமே செய்யக் கூடிய முறை இது. தப்பித் தவறிப் பக்கத்தில் ஊசி போட்டால் கூட மாறாத தழும்பை ஏற்படுத்தி, முகத்தை விகாரப்படுத்தி விடும். குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொள்ளலாமா?

எனவே அவதானமான முறையில் தேவையற்ற உரோமங்களை அகற்றி உங்கள் மனச் சுமையைக் குறைத்துக்கொள்ள நீங்கள் இப்போதே ஆயத்தமா ?

# அழகாக வேலை வாங்க...

''நான் என்ன சொன்னேன்?''

ஆம். இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்பது போல் உள்ளதா? மற்றவர்களிடம் ஒப்படைத்த வேலை ஒன்றை நாம் விரும்பியதற்கு மாறாக அவர்கள் செய்திருந்தால் இப்படித் தான் கேட்கத் தோன்றும்! ஒரு நிமிடம் யோசித்துப் பார்க்கலாம், அவர்கள் செய்தது தவறா அல்லது நாம் அவர்களுக்கு சரியாகப் புரிய வைக்கவில்லையா? என்று. பல முறை— எமக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் ''நீங்கள் சொல்வது புரியவில்லை'', என்பதை வெளிப்படையாகக் கூற மாட்டார்கள். தங்களுக்குப் புரிந்தது போல் காட்டிவிடுவார்கள். விளைவு நாம் விரும்பியதற்கு மாறாக இருக்கும்.



எனவே எமக்குத் தேவைப்படும் வேலையை எவ்வாறு திறமையான முறையில் நாம் மற்றவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என்பதைப்பற்றி பார்ப்போம்.

1. 'நாம் செய்தால் தான் சிறப்பாகச் செய்ய முடியும்' என்ற நினைப்பை விட்டுவிட வேண்டும். இப்படிச் செய்வதால் எமக்கு இருக்கும் அதிக வேலைப்பளு குறைவதுடன்எமக்கு மற்றவர் மீது நம்பிக்கை உள்ளதையும் காட்டும்.

2.எமக்கு என்ன வேண்டும் என்பதைப்பற்றி முதலில் நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். பிறகு நாம் விரும்புவதை எழுதிக் கொள்ள வேண்டும். மற்றவருக்கு புரிய வைப் பதை இது எளிதாக்கும். அத்துடன் தவறான எதிர்பார்ப்பையும் அதனால் ஏற்படும் ஏமாற்றத்தையும் தடுக்க உதவும்.

3.யாரிடம் நாம் வேலையை ஒப்படைக்கப் போகிறோமோ அவர்களுக்கு வேலையை புரிய வைக்க வேண்டும். பிறகு நாம் கூறுவதை எழுதிக்கொள்ள வேண்டும். இறுதியில் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ''நான் சொன்னதை மீண்டும் சொல்'' என்று கேட்டால், அவர்களை நாம் முட்டாளாக நினைக்கிறோம் என்பதைக் காட்டும்.

4. இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரே காலில் நிற்பது சரியல்ல. நாம் விரும்பியதைப் போல் இல்லாமல், அதே நேரத்தில் சரியாக இருந்தால், ஓ.கே சொல்லிவிடுங்கள். செய்த வேலையை மீண்டும் செய்ய வைப்பதால் மற்றவர்களுக்கு எரிச்சல் வருவதுடன், நேரமும் விரயமாகும்.

5. வேலை செய்பவருக்கு மறதி அதிகம் இருந்தால், அல்லது அவர் விடுமுறையில் இருந்தால், அவர் செய்ய வேண்டியதை எழுதித் தருவதே சிறந்தது.

6. எந்த வேலையையும் ஒப்படைக்க முன்னர் அதை முடிக்க வேண்டிய கால அவகாசத்தை மறக்காமல் குறிப்பிட வேண்டும். வேலை முடியவில்லை என்றால் அந்த நபர் மீண்டும் நம்மை அணுகி அவகாசம் கேட்க வேண்டும்.

7. யாரிடம் எந்த வேலையை ஒப்படைத்தோம், அது எப்போது முடியும், ஆகிய தகவல்களைக் குறித்து வைப்பது சிறந்தது. இதனால் வீண் குழப்பங்களைத் தவிர்க்கலாம்.

8. நாம் வேலையை ஒப்படைத்துவிட்டோம் அத்துடன் நம் வேலை முடிந்துவிட்டதுஎன்றில்லாமல் , வேலை எப்படி நடக்கிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும். ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருந்தால் மூன்று நாட்களுக்கு பிறகு அந்த வேலை எந்த நிலையில் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டால், அப்போதே தேவையான மாற்றங்களை செய்ய முடியும். ஆனால் முடிந்துவிட்டதா என்று கேட்டு எரிச்சல்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

9. நன்றாக முடிந்த வேலைக்கு பாராட்டும், சரியாக செய்யாத வேலையை எப்படி சரியாக செய்யலாம் என்று ஆலோசனை வழங்குவதும் வேலை செய்பவர்களுக்கு உற்சாகம் தரும்.

10. எப்படி ஒரு வேலையைச் செய்கிறார்கள் என்பதற்கு முக்கியத்துவம் தராமல், முடிவு என்ன என்பதில் மட்டும் கவனம் செலுத்தினால் வேலை விரைவில் முடியும். அத்துடன் புதிய கண்ணோட்டமும் எமக்குக் கிடைக்கும்.




# கைகளைப் பாதுகாக்க...

எமது உடல் உறுப்புக்களிடையே மிக முக்கியம் வாய்ந்தவை கைகள். இதற்கு நாம் எவ்வளவு முக்கியம் கொடுக்கிறோம் என்று கேட்டால் பலரிடம் இருந்து வரும் பதில்கள் அவ்வளவு திருப்திகரமாக அமைவதில்லை.

கைதானே....என்று எம்மில் பலருக்கு ஒரு அலட்சியப் போக்கு உண்டு. ஆனால் அலட்சியப்படுத்தப்பட வேண்டிய விஷயமில்லை என்று கூறுகிறார் பிரபல அழகுக் கலை நிபுணர் ஒருவர்.

வயோதிபத்தின் முதல் அறி குறியை காண்பிப்பது எமது கைகள் தான்.

பலவிதமான கால நிலைகள் காரணமாகவும், வீட்டு வேலைகள் மற்றும் கடுமையான வேலைகள் செய்வதினாலும் கைகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறன.



முக்கியமாக பனி காலங்களில்சிலரின் கைகள் மிகவும் வறண்டு செதில் செதிலாகக்,காணப்படும். இதற்கு சரியான பராமரிப்பு இல்லாமையே காரணமாகும். கைகளால் பாத்திரங்கள் கழுவும் போதும், துணிகள் துவைக்கும் போதும் கிளவுஸ் உபயோகிப்பது நலம்.

கைகளை சரியாக சுத்தம் செய்யாமல் விடும் போது அதில் உள்ள நச்சு பொருட்கள் கைகளை பாதிக்கின்றன. சோப்பு முதலியவைகள் நக இடுக்குகளில் தங்கி சொத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் கைகளில் சருமங்கள் வறட்சி அடைகின்றன. கைகளை பாதுகாக்க வெது வெதுப்பான தண்ணீரில் எலுமிச்சை பழம் பாதி, தரமான ஷாம்பூ, கல் உப்பு சிறிது கலந்து அதில் கைகளை நனைய விட்டு பின்பு பிரஷ்சினால் சுத்தமாக தேய்க்க வேண்டும். இவ்வாறு தேய்த்த பின் கைகளை வெளியே எடுத்து மீண்டும் சுத்தமான டவல் கொண்டு துடைத்து விட்டு மசாஜ் செய்யவும்.

இவ்வாறு மசாஜ் செய்தால் கைகளில் ஏற்படும் சுருக்கம் குறையும். இதற்கு ஆயுள் வேத எண்ணெய் கொண்டு ஆயுள்வேத முறைப்படி உள்ளங்கைகளில் உள்ள முக்கியமான ப்ரஷர் பாயின்ட்களை மசாஜ் செய்து வர நல்ல புத்துணர்ச்சி கிடைக்கும். மற்றும் இரத்த ஓட்டம் சீராகும். கைகளும் அழகாக காணப்படும்.

தொடர்ந்து நக பாலிஷ் உபயோகப் படுத்துவதால் நகங்களின் நிறம் மங்கி மஞ்சள் நிறம் படிந்து விடுகிறது. சிலருக்கு நக சுத்தியும் ஏற்படுகிறது.


இதற்கு மருதாணியை மஞ்சளுடன் சேர்த்து அரைத்து தடவலாம். நகங்களும் கிரகிக்கும் தன்மை உடையவை. என்பதால் அடிக்கடி நகபாலிஷ் போடும் போது நக எனாமல் உபயோகப்படுத்தினால் நகங்கள் மஞ்சள் அடையா.

இப்படி பராமரிக்கப்பட்டு அழகாக திகழும் கைகளில் விதவிதமாக அழகு படுத்திக் கொள்ளலாம். இதில் அழகாக மருதாணி இட்டுக் கொள்ளலாம். மருதாணியில் மருத்துவ குணங்கள் மிகமிக அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் கைவண்ணம்



ஏ.வாணி
மீசாலை வடக்கு.



பா.மதுமிலன்
யாழ்ப்பாணம்.



அ.சஞ்சீவ்
தரம் 9
யா.ஆரியபேக் கல்லூரி



இ.அனிற்றா ராஜி ஜெராமில்டா
தரம் 7
யா/செம்பியன் பற்று தெற்கு அ.த.க.பாடசாலை



சி.அகல்யா
தரம் 3
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## சிறுவர்களே! விரைவில் எதிர்பாருங்கள் வசந்த லோகம் சித்திரக் கதைத்தொடர்




## கனவு காணாதே

கனவு காணாதே பெரும் தன்மை கொள்ளாதே!
கனவு செய்யாதே கண்டதை உண்ணாதே!
கெடு சொல் கேட்காதே என்றும் கோள் சொல்லாதே!
நல்லதை குழப்பாதே கெட்டதை நினைக்காதே!
சொல்வதைக் கேட்காமல் உன்வழி நடக்காதே!
ஏழையைத் தள்ளாதே என்றும் எடுத்தெறிந்து பேசாதே!
பாவத்தை செய்யாதே என்றும் பழியை வளர்க்காதே!
உண்மையை ஒளிக்காதே என்சோதரனே நீ!
பகற்கனவு காணாதே!

கே.என் குருபரன்

## விலங்குகள் பற்றி...



1) ஓநாய் சிலந்தியே அதிக கண்களைக் கொண்ட விலங்கு. இதற்கு எத்தனை கண்கள்?

**8கண்கள்**

2) அதிகூடிய பார்வையைக் கொண்டது கழுகு. இதன் பார்வையின் தூர அளவு எவ்வளவு?

**100 மீற்றர் தூரத்திலிருந்து 2.5 சென்டி மீற்றர் அளவுள்ள வெட்டுக்கிளியைப் பார்க்கக் கூடியது. அதனை மனிதனால் 3.2 மீற்றர் தூரத்திலேயே பார்க்கலாம்.**

3) அட்டைதான் அதிக கால்களைக் கொண்ட விலங்கு. அதற்கு எத்தனை கால்கள்?

**710 இற்கு மேல்.**

ஸ்ரீ.பத்மஜா
தரம்—7
கிளி/ கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை.

## பண்புள்ள மனிதனுக்கு

1) சுறுசுறுப்பாக இரு ஆனால் படபடப்பாக இராதே.
2) பொறுமையாக இரு ஆனால் சோம்பேறியாக இராதே.
3) சிக்கனமாக இரு ஆனால் கருமியாக இருக்காதே.
4) அன்பாக இரு ஆனால் அடிமையாக இருக்காதே.
5) இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே.
6) கொடையாளியாக இரு ஆனால் ஒட்டாண்டியாகாதே.
7) இல்லறத்தை நடத்து ஆனால் காமவெறியனாக இராதே.
8) பற்றற்று இரு ஆனால் காட்டுக்குப் போகாதே.
9) வீரனாக இரு ஆனால் போக்கிரியாக இராதே.
10) நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே.

ந.இருஜ்னலினி
9 A
கிளி/ தம்பாட்டிம ம.கா. வித்.

## சொற்றேடல்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வி | | | | |
| 2 | | வி | | | |
| 3 | | | வி | | |
| 4 | | | | வி | |
| 5 | | | | | வி |
| 6 | | | | வி | |
| 7 | | | வி | | |
| 8 | | வி | | | |
| 9 | வி | | | | |
| 10 | | வி | | | |
| 11 | | | வி | | |
| 12 | | | | வி | |
| 13 | | | | | வி |
| 14 | | | | வி | |
| 15 | | | வி | | |
| 16 | | வி | | | |
| 17 | வி | | | | |

அருகே உள்ள கட்டங்களை நிரப்புங்கள் முடியாது விட்டால் விடையை கீழே பார்க்கவும்.

1) எஜமான் மீது வேலையாள் வைப்பது.
2) வருடப் பிறப்பு அன்று வழங்குவதும் பெறுவதும்.
3) வாழும் இடம்.
4) மீனின் கண்.
5) மாம்பழ வகைகளில் ஒன்று.
6) மறக்கமுடியாத நிகழ்வு.
7) மனோ தத்துவ இயல்புடன் தொடர்புடைய கற்கைநெறி.
8) ஒன்று சேர்த்தல்.
9) வாணிபம்.
10) ஒரு நட்சத்திரம்.
11) பத்தினி.
12) பழங்கால ஆயுதம்.
13) நகைச்சுவைக் கவிஞன்.
14) வலிகாமத்தில் ஓரிடம்.
15) ஜாலம் செய்யும் திறமை.
16) நீரில் வேகவைத்தல்.
17) இங்கு பதில் தருபவர்.

### விடைகள்

1.விசுவாசம்.
2.கைவிசேடம்.
3.வாழ்விடம்.
4.கயல்விழி.
5.அம்பலவி.
6.பிரியாவிடை.
7.உளவியல்.
8.குவித்தல்.
9.வியாபாரம்.
10.அவிட்டம்.
11.பதவிரதை.
12.அம்புவில்.
13.விகடகவி.
14.நந்தாவில் /கோண்டாவில் /கொக்குவில்.
15.மாயாவித்தை.
16.அவித்தல்.
17.வித்துவான்.

## விஞ்ஞான கண்டுபிடிப்புகள்

1) விசையைக் கண்டுபிடித்தவர் - நியூட்டன்
2) ஆவர்த்தன அட்டவணையைக் கண்டுபிடித்தவர் - மேண்டலீவ்
3) இரட்டைச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர் - வில்லியம் ஹாவே
4) குருதி இனங்களைக் கண்டுபிடித்தவர் - கார்ஸ் லான்ஸ்ரைனர்
5) வோல்றா காவடுக்கைக் கண்டுபிடித்தவர் -அலெக்ஸன்டர் வோல்றா
6) அணுவில் உள்ள புரோத்தனைக் கண்டுபிடித்தவர் -இறதபோட்
7) நியூத்திரனைக் கண்டுபிடித்தவர் -ஜேம் சட்விக்
8) இலத்திரனைக் கண்டுபிடித்தவர் -J.J தொம்சன்
9) விலங்கு மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் -லூயிகி கல்வானி
10) ஓம் விதியைக் கண்டுபிடித்தவர் -ஜோர்ஜ் ஓம்

மயூரினி —செல்வராஜா
தரம்—10
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

## ஆந்தையும் கழுகும்

பாழடைந்த கோபுரம் ஒன்றின் உச்சியில் ஓர் ஆந்தை வாழ்ந்து வந்தது. அதற்கு நிறைய குஞ்சுகள் இருந்தன. அம்மா ஆந்தைக்கு எதையும் மிகைப்படுத்திப் பேசும் குணம். அதோடு தற்பெருமை வேறு.

ஒருநாள் அந்த கோபுரத்துக்கு ஒரு கழுகு வந்தது. அந்த இடம் அதற்குப் பிடித்து விட்டது.

'' நண்பா,நானும் இங்கேயே தங்கிவிடுகிறேன் ?'' என்று ஆந்தையிடம் கேட்டது.

''தாராளமாக இருக்கலாம். ஆனால், நீ என் குஞ்சுகளைக் கண்டால் இரையாக்கிக்கொண்டு விடுவாயே ?'' என்றது ஆந்தை.



''நண்பனாகி, இங்கேயே தங்க ஆரம்பித்து விட்ட பிறகு, உன்குஞ்சுகளைத் தின்பேனா? உன்குஞ்சுகள் எப்படி இருக்கும் என்று கூறு. அவைகளைப் பார்த்தால் அடையாளம் கண்டு பிடித்து தீங்கு விளைவிக்காது காவலாக இருப்பேன்'' என்றது கழுகு.

''என் குஞ்சுகள் பேரழகு வாய்ந்தவை. அவைகளின் நெற்றி, மூக்கு, கண்கள், காதுகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.அத்தனை அழகு. அவை கத்தினால் இன்று முழுவதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்'' என்று வழக்கப்படி மிகைப்படுத்திப் புகழ்ந்தது ஆந்தை.

கழுகு வெளியே போய் விட்டு வந்தபோது ஆந்தைக் குஞ்சுகள் வெளியே வந்து விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்த கழுகு, ''இத்தனை அழகற்ற குஞ்சுகள் ஆந்தையின் குஞ்சுகளாக இருக்கா'' என்று எண்ணி அவைகளை அடித்து இரையாக்கிக் கொண்டது.

ஆந்தை வந்து கதறியது.

''உன் குஞ்சுகள் அழகற்றவை என்று கூறியிருந்தால் தின்றிருப்பேனா? தவறு என்னுடையதில்லை. நீ மிகைப்படுத்தி உன்குஞ்சுகள் அழகானவை என்று கூறினாய். மிகைப்படுத்தும் குணத்தின் விளைவே இது'' என்றது கழுகு.

எதையும் மிகைப்படுத்தினால் தீங்கில்தான் முடியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராதே! வரவல்லாய்...



கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**கம்பவாரிதி இ.ஜெயராஜ் செப்டெம்பர் - 2003 மல்லிகை இதழில், 'வாராதே! வரவல்லாய்...' என்ற தலைப்பில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் பற்றி ஒரு கட்டுரை எழுதி இருந்தார். அந்தக் கட்டுரை இங்கே அப்படியே மறுபிரசுரம் செய்யப்படுகிறது.**

ஒரு நிமிஷம் பொறுங்கள்!

இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்க வேண்டாம். உங்களுக்காக இதை நான் எழுதவில்லை. என்ன முறைத்துப்பார்க்கிறீர்கள்? புத்தகம் உங்களுடையதானாலும், கட்டுரை எனதல்லவா? யார் படிக்க வேண்டும் என நான் தானே சொல்ல வேண்டும்.

''இந்த 'லூசன்' எப்பவும் இப்படித் தான்''.உங்கள் முணுமுணுப்புக் காதில் விழுகிறது. நீங்கள் என்ன திட்டினாலும், இந்தக் கட்டுரை உங்களுக்கானதல்ல என்பதுதான் உண்மை.

பின் யாருக்கு இக் கட்டுரையெனக் கேட்கிறீர்களா?

இந்த மண்ணில் பிறந்து,இன்று உலகெல்லாம் பரவியிருக்கும் என் அன்பான இரத்தத்தின் இரத்தங்களுக்காகவே இக் கட்டுரை.

சில நாள் பலபிணிச் சிற்றறிவு உடைய மனிதர்கள்,தேர்ந்தெடுத்துத் தேவையானதைப் படிக்க வேண்டும் என்று, அறிவிற்காகக் கல்வியென நினைத்த, சில பழைய பைத்தியக்காரப் புலவர்கள் சொல்லியிருக்கிறார்களாம்.

அதனால் தான், உங்களுக்காக எழுதப் படாத இக் கட்டுரையைப் படிக்க வேண்டாம் எனச் சொன்னேன்.

சரி, நீங்கள் இனி அடுத்த கட்டுரைக்குப் போகலாம்!

என்ன இவ்வளவு சொல்லியும், கேட்க மாட்டேன் என்கிறீர்கள்.பத்திரிகை படிப்பதையே அறிவென்று நினைக்கும் உங்களை, திருத்தவா முடியும்?இதற்கு மேல் உங்கள் இஷ்டம்.

காலத்தை வீணாக்குவது என்று நீங்கள் முடிவு செய்துவிட்டால், அதைத் தடுக்க நான் யார்? 'கெடுகுடி சொற் கேளாது' என்று சும்மாவா சொன்னார்கள்.

படித்துத் தொலையுங்கள்!உங்களோடு மினக்கட எனக்கு நேரமில்லை.நான் சொல்ல வந்ததை,சொல்ல வந்தவர்களுக்குச் சொல்லவேண்டும். சொல்கிறேன்.

*****

நம் செம்பாட்டு மண்ணில் பிறந்து, இன்று தேசமெல்லாம் வேரூன்றி நிற்கும், என் உடன்பிறப்புக்காள்! உங்களுக்காகத் தான் இக்கட்டுரை வரைகிறேன். உங்களில் ஓரிருவராவது இக்கட்டுரையைப் படிப்பீர்கள் தானே?

ஏன் கேட்கிறேன் என்றால்,'டொச்' என்றும், 'பிரெஞ்' என்றும், 'இங்கிலிஷ்' என்றும் இன்று பலமொழிகளை வெளுத்து வாங்கும் உங்களுக்கு, தமிழ் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறதா? என, எனக்கு ஒரு சிறு ஐயம்!ஏன் இந்த ஐயம் என்கிறீர்களா? எல்லாம் உங்களால்தான் ஐயா!

அண்மையில், 'சுவிஸி'லிருந்து வந்திருந்த, என் அக்காவின் பேரன், தன் மாமனைப் பார்த்துக் கேட்டானே ஒரு கேள்வி, ஊரே சிரித்துவிட்டது போங்கள். தன் அன்புப் பேரனுக்கு என் அக்கா, ஆசையாசையாய் ஆனை வாழைப்பழம் வாங்கிக் கொடுக்க, அவன் அதைத் தின்னும் அவதியில், குளிக்கத் தயாராய்த் துண்டோடு கிணற்றடியில் நின்ற தன் மாமனிடம் கொண்டோடிப்போய், 'பிளீஷ் அங்கிள், வாழைப்பழத்தைஒருக்கா கழட்டித்தாங்கோ' என்று கேட்க, எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அந்த மாமன், அக் கேள்வியால் பதறியடித்து, இடுப்பிலிருந்த துண்டை இறுகப் பொத்திய காட்சி கண்டு, எங்கள் ஊரே சிரித்தது. வாழைப்பழத்தை உரித்துத் தாருங்கள் என்பதற்குப் பதிலாகக், கழட்டித் தாருங்கள் என்கிறது ஈழத் தமிழினத்தின்'(F)பொறின்' வாரிசு.

பாவம்! 'ரமில்ராய்', உங்கள் பிள்ளைகளிடம் அவள் படும் பாட்டைப் பார்த்ததால் தான், மேற்சொன்ன ஐயம் வந்தது.தயவு செய்து கோவிக்காதீர்கள்.'எங்களுக்கா தமிழ் தெரியாது? இதோ!உம் கட்டுரையை முழுக்கப் படித்துக் காட்டுகிறோம்என்கிறீர்களா?

நன்றி, நன்றி, நன்றி.தொடருங்கள்.

*****

எல்லாத் தீமையுள்ளும் ஒரு நன்மையுண்டு என்று, அறிஞர்கள் சும்மாவா சொன்னார்கள்? உரிமைக்காகத் தொடங்கப்பட்ட போரால், உயிரிழப்பு, உறுப்பிழப்பு, உடமையிழப்பு என பலபேர் அனுபவித்த தீமைகளுக்குள், உங்களுக்கான நன்மை ஒளிந்திருந்தது மறுக்க முடியாத உண்மை. ஈழத் தமிழர்கள் இன்னலுக்காளாகிறார்கள் என, உலகம் முழுவதும் பரவியசெய்திகளால், வளம் மிக்க நாடுகள் பல வாசல் திறக்க, இன்னலுற்றவர்களாய் இனங்காட்டி, மின்னல் போல் உள்நுழைந்தீர்கள்.பக்கத்து வீட்டு முருங்கைக்காய் திருட முனைந்து, விழுந்து முறிந்த முழங்கையை, இராணுவத் தாக்குதலில் ஏற்பட்ட விழுப்புண்ணாய் நீங்கள் விபரிக்க, தூதராலயங்கள் பல துடிதுடித்துப் போயின. தேசத்தைக் காக்க முன்வந்த பல உண்மைப் போராளிகளின், ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, உறவெல்லாம் காட்டி உங்களில் பலர் ஓடித் தப்பினீர்கள்.வெள்ளைக்காரனின் பெருந்தன்மையில், உங்கள் கள்ளங்கள் விலைபோயின.எது, எப்படியோ? செல்வந்த நாடுகளின் உள்வந்த காரணத்தால், இன்று நீங்கள் தான் ஐயா பெரிய மனுசர்கள்.

*****

'பணம் பத்தும் செய்யும்' எனும் பேருண்மையைத் தெரிந்துகொண்டு, பலம் பெற்ற உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. 'எங்களைக் கிண்டலடிப்பதற்குத் தான் இக் கட்டுரையா?' நீங்கள் கோபப்படத் தொடங்குவது தெரிகிறது. கொஞ்சம் பொறுங்கள். சமூகத்தின் பெரிய மனிதரான உங்களை நான் பகைத்துக்கொள்வேனா? ஈழத் தமிழினத்திற்கு எழுச்சி ஏற்படுத்திய இயக்கங்களே, உங்களுக்கு மரியாதை செய்யும் இக் காலத்தில், உங்களைப் பகைத்துக்கொள்ள நான் பைத்தியக்காரனா, என்ன? உங்களுக்கு நன்மை தருகிற ஒரு புத்திமதியைச் சொல்லத்தான், இக் கட்டுரை வரைகிறேன். தயைகூர்ந்து கோபப்படாமல் பொறுமையாய் மேலே படியுங்கள்.

****

'டொக்டராக' வேணும், 'எஞ்சினியராக' வேணும், 'எக்கவுண்டனாக' வேணும் என்று, யாழ். இளைஞர்கள் கனவு கண்டதெல்லாம் பழைய கதை.'வெளிநாடு போக வேணும்' ,இஃதொன்றே இன்றைய எல்லா இளைஞர்களினதும் ஒரே கனவு. கனவை உருவாக்கியவர்கள் நீங்கள். யாழ் மண்ணின் அடிப்படையையேஆட்டங்காண வைத்த உங்கள் ஆற்றல் கண்டு அதிசயிக்கிறேன். வெளிநாடு போய்ச் சேர்ந்த ஓரிரு மாதங்களுக்குள்ளேயே, கலர் கலரான கார்களுக்கு முன்னின்று,'கோர்ட்' டோடும், 'சூட்'டோடும், 'ரை'யோடும், நீங்கள் அனுப்பி வைத்த புகைப்படங்களைக் கண்டு, யாழ்ப்பாணமே கதிகலங்கிப் போய்விட்டது. அந்தக் கார் உங்கள் சொந்தக் கார் இல்லையாம். பொறாமைக்காரர் சிலர் உங்கள் புகழைக் கெடுக்க முனைந்தார்கள்.

நாங்களா நம்புவோம்? உங்கள் புகைப் படங்களைப் பார்த்த பிரமிப்பிலிருந்து, நாங்கள் இன்னும் விடுபடவே இல்லை. 'பிளேன்ரீக்கும் வழியில்லாமல் காய்ந்து திரிந்த உங்கள் தோற்றத்தில்,'கோர்ட்'டாலும், 'சூட்'டாலும், 'ரை'யாலும் ராஜகளையே வந்துவிட்டது போங்கள். உங்கள் வெளிநாட்டு விலாசத்தால், இங்கு எல்லோரதும் மனநிலை மாறிவிட்டது மற்றொரு கூத்து. இங்கிருந்த போது தெரியாமல் சினேகிதர்களோடு நீங்கள் 'பீடி' குடித்ததை, பக்கத்து வீட்டு 'அங்கிள்'வந்து சொல்ல, ஆவேசம் வந்து, உங்களை அடிஅடியென்று அடித்து, இல்லாத குல மானம் போய் விட்டதாய் ஏங்கிய, உங்கள் தகப்பனாரும், தாயாரும், லண்டனில், நீங்கள் '(B)பாரில்' இருந்து எடுத்தனுப்பிய புகைப்படத்தில், கையில் வைத்திருப்பது 'விஸ்கியா?''பிராண்டியா?' என, பக்கத்து வீட்டாரைக் கூட்டி, பட்டிமண்டபம் நடத்துகிற அளவில் முன்னேறி இருக்கிறார்கள் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன். 'இவனுக்குப் பொம்பிள கொடுக்கிறத விட, என்ட மேள பாழுங்கிணத்தில தள்ளுவன்' என்ற உங்களின் மாமா, 'மச்சானுக்கு 'பேத் டே கார்ட்'போட்டனியே!' என்று, இன்று மகளை அக்கறையாய் விசாரிக்கிறார்.

இங்கிருக்கும்போது,சொறிநாயை விடக் கேவலமாய் உங்களைப் பார்த்த உங்களின் மச்சாள், உங்களிட்ட இருந்து ஒரு கிழமை 'கோல்' வரவில்லை என்றதற்காக,ஏழு கிழமையா அந்தோனியார் கோயிலுக்குப் போறாவாம். தெரியாமல் முழங்காலுக்கு மேல ஒரு நாள் சட்டை ஏறியதற்காக, தன்ட மகளுக்குக் காலில சூடு போட்ட செல்லம்மா மாமி, இப்ப தண்ட மகள் வெள்ளைக்காரனோட நீச்சல் உடையில குளிக்கிற படத்தை, ஊரெல்லாம் கொண்டுபெருமையாய் காட்டுது.

ஊரில குறுக்குக் கட்டோட இலுப்பங் கொட்டை பொறுக்கின எங்கட குஞ்சாச்சி, மகன் கனடாவில இருந்து காசனுப்ப, இப்ப கொழும்பில,'மக்ஷியும்', 'ஹை ஹீல்'சும் போட்டுக்கொண்டு,வெள்ளவத்த மாக்கற்றுக்குள்ள, 'றுப்பியல் பஹாய்' என்று சிங்கள வியாபாரி சொன்ன ஈரப்பிலாக்காயை 'நோநோ, ஐ கிவ் ஒன்லி (F)பிப்ரீன் றுப்பீஷ்' எனக்கூறி,இல்லாத தன்ர ஆங்கில ஞானத்தை அவனுக்குக் காட்ட, அநியாயமாய் பத்து ரூபாவை அதிகம் குடுத்துட்டு வருகுது.

சும்மா சொல்லக் கூடாதையா, அங்க இருந்து நீங்கள் ஆட்டின ஆட்டத்தில, இங்க எங்கட ஆணிவேரே ஆடிப்போனது உண்மையிலும் உண்மை.

*****

இதுகளப் பாத்திட்டும் 'எஞ்சினியருக்கும்', 'டொக்டருக்கும்' படிக்க, எங்கட பொடியள்என்ன விசரங்களே? யாழ்ப்பாணப் பொடியள் அறிவாளிகளாக்கும்!நீங்கள் தான் அவர்களின் இன்றைய குறிக்கோள்கள்.

உங்களைக் குறை சொன்னதாய்க் கோபித்தீர்களே! பார்த்தீர்களா?உங்கள் பெருமையை, எவ்வளவு அழகாய்,என் கட்டுரை எடுத்துரைக்கிறது. இனியேனும்,ஆறுதலாய்த் தொடர்ந்து படியுங்கள்.

*****

சும்மா சொல்லக்கூடாது. ஊர் பேர் தெரியாத தேசங்களுக்குப் போய், பத்துப் பதினைந்து ஆண்டுகளில், நீங்கள் செய்திருக்கும் சாதனைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாதுதான்.

என் முன்னைத் தவப்பயனால், உங்களை எல்லாம் நேரில் வந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. என் அனுபவங்களை எப்படிச் சொல்ல. லண்டனில் மட்டும் இன்றைக்குப் பதினான்கு கோயில்களாம்.

கோயில்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறதாம்.அங்கு வந்து இந்தச் செய்தி கேள்விப்பட்டதும், ஆத்மீகவாதியான நான் ஆனந்தப்பட்டுப்போனேன். பிறகுதான் தெரிந்தது உண்மை.

கோயில்களுக்கென்று அந்நாட்டு அரசாங்கம் காசு ஒதுக்குகின்றதாம். அரசாங்கமே காசு ஒதுக்கும்போது, நாங்கள் ஒதுக்கக் கூடாதா? என்று, அறங்காவலர்களுக்குள்ளே அடிதடி சண்டையாம். செல்வாக்கால் ஒருவர் வெல்ல, பிரிந்தவர் மற்றொரு கோயில் தொடங்குகிறாராம். பதினான்கு கோயில்கள் என்றால் பதின்மூன்று சண்டை என்று அர்த்தமாம். நண்பன் ஒருவன் சொன்னான். உண்மை,பொய் எனக்குத் தெரியாது.

ஆனால், கவலையாய் இருந்தது.கனடா போனபோது, இங்கு பதினாறு கோயில்கள் என்று ஒருவர் சொல்லத் தெடங்க, காதுகளை மூடிக்கொண்டேன். சரி.

அதை விடுங்கள். கோயில்களுக்குள் கடவுள்கள் படும்பாடு இருக்கிறதே! அது பெரிய பாடு. எற்புத்துளை தொறும் லண்டன் குளிரில், பரமசிவனுக்குப் பச்சைத் தண்ணீரில் அபிஷேகம், அன்றாடம் நடக்கிறது.

தங்கள் குளிர்தீர 'கோர்ட்'டோடும்,'சூட்' டோடும் நின்று கொண்டு,பக்தர்கள் அபிஷேகம் செய்விக்கிறார்கள். வெறும் மேலை, பனிக்குளிரும், பச்சைத் தண்ணீர்க் குளிரும் சேர்ந்து தாக்க,நடுநடுங்கிக் கொண்டிருக்கிறார் பரமன்.

வேதம் வழங்காத நாடுகளுக்கு வரமாட்டேன் என்றிருந்த அவரையும், கட்டாயமாய் அங்கு கொண்டுபோய் படுத்தும்பாடு... பாவம் சிவனார்! அவரைப் பார்க்க, அழுகையழுகையாய் வந்தது எனக்கு.

******

கோயில் நிலையே இதுவென்றால், வீட்டு நிலையைக் கேட்கவா வேண்டும்? வெள்ளைக்காரன் விரித்த கடன் வலையுள் விழுந்து, வீடு, கார் என எல்லாவற்றையும் கடனுக்கு வாங்கி, மாதாமாதம் அக்கடன் கட்டுவதற்காக, மாய்ந்து கொண்டிருக்கிறார்கள் நம் மனிதர்கள்.

கணவன்'மோனிங் டியூட்டி' போய்வர, மனைவி 'நைட் டியூட்டி' போகிறாள்.

இந்த 'டியூட்டி'களுக்கிடையில்,'அக்சிடன்'ராய் பிறந்த குழந்தை, அநாதையாய் ஆகாயம் பார்த்தபடி இருக்கிறது. அக்கிரமம் ஐயா! அக்கிரமம்! ஒரு மாதக் கடன் கட்டத் தவறினாலும், உரிமைக்காரர்களால் அபகரிக்கப்படக்கூடிய, இருபதாண்டு கடனிலுள்ள, வீட்டையும், காரையும், சொந்த வீடு, சொந்தக்கார் எனக் கூறிப் பெருமைப் படுகிறது ஒரு கூட்டம்.

கூலி வேலை செய்யும் இடத்தில்,வெள்ளைக்கார எஜமான்களிடம் நல்ல பெயர் வாங்க, தலைமயிரை மட்டுமன்றி, கால்மயிரையும் வழித்துக் கொள்கின்றனர் நம் காரிகையர்.

நவீன இயந்திரங்கள் நிறைந்த அவர்களின் குசினி, அடுத்த வீட்டு வெள்ளைக்காரர்களுக்கு மணந்துவிடும் என்பதற்காக,சமையல் இன்றிக் கிடக்கிறது.

லட்சக் கணக்கான ரூபாயில் வாங்கிய 'குஷன் செற்றி', குந்தியிருந்து குதூகலிக்க, உறவேதுமின்றி ஓய்ந்திருக்கிறது.

பொருள் நிறைந்தும் போகம் இல்லாத வாழ்க்கை.

'எங்கட றோட்டில 'ரமில்ஸ்'இல்லை. அவையளோட இருந்தால்பெரிய பிரச்சினை.

இது தன்னை மறந்த ஒரு தமிழ்ப்பெண்ணின் பெருமிதம். இப்படிக்கூத்துக்களுக்கு அங்கு குறைவே இல்லை.

******

நீங்கள் என்ன செய்வீர்கள்?கை நிறையக் காசு கிடைக்கிறது.

வெள்ளைக்காரன் ஏனென்றும் உங்களைத்திரும்பிப் பார்க்கிறானில்லை. இங்கு 'பறையன்'என்று சொல்லி சிலரை நீங்கள் ஒதுக்கியது போல, அங்கு 'பாக்கி'என்று எல்லோரையும் சேர்த்து ஒதுக்குகிறான் அவன்.

இந்த நிலையில் உங்களது பணப் 'பவுசை' யார் மூலம் காட்டுவது? அகப்பட்டவர்கள் உங்கள் குழந்தைகள்தான். பள்ளிக்கூடத்தில் வெள்ளைக்காரர்களாகவும், வீட்டில் தமிழர்களாகவும், வேஷம் போட்டு, எது வேஷம்? எது நிஜம்? என்று தெரியாமல், அர்த்தநாரீஸ்வரராய் இரண்டும் கெட்டுக் குழம்பும் அவர்கள் நிலை பரிதாபம்!

''வெள்ளைக்காரர்களாகுங்கள்''என்று அவர்களை இலட்சியப்படுத்தி,'தமிழராகவும் இருங்கள்' என்று , அவர்கள் முதுகில் நீங்கள் ஏற்றும்,பண்பாட்டு மூட்டையின் சுமை தாங்க முடியாமல், அக்குழந்தைகள் படும்பாடு... பரிதாபத்திலும் பரிதாபம். ''அங்கிளுக்கு ஒரு 'டேவாரம்' பாடிக்காட்டுங்கோ'','டாடி' சொல்ல, 'தொடு உடாய செவியேன் விடாய்' என, ஆங்கிலத்தில் எழுதிப்படித்த தமிழ்த் தேவாரத்தைப் பிள்ளை பாடுகிறான். 'வெரி கிளவர் பாய்' என்று தேவாரத்திற்கு கை தட்டுகிறார் 'மம்மி'. செத்தார் சிவபெருமான் என்று ஓடியே வந்துவிட்டேன்.

''என்ட 'டோற்றர்', நல்லா'டான்ஸ்' பண்ணுவா''என்று சொல்லி, மகளை எங்களுக்கு ஆடிக்காட்டச் சொல்ல, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எல்லாம் கழற்றி எறிந்து, காற்சட்டையோடு வந்து நின்ற அந்தக் கலவன் குஞ்சு, 'இன்ன ரவம் செத்தனை யஷோடா' என்று பாடி ஆடத்தொடங்க, நான் செய்த தவத்தால் ஏதோ ஒருமாதிரித் தப்பி ஓடி வந்தேன்.

வேறொரு நாள், ''இந்த 'டேட்டி ராஸ்கள் பஸ்சுக்குள்ள என்னைப் பார்த்து என்ன மச்சான்' என்று 'ரமில' கேக்கிறான். வெள்ளைக்காரங்களெல்லாம் திரும்பிப்பார்க்கிறாங்கள். 'மனஸ்'தெரியாத (B)பாஸ்ரேட்'' சொல்லும் சொல்லின் விரசம் தெரியாமல், மனைவியுடன் என் நண்பன் உரையாடியது காதில் விழுந்தது.

அவர்களே பிறகு''ஆனையிறவு அட்ராக்நைஸ் என்ன?, எப்படியும் எங்களுக்கு 'ரமில் ஈலம்' கிடைக்கும் பாருங்கோ. பிரபாகரன் இஸ் வெரி கிரேட்.'' என்று என்னிடம் பாராட்டினார்கள். இப்படி தெளிவான குழப்பத்தில், அல்லது குழப்பமான தெளிவில் வாழும் உங்கள் நிலை இங்குள்ளவர்களுக்குத் தெரியவா போகிறது? அதனால் தான், உங்களுக்கு முக்கியமான ஒரு புத்திசொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காகத் தான் இந்தக் கட்டுரை.

*****

(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராதே! வரவல்லாய்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஊரெல்லாம் சுற்றி ஒரு மாதிரி தேர் இருப்பிடத்திற்கு வந்துவிட்டது. இனி, விஷயத்திற்கு வருகிறேன்.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி, எங்களில் பலபேர் தாய் மண்ணிற்கு வருகிறீர்கள்.

பதினைந்தாண்டுகளுக்குப்பிறகு தாய் மண்ணைப் பார்ப்தென்றால்சும்மாவா? போர் நிறுத்தத்தால் விலையேறியுள்ள வீட்டை விற்கவும், ஆயுள் முழுக்க உங்களுக்கு அடித்துக்கொடுத்துவிட்டு, அனாதை விடுதிகளில் இருக்கும் 'டாடி'யையும், 'மம்மி'யையும், உங்கள் பிள்ளைகளுக்குக் காட்டவும், பதினைந்தாண்டுகளில் நீங்கள் பெற்றிருக்கும் வெள்ளைக்காரத் தகுதிகளை விளம்பரப்படுத்தவுமே, உங்களில் பலர் இங்கு வருவதாய், என் நண்பன் ஒருவன் குற்றம்சாட்டுகிறான்.

அவன் கிடக்கிறான், அறிவில்லாதவன். நீங்கள் எதற்காக வந்தாலும், வருவதற்கு முன் இந்தக் கட்டுரையை வாசிப்பது நல்லது. அதற்காகத் தான் இக் கட்டுரையை எழுதுகிறேன்.

****

ஊருக்கு வெளிக்கிடும் நாள்,கொஞ்சம் (f)பெப்யூம்' போத்தல்கள், 'ஒ(f)பிஸ்'சில் 'டியூட்டி'க்காக வெள்ளைக்காரன் தந்த சேட்டில், ஏமாற்றி எடுத்தவை கொஞ்சம்.

உங்கள் மனைவியும் பிள்ளைகளும் பாவித்த சீலை, சட்டைகள் சில.'கிறிஸ்மஸ் சேல்ஸ்சில்' வாங்கிய மலிவு விலைப் பொருட்கள் கொஞ்சம். (B)பிஸ்கட், சொக்லேட் முதலிய இன்ன பிற மலிவுப் பொருட்கள்.

இதைவிட, நீங்களும் உங்கள் மனைவி பிள்ளைகளும், இங்குள்ள ஏழைச் சொந்தக்காரர்களுக்குப் 'பவுசு' காட்ட, புதிதாய் வாங்கிச் சேர்த்த 'ரவுசர்', 'சேட்', சட்டை, சப்பாத்து என சாமான்களால், இரண்டு, மூன்று பெரிய பெரிய 'சூட்கேஸ்'சுகளை நிரப்பிவிட்டீர்களா? இனிவெளிக்கிட வேண்டியது தான்.

கொஞ்சம் பொறுங்கள். முக்கியமான இரண்டு பொருட்களை மறந்து விட்டீர்கள். எவை என்று தெரிகிறதா? நேற்று 'சுப்பமாக்கற்'றில், உங்கள் பாசத்தின் அடையாளமாய், அனாதை விடுதியிலுள்ள அப்பாவுக்குக் கொடுக்கவென உங்கள் அன்பைப் போன்ற, செயற்கை ரோஜா மலர்களாலான பூச்செண்டு ஒன்றைவாங்கினீர்களே? அதையும் எடுத்துவையுங்கள்.

அடுத்தது,வெளிநாட்டிலிருந்து வந்தவர் நீங்கள்என்று மற்றவர் தெரிந்து கொள்ள, முழுசுமில்லாமல், அரையுமில்லாமல்,முக்காலாய் புதிதாய் வந்திருக்கிறதே ஒரு காற்சட்டை. அதிலும் ஐந்தாறைத் தூக்கிப் போடுங்கள். எல்லாம் 'ரெடி' இனிப் புறப்படலாம், திரும்பவும் மறந்துவிட்டது. இங்கு நாங்கள் காய்கறி வாங்கும் கூடையைப் போல, கைக்குழந்தையைக் கிடத்த ஒன்று வைத்திருப்பீர்களே! அதையும்எடுங்கள்.

ஏனென்று கேட்கிறீர்களா? அப்போது தான், பக்கத்துவீட்டு சின்னம்மா, 'உதென்ன தங்கச்சி' என்று கேட்க, 'அதெங்கட (B)பபாவைக் கிடத்துறதுக்கு' என்று உங்கள் மனைவி பெருமையாய் சொல்லலாம். 'குழந்தைய கிடத்துறதுக்கு என்னத்துக்கு மேனே கூடை? தோளில் கிடத்தலாம் தானே! கூடையோட வச்சிட்டு அங்கால பாக்கேக்க, நாய் கீய்கொண்டு போனா என்ன செய்யுறது?' சின்னம்மா பேத்தனமா கேட்கும். ''என்ன அன்ரி? நீங்கள் சரியான 'கன்றி புறூட்டா' இருக்கிறீங்க,பேபியைத் தோளில போட்டா, அது 'சூ' செய்து,'டிரெஸ்ச' எல்லாம் பழுதாக்கியெல்லே போடும்.''உங்கள் மனைவி பெருமையாய் சொல்லுவா. அவா குழந்தையா இருக்கேக்க, தன்ட தோளில் கிடந்து, பெஞ்ச 'சூ'வை 'என்ட சின்னக் குஞ்சு தேன்மாரி பொழியுது'எனச்சொல்லி, தன்ட சீலைத்தலைப்பால துடைச்சுவிட்டத, சின்னம்மா பெருமையாய்ச் சொல்லும்.

''யூறினை சீலையால துடைக்கிறனீங்களோ? 'டேட்டி ஹபிற்'லண்டனில டெற்றோல்'போட்டுத் துடைக்காமல், நாங்கள் பிள்ளையைத் தொட மாட்டம்'' உங்கட மனைவி பெருமையாய் சொல்ல, சின்னம்மா பாவம் வாயை மூடிக்கொள்ளும். இவையெல்லாவற்றுமாகத்ததான் அந்தக் கூடையையும்எடுத்து வைக்கச் சொல்கிறேன்.

சரி,இனி 'சூட்கேசை' மூடலாம். கொஞ்சம்பொறுங்கோ! பிறகும் உந்த வீடியோ கமிராவை விட்டிட்டீங்களே! என்னது அதை தோளில மாட்டப்போறீங்களோ? அதுவும் சரி தான்.அப்ப தான் நீங்கள் வெளிநாட்டில இருந்து வர்றது, மற்றவையளுக்குத் தெளிவாய் தெரியும். சரி பின்னை'சூட்கேசை' மூட வேண்டியது தான். நீங்கள் முக்கால் கால் சட்டைபோட்டுவிட்டீங்களா? உங்கள்மனைவி தன் உறுப்புக்களின்முழுப் பரிமாணத்தையும்வெளிப்படுத்தும் 'ரீசேட்டும், ஜீன்சும்' போட்டுவிட்டாரா? பதின்மூன்றுவயதான, பருவ எல்லையில் நிற்கும்உங்கள் பாலகியின், பட்டராலும்,சீஸ்சாலும் கொழுத்துக் கிடக்கும்தொடையின், முக்கால்பாகம்தெரியும் காற்சட்டை போட்டாகி விட்டதா? கூடையுடன் குழந்தையைஎடுத்துவிட்டீர்களா? தூக்குங்கள்'சூட்கேசை',இனி 'ரமில் ஈலம்' போக வேண்டியது தான்.

****

கட்டுநாயக்கா விமான நிலையம். கொண்டு வந்த பெரிய சூட்கேசுகளைநீங்கள் ஏற்ற, அங்குள்ள பழையதள்ளுவண்டிகள், தள்ளாதவண்டிகளாய் தடுமாறும். உங்கள் மனைவி, 'வேறு பலவற்றோடு'அதையும் தள்ளிக்கொண்டு வெளியேவர, 'பெரியண்ணே! குஞ்சக்கா!எடி பேபி!பெரியவன்!'இப்படிப் பல குரல்கள் ஒருமித்துவரவேற்கும். உங்களை வரவேற்கவென யாழ்ப்பாணத்திலிருந்து, 'வான்' பிடித்து வந்த உங்கள்உறவுக் கூட்டத்தின் கூக்குரல் அது. பதினைந்து வருஷத்துக்கு முன்பழகிய பழைய உறவாய் நினைந்து, உங்களைக் கண்டு அதுகள்பரவசப்படும். உங்கள் பாடு கொஞ்சம் சங்கடம் தான். ''இதுகள் என்ன 'டீசன்ற்'இல்லாமல் கத்துதுகள்?'' இங்கஇருக்கேக்க 'சுத்து'க்குப் போனஉங்கள் மனைவி, சுறுசுறுவென்று கோபிப்பா.'ஹாய்! ஹவ் ஆர் யூ' ஏதோ வெளிநாட்டுத் தலைவர் போல,நீங்கள் தூர இருந்து கைகாட்டுவீர்கள். உங்கள்ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்தியதில், உங்களுக்கோர் மகிழ்ச்சி. உறவுகள் உங்களைச் சூழ்ந்து கொள்ளும். 'எடேய்! எங்கட சித்தன்ட பெட்டையே இது! பார்மொழுமொழுவென்டு ஏன்ன வடிவாநிக்குது' என்று சொல்லி குஞ்சம்மா தன்ட வெத்தில வாயால, உங்கடமேளப் பிடிச்சு ஒரு தரம் கொஞ்சும்.அருவருப்பில உங்கள் மகள்முகத்தைச் சுழித்துக் கொள்வாள்.'என்ட ராசாத்தி! என்னைப்பாக்க வெண்டோ ஓடி வந்தனீ?' சொல்லியபடி குஞ்சம்மா உங்கட பெரிய 'சூட்கேசை'ப் பார்க்கும்.அதெல்லாம் தனக்குத்தான் என்ற அதன் ஆசை கண்களில் தெரியும்.'சூட்கேசின்' எண்ணிக்கை கூடக்கூடஉறவின் உரிமை பெருகும். நீங்கள்சும்மாவா இருக்கப் போகிறீர்கள்?இடைக்கிடை 'சென்ற்' அடிச்சு,''இந்த 'ஹொட் கிளைமற்' துப்பரவா ஒத்துக்கொள்ளுதில்ல அதுக்கில்ல இது வேற கசகசக்குது'' என்றுபதினாறு பவுன் சங்கிலியவெளியில தூக்கிப் போடுவீங்கள். அதைப் பார்த்த உங்கட சின்னத்தங்கச்சி, 'எப்படியும் அண்ணன் எனக்கும் ஒண்டு கொண்டு வந்திருக்கும்' என்று ஏங்கத் தொடங்கும். போதாக்குறைக்கு''மாமா! இஞ்ச 'பவுன்ஸ்' மாத்தலாமே?''என்று சொன்னபடி, கடன்காட்டுகளால் கர்ப்பமுற்றிருக்கும் உங்கள் 'பேர்சை'த்தட்டிக்காட்ட அவ்வளவும் 'பவுன்ஸ்'தான் என நினைந்து, உங்கள் உதவியால்குமரைக் கரையேற்றலாம் எனும் மகிழ்ச்சியில், 'அதெல்லாம்நானெல்லோ மாத்தித் தர்றது, நீங்கள் ஒண்டும் யோசிக்காதேங்கோ தம்பி'என்பார் மாமா. இப்படியே ஊர்போய்ச் சேர்வீர்கள்.

*****

ஊர் போய்ச் சேர்வதற்குள் நீங்கள் புழுகிய லண்டன்புழுகுகளில்முழுதாய் மயங்கி, பிரிட்டிஷ் மகாராணிக்கு அடுத்தது எங்கட 'பெடி' தான் என்று, அந்த அப்பாவிச் சொந்தங்கள் அநியாயமாய்நம்பியிருக்கும். 'சூட்கேஸ்' முழுக்கத் தங்கக் கட்டி தான் என்ற கனவில்,சொந்தமெல்லாம் சிலிர்க்கும்.'பதினைஞ்சு வருஷத்துக்குப்பிறகு' பெடி' வந்திருக்கு. அவன கொண்டுகாணி வாங்க வேணும். அடகெடுக்கவேணும். கோயில் கோபுரம்கட்டிவிக்க வேணும். கோழிக்கூடு திருத்துவிக்க வேணும்.' எனும் ஆயிரம் கனவுகளோடு அடுக்கடுக்காய்உறவுகள் உங்களைச் சூழும். நீங்கள் 'பவுசு' காட்ட வந்த பரிதாபம்,அதுகளுக்குத் தெரியவா போகிறது?

கோடியாய் கொண்டு வந்து கொட்டி,தங்கள் குடி முழுவதையும் நீங்கள்ஆளப் போவதாய் எண்ணி, அந்தஎளிய சனங்கள் ஏமாறும். தங்கள் எதிர்பார்ப்பில், பாற்புட்டும், பனங்கிழங்கும்,பனாட்டும், பனங்காய் பணியாரமும் எள்ளுருண்டையும், இலந்தைப் பழமும்,கறுத்தக் கொழும்பானும், கழியும், கூழாம்பழமும், கூழுமென, தம் வறுமையிலும், வளமை காட்டி,உறவுகள் தூண்டில் போடும்.எல்லாம் நீங்கள் 'சூட்கேஸ்' திறக்கும்மட்டுந்தான். நான்கு நாள், ஐந்து நாள் எதிர்பார்ப்புக்காட்டி, நீங்கள் உங்கள் அலுவல்கள் பார்க்க, 'எப்பையடா இவன்,'சூட்கேஸ்' திறப்பான்' என்ற எதிர்பார்ப்போடு, எல்லா உறவுகளும் ஏங்கிக் கிடக்கும். பழைய கட்டாடியும், 'தம்பிய ஒருக்கா காணலாம் எண்டுவந்தனான்' என்று தலை சொறிவார். 'தம்பிட பேரில அர்ச்சனை பண்ணிவிபூதி கொண்டு வந்தனான்', கும்பாபிஷேக 'நோட்டீசோட'குருக்களும் வருவார். 'ஒன்டவிட்டஅண்ணன், இரண்ட விட்ட அக்கா,மூண்டாம் வீட்டு அன்ரி' என்று, அடுக்கிய சுற்றத்தால் சூழப்படுவீர்கள். அத்தனைபேர் கண்களும், நீங்கள் கொண்டு வந்த 'சூட்கேசை'இடையிடையே நோட்டம் விடும்.

வெளிக்கிடுகிற அன்று நீங்களும்'சூட்கேசை'த் திறப்பீர்கள். அன்ரிக்கு'சென்ற்', அக்காவிற்கு பழஞ்சீலை, பெரியப்பாவுக்கு பிஸ்கட், மச்சாளுக்குஇமிற்றேசன் காப்பு, சின்னம்மாட 'பெடி'யளுக்குசொக்லேட், மருமோனுக்கு மகன் பாவிச்ச சப்பாத்து, கட்டாடிக்கு காசு ஐம்பது ரூபா என்று, வள்ளல் தன்மையாய் நினைந்து கொண்டு வந்த அத்தனையையும், வீசி எறிந்து நீங்கள் விமானம் ஏறுவீர்கள்.

*****

அதோடு உங்கள் பயணம் முடிந்தது. லண்டனில் காட்ட முடியாத பெருமையை, ஊரில் காட்டிவிட்ட உவப்பு உங்களுக்கு.உறவெல்லாவற்றையும் ஆட்கொண்டுவென்றதாய், உங்களுக்கு நினைப்பு.ஆனால் இங்கோ நிலைமை தலைகீழ்.

ஓயாமல் உங்களுக்கு இங்கு விழும் திட்டு, அங்குகேட்கவா போகிறது?

''குமரை கரையேத்த உதவுவான்எண்டு பாத்தா, கோதாரி விழுவான்'சென்ற்' எல்லே கொண்டு வந்து தர்றான். அவங்கள போல குளியாதவர்கள் எண்டு,எங்களையும்நினைச்சிட்டாங்கபோல.''

''அவன்ட பென்டில்ட பழஞ்சீலைஉடுக்கவே, நாங்கள் பாத்துக் கொண்டிருந்தனாங்கள்? அவாட ஜீன்சும் மூஞ்சையும், குரங்குக்குகோவணம் கட்டின மாதிரி.''

''இவன் வெளிநாடு போக, என்ட தங்கக் காப்ப அடகு வைச்சுக்குடுத்தனான். துலைஞ்சு போவான்இப்ப என்ட குமருக்கு, 'இமிற்றேசன்'காப்பல்லே கொண்டு வந்து தர்றான்.''

''அந்தப் பாடேல போவானுக்கு, பால்புட்டுமல்லே அவிச்சுக்குடுத்தனான். நாய் மேண் அம்பது ரூபாக்கு 'சொக்லட்' கொண்டுவந்து தந்திட்டு, ஐநூறு ரூபாயான் மாம்பழங்களெல்லாம் திண்டிட்டெல்லேபோயிட்டான்.''

''அவரும் அவற்ற காற்சட்டையும்.அந்தக் காற்சட்டையைப் பார்க்கவே நினைச்சனான்,தம்பி அங்க பிச்சை தான் எடுக்குது எண்டு. அம்பது ரூபாயெல்லேதர்றார், ஆருக்கு வேணும் இந்த நாயுந்தின்னாக் காசு?''

''அவற்ற திறத்திலகழுத்தில கமரா வேற. வைரவற்றகழுத்தில வடை மாலை மாட்டின மாதிரி. அம்மி,'' குளவி, ஆட்டுக்கல்லுஎல்லா மெல்லே பட மெடுக்கிறார். அஞ்சு தலைமுறையாய் லண்டனில வாழ்ந்தவர்மாதிரி.'

''என்ட மேனுக்குக் கொடுத்துவிட்டஉழுத்ததம் மா பாசலையும், விட்டிட்டெல்லே போயிட்டான் அந்தப்பேயன். அவற்ற பெண்டிலின்ட பிள்ளைபேறுச்சரக்குச் சாமான்முழுவதும், என்ட மேன்ர தலையிலதான் கட்டிவிட்டவங்கள்.இப்பவெயிற்றாமல்லே, வெயிற்.'அடுத்த முறைஎன்ட மோன் வரேக்க, அவள் குமரிஏதும் கொண்டுவரட்டன். அப்ப கதைக்கிறன்.''

இவையெல்லாம் என்னவென்று கேட்கிறீர்களா? அத்தனையும் உங்களுக்கான அர்ச்சனைகள் தான் ஐயா.இப்படியா உங்களுக்கு விழும்திட்டுக்கள், உங்கள் காதில் கேட்க நியாயமில்லை.

*****

'சொந்தம் எல்லாம் சுயநலத்தோட தான்' நான் சொன்னஉண்மைகளைக் கேட்டு, நீங்கள்முகம் சுழித்துச் சொல்வது கேட்கிறது. நீங்கள் மட்டும் என்னவாம்? அன்பினாலா அவர்களை பார்க்கவந்தீர்கள்? நீங்கள் காட்டிய பவரில்,பாவம் அந்த ஏழை உறவுகள்,எதிர்பார்த்ததில் என்ன தவறு?நினைத்தது கிடைக்காமல் போக' உங்களைப்போல் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' நாகரீகம் தெரியாத அந்தக் கிராமத்து மனிதர்கள், திட்டத்தான் செய்வார்கள். நீங்கள் போய் ஒரு மாதமாயிற்றா? இன்னும் ஊரில்அர்ச்சனை முடிந்தபாடில்லைஎன்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். பதினைந்தாண்டுகளின் பின்னானஉங்கள் பயணத்தின் முடிவு, அந்தோ பரிதாபம் போங்கள்.

*****

வெளிநாட்டிலிருக்கும் அத்தனைபேர்களும் இப்படிப்பட்டவர்கள் தானா?என்று, வேறு சிலரின் கோபக்குரல்என் காதில் விழுகிறது. சத்தியமாய்அப்படி நான் சொல்ல வரவில்லை, தேசங்கடந்தும், நேசம் கடவாநெஞ்சங்களை நன்கறிவேன். தொப்பி பொருந்துகிறவர்களுக்குமட்டுமே இக் கட்டுரை. அவர்களுக்காகக் கட்டுரையைத் தொடர்கிறேன்.

*****

எங்களை மற்றவர்கள் திட்டுவதைச் சொல்லத்தான், இவ்வளவு கஷ்ரப்பட்டு கட்டுரை எழுதினீரா? ஆத்திரத்தில் உங்கள் மீசை இருந்தஇடம் துடிப்பது தெரிகிறது. வெள்ளைக்காரர்கள் மதியார்கள் என, மீசையைத்தான் எப்போதோ எடுத்துவிட்டீர்களே! கொஞ்சம் அமைதி அடையுங்கள். 'எங்களைஇழிவுபடுத்தவே இக்கட்டுரை வரைந்திருக்கிறீர்! உங்கள் சுட்டுவிரல் என் நெஞ்சை நோக்கி நீள்கிறது.சத்தியமாய் சொல்கிறேன்.உங்களை இழிவுபடுத்த நான் இக் கட்டுரையை எழுதவில்லை. உங்களுக்குப் புத்தி சொல்வதே என் நோக்கம். 'விஸா'வும்'ரிக்கெட்'டும் இருந்தால் ஊருக்கு வரலாம் என, நீங்கள் நினைத்தால் அது தவறு. உங்கள் வருகைக்காக, இத்தனை உறவும், எத்தனையோ கனவுகளோடும், ஏக்கங்களோடும் காத்திருக்கும். அத்தனை ஏக்கங்களையும் தீர்க்க முடிந்தால்இங்கு வாருங்கள். உறவுகள் புதுப்பிக்கப்படும். இல்லாமல் இங்கு வந்தீர்களோ, உள்ள உறவும் சிதைந்து போகும். வந்தால் உதவுவான் என, உங்கள் கடிதங்கள் கண்ட கனவிலேனும், உறவுகள் இருந்துவிட்டுப் போகட்டும். அவர்கள் கனவை, உங்கள் வருகையால் சிதைக்காதீர்கள்.கனவு தரும் இன்பத்தை நிஜங்கள் நிர்மூலமாக்கு கின்றன.

'இத்தனைபேரினதும் தேவைகளை நிறைவேற்ற,நாங்கள் என்ன கோடீஸ்வரர்களா?'நீங்கள் கேட்பது புரிகிறது.கோடீஸ்வரனாய் உங்களைஇனம் காட்டியது நீங்கள் தானே! உங்கள் எதிர்பார்ப்பு வேறு, எவ்வளவு தான்முயன்றாலும், அத்தனை பேரையும்உங்களால் திருப்திப்படுத்த முடியாது. அத்தனை பேராலும் உங்களிடம் எதிர்பார்க்காமல் இருக்கவும் முடியாது.பிறகென்ன? 'பவர்' காட்டி உங்கள் பயணம் முடிய, லட்சார்ச்சனை தான்மிஞ்சும். ஏன் இந்த வீண் வேலை?தாய் மண்ணாவது ? தகப்பன்மண்ணாவது? வீணாய்விலை கொடுத்து வம்பை வாங்காதீர்கள். இடைவெளி நீண்டுவிட்டது. உங்களால் உறவுகளைத்திருப்திப்படுத்த முடியாது.உறவுகளால் உங்களை ஜீரணிக்க முடியாது.வீணாய் ஏன்வேதனைப்படுகிறீர்கள்? கனவுகளாவது இனிமையாய் இருக்கட்டும்.உண்மை சுடத்தான் செய்யும்.அதற்காக உண்மையைத் தரிசிக்காமலேவாழ்ந்துவிட முடியுமா?நீங்கள்துன்பப்படக்கூடாது என்ற அக்கறையால் சொல்கிறேன். வர முடிந்தாலும் இனி இங்குவராதீர்கள்.இது உங்களின் நன்மை நோக்கியஉபதேசமே. கம்பனின் கவி கருத்தில் வருகிறது.

'வாராதே! வரவல்லாய்'.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ.45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. (250-300 Col. Cms) | ரூ. 70.00 | ரூ. 110.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் எமக்கு அருள் பாலிக்க உவந்தேறி உலாவரும் ஊர்திகள்




**கோ**ணேசப் பெருமான் திருவிழாக் காலத்தில் பல்வேறு ஊர்திகளில் உவந்தேறி கோயில் வீதியில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை யாத்திரிகர்கள் கண்டு களித்து வழிபட்டுப் பேருவகை எய்துவர்.



கோணேசர் உவந்தேறும் ஊர்திகளில் சிறப்புக்கு உரியது இடப வாகனம். இது காளை தியானத்தைக் குறிக்கும். உழவனுக்காக இரவு பகலாக வயலில் உழைக்கின்றது. நெல் விளைய வேண்டிக் கடின உழைப்பினை உழவனுக்கு வழங்கும் காளை கைமாறாக வேண்டிப் பெறுவது நமக்கு உபயோகம் இல்லாத வெறும் வைக்கோலை மட்டுமே. இதே வண்ணம் மனிதர்கள் தமது உழைப்பினை அர்ப்பணஞ்செய்து வாழ வேண்டும் என்பது தெளிவு.

சம்பந்தப் பெருமானுக்கு, அந்தப் பாலறாவாயனுக்கு, இறைவன் இறைவியுடன் விடையேறி வந்து முதன் முதல் தரிசனம் அளித்து, ஞானப்பாலூட்டி அருள்பாலித்தான்.

பேரூழிக் காலத்தில் இடபம், சிவசக்தி வாகனமாக விளங்கும். அக்கினிப்பிரளயத்தில் தரும தேவதை, தானும் இறந்து போகும் என்று அஞ்சிக் கங்காதரனாகிய சிவபிரானை அணுகிச் சரண் அடைந்து அழிவற்ற நிலையினைப் பெற நினைத்தாள். இடப உருவமெடுத்து சிவனார் முன் சென்று தரும தேவதை அவர்க்கு ஊர்தியாகும் பெரும் பேற்றைத் தருமாறு வேண்டினாள். சிவனார் தரும தேவதையின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அருள் பாலித்தார்.

யானை, குதிரை போன்றவற்றை அன்றி, அலங்கரித்த அழகிய தேரையும் விலக்கி, இடப வாகனத்தில் கோணேசர் உவந்து ஏறுவது ஏனென்ற அங்கலாய்ப்பு மணிவாசகப்பெருமானுக்கு ஏற்பட்டது. இவ்வினாவினைத் தானே கேட்டு, விடையினையும் திருச்சாழல் பதிகத்தில் தருகிறார் மணிவாசகர். இதோ அப்பாடல்:—

கடகரியும் பரிமாவும் தேரும்
உவந்து ஏறுதே
இடபம் உகந்தேறிய வாறு
எனக்கறிய இயம்பேடி!
தடமதில்கள் அவை மூன்றும்
தழலெரித்த அந்நாளில்
இடபமாய்த் தாங்கினான்
திருமால்காண் சாழலோ!



மனிதனிடத்து அடிப்படையில் உறையும் திறமைகளை மேலோங்கச் செய்து அவனை உயர் நிலை எய்த வல்லது குண்டலினி சக்தி. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சுருண்டு படுத்திருக்கும் பாம்பினை ஒக்கும் என்பார்கள்.



வால்பகுதி சுருண்டவாறு அடிப்பாகப்பீடமாக அமைய, பத்துத் தலைகளும் குடையாகத் தோன்றும் நாகமும் சிவனார் உவந்தேறும் ஊர்தியாகும்.

மனிதர்கட்கும், தேவர் குழாத்துக்கும் நடுநிலையில் வைத்துப்போற்றப்படுபவர்கள் கந்தர்வர்கள். மனித முகம், இறக்கைகளை உடைய தோற்றம் கந்தருவி. கந்தருவ வாகனமும் சிவனது ஊர்தி ஆகும்.



இரட்டைக் குதிரையும் சிவனார் வாகனம் ஆகும். குதிரைகள் ஆசைகளைக் குறிக்கும். ஆசைகளை நெறிப்படுத்தி நல்லாற்றுப்படுத்தும் நோக்கை இவர் இரட்டைக்குதிரைகளில் உலா வருவதிலிருந்து அறிகிறோம்.

காமதேனுவும் இறைவனின் ஊர்தியாகும். காமதேனுவின் முகம் பெண்ணின் முகத்தை ஒத்தது. உடலோ பசுவினைப் போன்றது. அதனிடத்தே பறவையின் இறக்கைகள் உண்டு. எல்லாத் தேவர்களின் சக்தியினை உடையது காமதேனு. தேவர்களின் சக்திகள் எல்லாவற்றுக்கும் மேலான ஆற்றல் மிக்க இறைவனுக்கு காமதேனு ஊர்தியாகிறது. வேண்டிய யாவற்றையும் அளிக்கும் காமதேனு வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் இறைவனுக்கு உகந்த ஊர்தியாகிறது. இவ்வாறு பல்வேறு ஊர்திகளில் உவந்தேறி உலா வந்து அருள்பவன் கோண நாயகன்.



வே. வரதசுந்தரம்

(தொடரும்...)

# ராசி பலன்

**04—01—2004 முதல் 10—01—2004 வரை 'ராசி பலன்'**

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

லக்கின அதிபன் 12 இல் இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் பார்வை பெறுவதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். ராகு, கேதுக்களின் தொடர்பு ராசிக்கு இருப்பது மன அமைதியைப் பாதிக்கும். தேவையில்லாத பிரச்சினை வீடு தேடி வரும். ஆனால் குருவின் இருப்பும் ராசியைப் பார்ப்பதும் ஆறுதல் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 4 ஆம் வீடு சுத்தமாக இருப்பதாலும் சுக்கிரன் பார்வை பெறுவதும் வீடு, வாகனம் லாபம் தரும். 10 இல் சுக்கிரன் இருப்பதும் பத்துக்கு அதிபன் சனி 3 இல் இருப்பதும் தொழில் துறை முன்னேறும். தெய்வீக அருள் கிட்டும்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் 9 இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,5) உரிய புதன் 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். 4 ஆம் அதிபன் சூரியன் 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 க்குரிய செவ்வாய் 11 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சனி இரண்டில் இருப்பதால்தொழில் துறை முன்னேறும். குரு நாலில் இருப்பது சிறப்பில்லையாயினும் குருவின் பார்வை தொழில் ஸ்தானம் பெறுவதால் தொழில் சிறப்படையும். ராசிக்கு இரு புறமும் தீய கிரகங்கள் இருப்பது மன அமைதியைப் பாதிக்கும்.

**மிதுனம் : மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

ராசிக்குரிய புதன் நோய்ஸ்தானமான ஆறாம் வீட்டில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதாலும் சுக்கிரன் பார்ப்பதாலும் கையில் பணம் இருக்கும். ராசியில் சனி இருப்பதும் செவ்வாய் பார்ப்பதும் நல்லதல்ல. (7,10) உரிய குரு மூன்றில் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.குடும்பத்தில் அமைதி நிலவாது மேலும் சுக்கிரன் மறைவது நல்லதல்ல. தொழில்துறையில் பின்னடைவுவர வாய்ப்புண்டு. ஆனால் சூரியன், குரு பரிவர்த்தனம் ஆறுதல் தரலாம். 10 இல் செவ்வாய் இருப்பது தெம்பைத் தரலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் ராசிக்கு வருவது சிறப்புடையது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டிற்குரியவர் 6 இல் இருப்பினும் இரண்டில் குரு இருப்பதும் ராசியையும் இரண்டாம் இடத்தை சுக்கிரன் பார்ப்பதும் விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வீடு, வாகனம் லாபம் தரும். 7 க்குரிய சனி 12 இல் இருபினும் சுக்கிரன் குரு ஆகிய கிரக இருப்பு மிக நல்ல பலனைத் தரும். 10க்குரிய செவ்வாய் 9 இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குருவின் பார்வை சகல தோசத்தையும் நீக்கும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**

ராசிக்குரிய சூரியன் 5 இல் இருப்பது நல்லது. ஆனால் ராசியில் குரு இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் பார்வை பெறுவதும் கூடாது. அத்துடன் சூரியனைச் சனிபார்ப்பதும்கூடாது. ஆனால் சூரியன், குரு பரிவர்த்தனம் அடைவது கொஞ்சம் ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்தகாரியம் தாமதமாகலாம். மன அமைதி பாதிக்கலாம். (4,9) உரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பெற்றோருக்கு நல்லதல்ல. மேலும் செவ்வாயை சனி பார்ப்பதால் பூர்வீக சொத்து கைமாறக்கூடும். 10க்குரிய சுக்கிரன் 6 இல் இருப்பதால் தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| செவ் | ராகு | | சனி |
| | | | |
| சுக் | | | குரு |
| சூரி | புதன் | கேது | |

மார்கழி 20 முதல் மார்கழி 16 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் வீரிய ஸ்தானமான மூன்றாம் வீட்டில் இருப்பதால் எடுத்த முயற்சி தாமதமாகும். தொழில்துறையில் போதிய முன்னேற்றம் இருக்காது. 10 இல்சனி இருப்பதும் சூரியன், செவ்வாய் பார்ப்பதும் நல்ல அம்சம். தொழில்துறையில் பக்க உதவிகள் கிடைக்கும். அரச உதவிகள் கிடைக்கலாம். (2,9) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதா நலம். (4,7) உரிய குரு 12 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புபாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி நிலவாது. சூரியன், செவ்வாய் ராசியைப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். குரு மறைவது ஒரு குறை தான்.

**துலாம் : சித்திரை3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியில் ராகு, கேதுக்களுக்கு தொடர்பு இருப்பினும் குரு, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்கள் நல்ல நிலையில் இருப்பதால் குறை ஒன்றும் இல்லை. (2,7) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதாலும் சுக்கிரன் பார்ப்பதாலும் தொழில்துறை முன்னேறும். [illegible] உண்டு.

**விருச்சிகம் 4, அனுஷம், கேட்டை.**

ராசிக்குரிய செவ்வாய் 5 இல் இருப்பது சம சுகம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,5) உரிய குரு 10 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். 10 ஆம் அதிபன் சூரியனுடன் குரு பரிவர்த்தனம் அடைவதால் தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு அரச உதவி கிடைக்கும். 4 ஆம் அதிபன் சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 ஆம் அதிபன் சுக்கிரன் மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி நிலவாது. ராசியில் புதன் இருப்பதால் பிரயாண வாய்ப்பு இருக்கும். ஒரு இடத்தில் அமைதியாக இருக்க விடாது அலைச்சல் இருக்கும்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9 இல் இருப்பதால் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் இருக்கும். ஆனால் சனி ராசியையும் ராசி நாதனையும் 4 ஆம் வீட்டைப் பார்ப்பது பலனில் மாறுதல் ஏற்படலாம். இரண்டில் சுக்கிரன் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய புதன் பன்னிரண்டில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவாது. மேலும் 7 இல் சனி இருப்பது பல வழிகளிலும் தீய பலனைக் கொடுக்கலாம். குரு, சூரியன் பரிவர்த்தனம் நன்மை செய்யும். அதிஷ்டம் கிடைக்கலாம். பிதா வழிநன்மையுண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி ஆறில் இருப்பது பொதுவாக நல்லது. மேலும் ராசியில் சுக்கிரன் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். மேலும் சுக்கிரன் தொழிலுக்குரியவரான படியால் தொழில்துறை முன்னேறும். 4 க்குரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 ஆம் வீட்டை சுக்கிரன் பார்ப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். குரு மறைந்தாலு இரண்டாம் வீட்டைப் பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். குரு, சூரியன் பரிவர்த்தனம் அயன, சயன சுகத்தைக் கொடுக்கும். குரு மறைவதும் ஒரு குறை தான்.

**கும்பம்: அவிட்டம்3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசிக்குரிய சனி 5 இல் இருப்பது நல்லதல்ல. ஆனால் குரு நல்ல இடத்தில் இருந்து ராசியைப் பார்ப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டில் செவ்வாய் இருப்பதால் பணத் தட்டுப்பாடு இருக்கும். 4 க்குரிய சுக்கிரன் 12 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 இல் குருவும் 7க்குரியவர் 11 இல் பரிவர்த்தனம் அடைவதால் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்களால் உதவியுண்டு. 10 இல் புதனும் பத்துக்குரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு சுகம் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**மீனம் : பூரட்டாதி4, உத்தரட்டாதி , ரேவதி.**

(1,10) உரிய குரு 6 இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.எடுத்த முயற்சி தடைப்படலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்புண்டு.எதிரிகளின் கை ஓங்கும். கடன் பட நேரிடலாம். (2,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பினும் இரண்டில் குரு இருப்பதால் பணப்பற்றாக்குறை நிலவும். (4,7) உரிய புதன் 9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். சனி ராசிநாதன் குருவையும் தொழில்ஸ்தானத்தையும் இராசியையும் பார்ப்பது கூடாது. தேவையில்லாத பிரச்சினை வர வாய்ப்பு உண்டு .மன அமைதி பாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி பிறந்த நாள் விழா

சொல் புதிது, பொருள் புதிது. மகா கவி பாரதியின் ஆளுமை இவை இரண்டிலும் தங்கியிருந்தது.

தமிழ் நாட்டில் பிறந்த பாரதி இந்திய உபகண்டத்துக்கு மட்டுமல்லாது உலகம் பூராவும் புகழ் பெற்ற கவிஞனாக மிளிர்ந்ததன் காரணம் அவனிடம் காணப்பட்ட



'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மங்கள விளக்கேற்றுகிறார். திருமதி யசோதா சரவணபவனும் படத்தில் காணப்படுகிறார்.

தேசப்பற்று. இந்தியாவின் சுதந்திரத்துக்கு தனது கவிதைகளால் வித்திட்டவன் பாரதி. சுதந்திரம் கிடைக்கும் முன்னர் ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என பள்ளுப் பாடியவன் அவன்.

நமக்குள் ஆயிரம் ஜாதிகள் இருக்கலாம். ஆயிரம் சண்டைகள் இருக்கலாம். ஆனால் அந்நியன் வந்து புக என்ன நீதி என மார் தட்டிக் கேட்டவன் பாரதி.

பாரதியின் 121 ஆவது பிறந்த நாள் கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் அண்மையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கை மக்கள் பொதுப் பணி மன்றம் இந்த விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

'மங்கியதோர் நிலவினிலே' எனப் பாடிய கவிஞனின் பிறந்த நாள் விழா மங்கிய தோர் மாலைப் பொழுதில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் தம்பதியர் மங்கள விளக்கினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவரது ஆவேசமான உரையில் இந்தியாவுக்கு ஒரு சூடு.

''பாரதி இன்றிருந்தால் அடக்குமுறைக்கும், ஒடுக்குமுறைக்கும் பலியாகிக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இந்தியாவின் போக்கை நிச்சயம் கண்டித்திருப்பான்''– என்று அவர் கூறினார்.

''இலங்கை மக்களின் அபிலாசைகள் நிறைவேற இந்தியா உதவிக்கரம் நீட்டாவிட்டாலும் பரவாயில்லை. எமது விடுதலைக்குத் தடையாக இல்லாமல் இருந்தாலே போதும்'' எனவும் அவர் அங்கு முழங்கினார்.

கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநிர்த்தானந்தா, ''பாரதி ஒரு பன்முகக் கவிஞன்'' என்றார். ''பாரதி ஒரு புரட்சிக் கவிஞன், பாரதி ஒரு தேசியக் கவிஞன், பாரதி ஒரு குழந்தைக் கவிஞன், பாரதி ஒரு உலகக் கவிஞன் என்று கூறிய சிவநிர்த்தானந்தா பாலர் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை பாரதியை நாம் புரட்டிப் பார்க்கிறோம் என்றால் அவனது கவிதைகளில் காணப்பட்ட புரட்சிக் கருத்துக்கள்தான் காரணம். எதிர்காலத்தில் நடக்கக் கூடியவற்றை முன் கூட்டியே சொல்லும் வல்லமை படைத்தவன் தான் உண்மையான கவிஞன். அதே வகையில் பாரதி உண்மையான கவிஞன். 'ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று அன்று இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கு முன்னமே குதூகலிக்கத் தொடங்கியவன் பாரதி'' என்று அவர் கூறினார்.

ஆசிரிய ஆலோசகர் திருமதி செல்வராணி வேதநாயகம் அங்கு உரையாற்றுகையில், புதிய கருத்தொன்றை முன் வைத்தார்.

''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் என்று பாரதி அன்று பாடியதன் நோக்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஓர் அரசியல் உறவை உருவாக்கவே. ஆனால், இன்று அந்தப் பாலம் தேவையில்லை. எமது தலைவிதியை நாமே தீர்மானித்துக் கொள்வோம். பெண்களைப் பற்றி பாரதியின் நெஞ்சில் தீயாகப் பற்றிக் கொண்டிருந்த விடயம் பெண்ணடிமைத் தனம். பெண்களை அடக்கி ஆளும் இழிவை அகற்ற வேண்டுமென்று அன்றே குரல் கொடுத்தவன் பாரதி. பாரதப் பெண்கள் படும் அவலத்தைக் கண்டு சினந்து எழுதிய காவியம் பாஞ்சாலி சபதம்'' இப்படி திருமதி வேதநாயகம் குறிப்பிட்டார்.



பேராசிரியர் சந்திரசேகரன் தலைமை உரை நிகழ்த்துகிறார்.

விழாவுக்கு மேலும் சிறப்பூட்டிய நிகழ்ச்சி ''பாரதியும் பரதமும்'' என்ற நாட்டிய நிகழ்வு. இந்த விழாவின் சிறப்புகளுக்கெல்லாம் ஒரு பின்புலம் வேண்டும் அல்லவா? அந்தப் பின்புலத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அவர் தான் நடன சிகாமணி என்ற அயராத உழைப்பாளி.

எஸ்.செபரட்ணம்.



விழாவைச் சிறப்பித்த பிரமுகர்கள்.



மூத்த எழுத்தாளர் தில்லை நடராஜாவின் மல்லிகைப் பந்தல் வெளியீடான ''அப்பா'' எனும் நூலின் வெளியீட்டு விழாவும், அதனை நூலுருவாக்கி வெளிக் கொணர உதவிய கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக் கொள்வதையும், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, இலக்கிய ரசிகர் எஸ்.ஆர்.பாலசந்திரன் ஆகியோரையும் படத்தில் காண்க.

## கொட்டாஞ்சேனை சென். லூஸியஸ் முன்பள்ளி நிகழ்வுகள்





கொட்டாஞ்சேனை சென். லூஸியஸ் முன்பள்ளிப் பாடசாலையின் ஆண்டு விழாவும், பயிற்சி முடித்த பின்பு அரச பாடசாலைகளில் அனுமதி பெற்றுக் செல்லும் சிறார்களுக்கான பிரியாவிடை வைபவமும் சமீபத்தில் இடம் பெற்றன. அப்பொழுது இடம் பெற்ற கலை நிகழ்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# மட்டக்களப்பில் செஞ்சிலுவைச் சங்க விழா

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையின் தொண்டர் அலகினால் அண்மையில் நடத்தப்பட்ட செஞ்சிலுவைச் சங்க கொள்கை பரப்புக் கலை விழாவின் போது எடுக்கப்பட்ட படங்களை அருகில் காணலாம்..

முதலாவது படத்தில் செஞ்சிலுவைச் சங்க தொண்டர் அலகின் உறுப்பினர்கள் வில்லுப்பாட்டு நடத்துகின்றனர். இந்த வில்லுப்பாட்டை தயாரித்தளித்தவர் கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம்.






இரண்டாவது படத்தில்கலைஞர் மாஸ்டர் சிவலிங்கத்தின் கலைப் பணியைப் பாராட்டி செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளை உப தலைவர் ஜனாப் ஏ.ஜி.எம்.றபீக் கலைஞர் மாஸ்டருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்குகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வீரருக்காக 1,000 கோடியை செலவிடத் தயாராகும் கழகம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நெதர்லாந்து கால்பந்தாட்ட வீரரான ரூட் வான் நிஸ்டல்ரூயை தமது அணியில் சேர்த்துக்கொள்வதற்காக 6 கோடி பவுண்களைச் சுமார் 1,000 கோடி ரூபாவை செலவிடத் தயார் என இங்கிலாந்தின் செல்ஷியா கழகம் அறிவித்துள்ளது.

27 வயதான நிஸ்டல்ரூய் தற்போது இங்கிலாந்தின் முன்னணிக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்காக விளையாடி வருகிறார்.

தற்போது இக்கழகத்துடனான ஒப்பந்தக் காலத்ததை நீடிப்பது தொடர்பாக அவர் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

அதேவேள்ளை, செல்ஷியா கழகமும் அவரை சேர்த்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்காக 6 கோடி பவுண்களை செலவிடத் தயார் என செல்ஷியா கழகத்தின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியான போல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

செல்ஷியா கழகத்தை, ரஷ்ய கோடீஸ்வரரான ரோமன் அப்ரமோவிக் சில மாதங்களுக்கு முன்னர் வாங்கினார்.

அதன்பின் செல்ஷியா கழகத்தை முன்னணிக்கு கொண்டுவருதற்கு தீவிர முயற்சிகள் நடைபெறுகின்றன.

இங்கிலாந்தின் 'ஆர்செனல்' கழகத்திற்காக விளையாடும் பிரான்ஸ் வீரர் தியரி ஹென்ரியை வாங்குவதற்கு 4-5 கோடி பவுண்களை செலவிடத் செல்ஷியா கழகம் தயாராக இருந்தது. ஆனால், இம்முயற்சி வெற்றி பெறவில்லை.



வான் நிஸ்டல்ரூய்

இந்நிலையிலேயே நிஸ்டல்ரூயை தமது அணியில் சேர்ப்பதற்கு செல்ஷியா கழகம் முயற்சிக்கிறது.

6 கோடி பவுண்கள் வான் நிஸ்டல் ரூய்க்கு விலையாக நிர்ணயிக்கப்பட்டால் அது ஒரு சிறந்த முதலீடாக அமையும்'' என ஸ்மித் கூறினார்.

இந்த ஒப்பந்தம் நடைபெற்றால் அது புதிய உலக சாதனையாக அமையும்.

பிரான்ஸ் கால்பந்தாட்ட வீரர் ஸினடின் ஸிடனை இத்தாலியின் ஜுவெண்டஸ் கழகத்திலிருந்து ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகம் 4.65கோடி பவுண்கள் செலவளித்து வாங்கியமையே இதுவரைஉலக சாதனையாக வுள்ளது.

27வயதான வான் நிஸ்டல்ரூய், மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்காக 125 போட்டிகளில் பங்குபற்றி 96 கோல்களை அடித் துள்ளார்.

தமது கால்பந்தாட்ட வாழ்வின் இறுதி வரை இக்கழகத்திற் காக விளையாட விரும்புவதாக அவர் அண்மையில் தெரிவித் தார்.

தற்போது அவர் வாராந்தம் 40,000 ஸ்ரேலிங் பவுண் (சுமார் 68 லட்ச ரூபா) சம்பளம் பெறுகிறார்.

அவர் செல்ஷியா கழகத்தில் இணைந் தால் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

இதற்கிடையில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகமும் நிஸ்டல்ரூயைத் தமது அணியில் சேர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

மன்செஸ்டர் யுனைடட் கழகத்தைச்சேர்ந்த இங்கிலாந்து வீரர் டேவிட் பெக்காமை கடந்த ஜூலை 2.5 கோடி ஸ்ரேலிங் பவுண்கள் கொடுத்து வாங்கியது.

ரொனால்டோ, ஸினடின் ஸிடன் போன்ற முன்னணி வீரர்களும் இக்கழகத்தில் விளையாடுகின்றனர்.

இந்நிலையில், ரியல் மட்ரிட்டின் அறிவிப்பினால் மன்செஸ்டர் யுனைட்ட் கழகம் மேலும் உசாரடைந்துள்ளது.

எந்த வகையிலும் நிஸ்டல்ரூயைத் தக்க வைத்துக்கொள்வதற்கு மன்செஸ்டர் யுனைட்டட் கழகமும் தீவிரமாக முயற்சிக்கிறது.

''என்னால் முடிந்தவரை அவரை தக்க வைத்துக்கொள்வதற்கு நான் முயற்சிக்கிறேன்.

ரூட் இக்கழகத்தில் இரண்டரை வருடங்கள் விளையாடியுள்ளார். அவர்இங்கு மிக மகிழ்ச்சியாகவே உள்ளார்.''

- இவ்வாறு மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்தின் முகாமையாளர் அலெக்ஸ் போர்குசன் தெரிவித்துள்ளார்.

ரியல் மட்ரிட் கழகத்தின் முயற்சியை முறியடிப்பதற்காக வான் நிஸ்டல்ரூயின் சம்பளம்இரு மடங்காக (வாரத்திற்கு ஒரு கோடி 30 லட்ச ரூபா) அதிகரிக்கப்படலாம் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

# ஷேவாக்கின் அபாரத் துடுப்பாட்டத்திற்கு பயிற்றுநரின் எஸ்.எம்.எஸ். தகவல் காரணம்?

அவுஸ்திரேலிய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய வீரர் வீரேந்தர் ஷேவாக் 195 ஓட்டங்களைப் பெற்றார். இதற்கு தாம் செல்லிடத் தொலைபேசி மூலம் அனுப்பிய எஸ்.எம்.எஸ். அறிவுரையே காரணம் என ஷேவாக்கின் பயிற்றுநர் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி மெல்போர்ன் நகரில் இப்போட்டி ஆரம்பமான இப்போட்டியின் முதல் நாளன்று ஷேவாக் 233 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 25 பௌண்டரிகள் உட்பட 195 ஓட்டங்களைப் பெற்றார்.

இம்மைதானத்தில் முதல் நாள் ஆட்டத்தில் ஒரு வீரர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். 1897-98 இல் அவுஸ்திரேலிய வீரர் கிளேம் ஹில் 182 ஓட்டங் களைப் பெற்றமையே இதுவரை சாதனையாக இருந்தது.

1977-78இல்118ஓட்டங்களைப் பெற்ற சுனில் கவாஸ்கர் இம்மைதானத்தில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற வீரராக விளங்கினார். இச் சாதனையையும் ஷேவாக் முறியடித்தார்.

ஷேவாக் 3 ஓட்டங்களைப் பெற்ற போது அவரை 'ரன் அவுட்' முறையில் ஆட்ட மிழக்கச் செய் யும் வாய்ப்பை கில்கிறிஸ்ட் தவற விட்டார். 66 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது ஷேவாக் கொடுத்த பிடியை ஆஸி. வீர்ககள் கைப்பற்றத் தவறினர்.

கடந்த வருடம் மேற்கிந்திய அணியுடனான போட்டியில் 144 ஓட்டங்களைப்பெற்றமையே இதற்கு முன் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டங்களாக இருந்தன.




ஷேவாக்

இதற்கிடையில் ஷேவாக்கின் அபார ஆட்டத்திற்கு தாம் அனுப்பிய எஸ்.எம்.எஸ். தகவல்தான் காரணம் என ஷேவாக்கின் பயிற்றுநர் அமர்நாத் சர்மா தெரிவித்துள்ளார்.

ஷேவாக்கின் பாடசாலைப் பருவத்திலிருந்து அவரின் பயிற்றுநராக இருப்பவர் சர்மா.

''அவுஸ்திரேலிய சுற்றுலாவின் முந்தைய போட்டிகளில் லெக் ஸ்டம்பிற்கு நேராக கால்களை வைத்து விளையாடினார் ஷேவாக். இதனால் பந்துவீச்சாளர்களுக்கு மூன்று ஸ்டம்புகளும் திறந்திருக்கும்.

அதனால் லெக் ஸ்டம்ப் - மிடில் ஸ்டம்பிற்கு இடையில் கால்களை வைத்து விளையாடுமாறு இரண்டாவது போட்டி முடிவடைந்த பின் நான் எஸ்.எம்.எஸ்.செய்தி அனுப்பினேன். இப்படி விளையாடுவதன் மூலம் 'ஓவ் சைட்' திசையில் அதிகம் அடித்தாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

மூன்றாவது போட்டியில் 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அவரின் ஆட்டத்தை நான் தொலைக்காட்சியில் பார்த்தேன். நிற்கும் நிலையை மாற்றிக்கொண்டதன் மூலம் அவர் சிறப்பாக விளையாடுவதை அவதானித்தேன்''

இவ்வாறு சர்மா கூறினார்.

மெல்போர்ன் டெஸ்ட்டில் தனது 5 ஆவத சதத்தை பௌண்டரி அடித்து பூர்த்தி செய்த ஷேவாக், தனது முதலாவது இரட்டைச் சதத்தை சிக்ஸர் மூலம் பூர்த்தி செய்ய முயற்சித்தார். ஆனால் இம்முயற்சி வெற்றி யளிக்கவில்லை.

ஆனால் இரட்டைச்சதத்தைத் தவற விட்டமைக்காக நான் வருந்தவில்லை என ஷேவாக் கூறியுள்ளார்.

' 190 ஓட்டங்களைக் கடந்த ஷேவாக் இருதடவை சிமோன் கட்டிச்சின் பந்து வீச்சை விளாசி அடித்தார். முதல் தடவை பந்து எல்லைக்கோட்டைக் கடந்தது. ஆனால், இரண்டாவது தடவை பந்து நேதன்பிரக்கனின் கைகளில் தஞ்சம் புகுந்தது.

இது தொடர்பாக ஷேவாக் கூறுகையில்

''தனிப்பட்ட இலக்குகளுக்காக எனது வழமையான அதிரடிப் பாணியை நான் மாற்றவிரும்பவில்லை.

அது ஒரு 'புல் டொஸ்' பந்து. நான்0 ,99, 199 ஓட்டங்களில் இருந்தாலும் 'புல் டொஸ் பந்துகளை அப்படித்தான் நான் அடிக்கத் தீர்மானித்திருந்தேன்.'' என்றார்.

அவுஸ்திரேலியாவின் அதிவேகப் பந்து வீச்சாளரான பிரெட்லீ வீசிய பந்துகள் இரு தடவை ஷேவாக்கின் தலைக் கவசத்தை தாக்கின. ஆனால், அதன்பின் தனது நம்பிக்கை அதிகரித்ததாக ஷேவாக் கூறினார்.


# விளையாட்டுச் செய்திகள்

-ஆர்.சேதுராமன்

## யூஸுப் யுஹானாவின் நத்தார் கொண்டாட்டம்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் யூஸுப் யுஹானா இம்முறை நியூஸிலாந்தின் வெலிங்டன்நகரில்சக வீரர்களுக்கு மதிய விருந்தளித்து நத்தார் பண்டிகையைக் கொண்டாடினார்.

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான இறுதிக் கட்டப் பயிற்சிகளுக்கிடையில் நத்தாரை கொண்டாடினார். விருந்து வைபவத்தில் யுஹானாவின் மனைவி டானியாவும் பங்குபற்றி னார்.



யுஹானா

பாகிஸ்தான் கிரிக் கெட் அணியின் உப தலைவரான யூஸுப் யுஹானா, அவ்வணியின் ஒரேயொரு கிறிஸ்தவ வீரர் ஆவார்.

''இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றும் சக வீரர்களுடன் எனக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்பட்டதில்லை.

வழமையாக அவர்கள் எனக்கு வாழ்த்து அட்டைகளை அனுப்புவர். அவர்கள் நத்தார் தினத்தை எனது மகிழ்ச்சிக்குரிய நாளாக்குவர். கடந்த தடவை ரஷிட்லத்தீவ் என்னை வெளியில் அழைத்துச் சென்று விருந்தளித் தார்''

-இவ்வாறு யுஹானா கூறினார்.

இதேவேளை, நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர்களான டேனியல் வெட்டோரி, லோ வின்சன்ட், இயன் பட்லர் ஆகியோர் நத்தார் தாத்தா வேடமணிந்து, வெலிங்டன் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்ற சிறுவர்களுக்கு பரிசுகளை வழங்கி னர்.

அதன்பின் சக வீரர்களுடன் தமது ஹோட்டலில் பாரம்பரிய நத்தார் விருந்தில் கலந்து கொண்டனர்.

## கிளிஜ்ஸ்டர்ஸுடன் திருமணம்: லேய்டன் ஹெவிட் அறிவிப்பு

அவுஸ்திரேலிய டென்னிஸ் வீரர் லேய்டன் ஹெவிட்டும், பெல்ஜிய டென்னிஸ் வீராங்கனை கிம் கிளிஜ்ஸ்டர்ஸும் திருமணம் செய்துகொள்ளவுள்ளனர்.

கடந்தவாரம், கிளிஜ்ஸ்டர்ஸ் சகிதம் உல்லாசப் படகுப் பிரயாணத்தில் ஈடுபட்ட ஹெவிட், சிட்னி துறைமுகத்தில் வைத்து இத் தீர்மானத்தை அறிவித்தார்.

22வயதான லேய்டன் ஹெவிட் ,கடந்த வருடம் விம்பிள்டன் கிண்ணத்தை வென்றவர். 20 வயதான கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் தற்போது உலகில் இரண்டாவது நிலை வீராங்கனையாக விளங்குகிறார்.

2000 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்கப் போட்டிகளின்போது இவ்விருவரும் முதல் தடவையாக சந்தித்தனர். அப்போதிருந்து இரு வரும் காதலர்களாக உலா வருகின்றனர்.

இந்நிலையில் ''ஹெவிட்டின் திடீர் அறிவிப்பினால் வியப்படைந்துள்ள அதே வேளை, மகிழ்ச்சியும் அடைகிறேன்'' என கிளிஜ்ஸ்டர்ஸ் தெரிவித் துள்ளார்.

''படகில் இராப்போசன விருந்தொன்றுக்கு வருமாறு அவர் என்னை அழைத்தார். திடீரென மோதிரமொன்றையும் தோடுகளையும் எனக்கு வழங்கினார்.

எனக்கு முன் கூட்டியே கிடைத்த நத்தார் பரிசுகள் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், திருமணத்திற்கான திட்டவட்டமான திகதியை இன்னும் தீர்மானிக்கவில்லை.''

-இவ்வாறு கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் கூறினார்.

அமெரிக்க டென்னிஸ் வீரர் அந்ரே அகாஸி யும், ஜெர்மனிய வீராங்கனை ஸ்டெபி கிராப்பும் சில வருடங்களுக்குமுன் திருமணம் செய்தனர். அதன் பின், டென்னிஸ் உலகின் மிகவும் புகழ் பெற்ற திருமணமாக லேய்டன் ஹெவிட்- கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் திருமணம் விளங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.



லேய்டன் ஹெவிட் – கிம் கிளிஜ்ஸ்டர்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:சில மனைவிகள் அடங்காப்பிடா ரிகளாக இருப்பது ஏன்?

பதில்:காவி வேட்டிகள் விற்பனையாக வேண்டும் அல்லவா?



சி.முஹமது அக்பர், மாத்தறை.

கேள்வி:வேதனையால் விரக்தியா? விரக்தியால் வேதனையா?

பதில்: வலி,வேதனை என்று ஏற்படும் போது நம்பிக்கை குறைந்து வெற்றிடம் ஏற்படுகிறது. எதிர்கொள்ளும் பிரச்சினைகளால் வேதனை ஏற்படும் போது சவாலாகவும் தைரியமாகவும் எதிர் கொண்டால் விரக்தி பறந்து போய் விடும்.

சி.மதன், யாழ்ப்பாணம்.

எம்.கயல்விழி, முல்லைத்தீவு.

கேள்வி:பெண்களின் மனதைக் கண்டு பிடிக்க முடிவதில்லையே! ஏன்?

பதில்:பெண்களின் மனதுக்கும் வாய்க்கும் தொடர்பு இல்லாததால்.

ஏ.விமலேந்திரன், தெஹிவளை.

கேள்வி: எது பரிகாரம்? எது பிராயசித்தம்?

பதில்: பாவம் போக்குவது பரிகாரம்.அதற்கு ஈடு செய்வது பிராயசித்தம்.

ரி.சுதர்சன், வவுனியா.

கேள்வி: பித்தா! ஒரு தொழில் நிறுவனம் நடத்த எது தேவை?

பதில்: முதலில் முதல்.அதாவது மூலதனம் தேவை.

பா.கபில்ராஜ், அச்சுவேலி.

கேள்வி: பித்தா ! மகிழ்ச்சியின் எல்லை எது?

பதில்: வானில் பறக்கும் இதயம்.

தே.தேவநேசன், புத்தளம்.

கேள்வி: இளைஞர்களின் வளர்ச்சிக்கு தடைபோடுவது பெற்றோரா, சமுதாயமா?

பதில்:திறமை என்பது காட்டாற்று வெள்ளம். அதற்கு எவரும் தடைபோட முடியாது.நாங்களே தடுக்கியோ, வழுக்கியோ விழாதவரை அவர்களை எவராலும் தடுக்க முடியாது.

சு.பாலகுமார், மட்டக்களப்பு.

கேள்வி: பித்தா! கேட்பது கடினமா? பதில் சொல்வது கடினமா?

பதில்: நீங்கள் ஒரு பத்திரிகையாளராக இருந்தால் கேள்வி கேட்பதே கடினமானது.அரசியல் வாதியாக இருந்தால் பதில் சொல்வது கடினமானது.

சி.சிவாகரன், பருத்தித்துறை.

கேள்வி: அலைபாயும் மனசுக்கு அணை போட வழி உண்டா? கூறுங்களேன்?

பதில்: தியானம் செய்யுங்கள்.

என்.சிவராஜினி, புதுக்குடியிருப்பு.

கேள்வி: எனக்கு திருமணம் ஆகப் போகிறது.எனது மனைவியை தேனிலவுக்கு எங்கே அழைத்துப் போக லாம்?

பதில்: பழைய காதலிகள் இல்லாத ஊராகப் பார்த்து அழைத்துப் கொண்டு போங்கள்.

எம்.சந்திரமவதனி, மல்லாவி

கேள்வி: அழகு எங்கு இருக்கிறது?

பதில்: எங்கும் இருக்கிறது. பார்ப்பவர்களின் கண்களில்தான் அதிகம் இருக்கிறது.

இ.சந்திரா, மதுரங்குளி.

கேள்வி: உலகில் அரிது எது? கொடிது எது? இனிது எது? பெரிது எது? சிறுமை எது?

பதில்: அமைதியான பெண்மை; அடங்காத மனைவி; குழந்தையின் சிரிப்பு; போதும் என்ற மனம்; நன்றி மறக்கும் பண்பு.

சே. கிருபாகிருஷ்ணன், மட்டுவில்.

கேள்வி: பித்தனே! சிறந்த நடிகர் யார்?

பதில்: மனைவிக்கு முன் நடிக்கும் கணவனை விட சிறந்த நடிகர்கள் இருக்க முடியுமா?



ஆ.சுபா, மட்டக்களப்பு.

கேள்வி: ரஜனிகாந்த் அரசியலுக்கு வந்தால் அரசியல் சாக்கடை தூய்மையாகிவிடுமா?

பதில்: ஏன் சுபா! சினிமா உலகு இப்போது தூய்மையாகவா இருக்கிறது!

சி.கவிதா, மானிப்பாய்.

கேள்வி: மனிதன் யானையை அடக்கும் இந்தக் காலத்தில் நீங்கள் உங்கள் மனைவிக்கு அடங்கி நடக்கலாமா?

பதில்: யானையை அடக்குபவரும் அடுப்படி பானைக்கு அடங்குவது உங்களுக்குத் தெரியாததா என்ன?

பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜனவரி 10 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

சி.சிந்து , வவுனியா.

கேள்வி:— தற்போதைய பெண்கள் வெளிநாட்டு ஆடவரை அதிகம் விரும்புவது ஏன் பித்தா?

பதில்:— விரும்பிய நேரத்தில் விரும்பியவற்றை மாற்றிக் கொள்ளலாம் என்பதனால்.


இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே...நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஐயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

ச.சிவயோகம், ஹட்டன்.

கேள்வி: திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவா?

பதில்: அது , இருக்கலாம் ஆனால்,இப்பொழுது பெரும்பாலும்றொக்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகின்றன.



செ.ரதீபன், சாவகச்சேரி.

கேள்வி: பித்தனே! ஒரு ஜோக் கூறுங்களேன்.

பதில்: வழமையாக தாமதமாகவே வரும் ரயில் ஒரு நாள் சரியான நேரத்துக்கு வந்து விட்டது. அதைக்கண்ட ஒரு பயணிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஓடோடிச் சென்று ஒரு மாலையை வாங்கி ரயில் சாரதிக்கு போட்டு '' சரியான நேரத்துக்கு வந்ததுக்கு பாராட்டு'' என்றார். அதற்கு சாரதி'' இது நேற்று வர வேண்டிய ரயில்'' என்றார்.

**பித்தனின் கேள்வி**

பித்தா! ஏ9 பாதை மூடப்பட்டால் எப்படி இருக்கும்?

**வாசகர் பதில்கள்**

1.புவிதா — திருநெல்வேலி.

ஆகா! ஓகோ!! என்று திரிந்தவர்கள் எலி வலையில் அகப்பட்ட மாதிரி தத்தளித்து, முடங்கிப் போய் இருப்பார்கள்.

2. இசைவர்மன்— நல்லூர்.

ஏ9 பாதை மூடினால்செம்மணியில் வசிக்கும் நீர் செம்மணிப் புதைகுழியில் வசிக்க வேண்டிவரும்.

3.ச.சசீந்திரராசா— மருதங்கேணி.

அம்மா! திரும்பவும் புலிகளின் கைகளில் ஆயுதம் வழங்குவதற்கு தயாராக இருக்க வேண்டிய நிலை ஏற்படும்..

4. பா.ஹன்ஸ் குகன்— உரும்பிராய்.

கப்பல் செலவோ மும்மடங்காகும், அரைகுறை ஆடையோ ஆறு மடங்காகும், பட்டாளத்தின் பாடோ அம்போவாக மாறும் அவ்வளவுதான்.

5. தே.தவராஜா — வட்டக்கச்சி.

புதிய பாதை திறப்பதற்காய் மீண்டும் ஒரு 'ஜெயசிக்குறு' ஆரம்பித்து 'ஓயாத அலைக'ளோடு முடிவுறும் நிலை தோன்றும்.


# GLOBAL STUDIES INFOTEC

Registered With MINISTRY OF VOCATIONAL & TERTIARY TRAINING OF SRI LANKA

முன்னேறி வரும் கணினி யுகத்தில் நீங்களும் ஒரு கணனி விற்பன்னராவதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்...!

500 மாணவர்களுக்கான

## புலமைப்பரிசில் திட்டம்

அதிக புள்ளிகளைப் பெறும் முதல் 50 மாணவர்களுக்கு கட்டணம் முற்றிலும் இலவசம்!

பரீட்சை நடைபெறும் இடம் : Global Studies InfoTec Auditorium
பரீட்சைத் திகதி : 10-01-2004 (சனி), 11-01-2004 (ஞாயிறு)
விண்ணப்ப முடிவுத்திகதி : 07-01-2004

| பாடம் | பாடநெறிக் கட்டணம் | காலம் | கழிவு வீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | A+ | A | B | C | D |
| MS Office XP 2002 | 4,500/= | 3 Month | 85% | 75% | 60% | 50% | 40% |
| DeskTop Publishing | 4,500/= | 3 Month | | | | | |
| Computer Science | 9,500/= | 4 Month | | | | | |
| Visual Basic 6.0 | 6,000/= | 3 Month | | | | | |
| Java | 6,000/= | 3 Month | | | | | |
| Dip. in Com. Accounting | 11,000/= | 3 Month | | | | | |
| C++ | 6,000/= | 3 Month | | | | | |
| Hardware | 4,300/= | 1½ Month | | | | | |
| Web Designing | 6,000/= | 3 Month | | | | | |
| AutoCAD | 6,000/= | 3 Month | | | | | |
| Multimedia | 8,000/= | 3 Month | | | | | |
| Internet & E-Mail | 1,500/= | 2 Month | | | | | |
| Typing Tutorial | 2,000/= | 1 Month | | | | | |

இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்...!

எமது கணனி நிறுவனத்திற்கு நேரடியாக வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யலாம்.

No. 370-1/1, Galle Road, Wellawatte, Colombo-06. Tel: 2360449 E.mail: globalstudiesinfotec@yahoo.com



Diploma in

# Marketing

## Course Structure

- Introduction to Marketing
- Marketing Environment
- Consumer Behavior
- Product Planning and Implementation
- Principles of Selling
- Marketing Communication
- Marketing Research Process
- International Marketing
- Principles of Management
- A Project or an Assignment

Enrolment Now On

## Eligibility

*School Leavers and all other aspiring to make a career/enhace knowledge in marketing.*

Course Duration 06 Months
Course Fee Rs 9500/-
Lectures Sundays 2.00 p.m. - 6.00 p.m.
Commencement 17th January 2004

**For More Information**

# INSTITUTE OF BUSINESS STUDIES

12, Kensington Gardens, Colombo - 04.
Tel: 2554944, 2593470, 0777-394208 Fax: 2593470
E-mail: ibs1@sltnet.lk
Website: www.ibslanka.com

*Our Commitment is Your Future*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, உயர்கல்விச் சிறப்பிதழ்

## லண்டன் இன்போ ரெக்

### இலவச கணினி புலமைப் பரிசில் பரீட்சை 2003

லண்டன் இன்போ ரெக் இலவசக் கணினி புலமைப் பரிசில் பரீட்சை 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இப் பரீட்சையானது முற்றிலும் பொது அறிவு



சம்பந்தமான கேள்விகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேற்குறிப்பிட்ட திகதிகளில் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்கு விசேட நேரம் ஒழுங்கு செய்து தரப்படும். இச் சலுகைகள் டிசம்பர் 31 ஆம் திகதி வரையுமே உள்ளன. பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்கள் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்யலாம்.

இதனைவிட பாடநெறி முடிந்த பின்பு பிரபல தொலைக்காட்சி நிறுவனங்களின் அனுசரணையுடன் Mult Media Animator பதவிக்கான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இவை அனைத்தும் இந்தியாவின் பிரபல மல்ரிமீடியா கல்லூரியில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் நடத்தப்பட உள்ளன.

**கம்பியூட்டர் மியூசிக் வகுப்புக்கள்**

இப் பாடநெறியானது முதன் முதலில் LONDON INFO TECH இனால் அறிமுகம் செய்யப்பட்டு மிகத்திறமையான முறையில் கற்பிக்கப்படுகின்றது. எல்லா மாணவர்களுக்கும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

இப் பாடநெறியிலே உலகப் பிரசித்தி வாய்ந்த மென்பொருட்களினை கையாளும் திறமை மாணவர்களுக்கு வழங்கப்படுவதோடு விசேட சலுகைகளும் வழங்குகின்றன என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இதனையிட்டு இலவசக் கருத்தரங்கு நடாத்தப்பட்டு பங்கு பற்றும் எல்லா மாணவர்களுக்கும் இலவச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

எமது நிறுவன விரிவுரையாளர்கள் வருமாறு:

திரு. R.துஷ்யந்தன் (M.Sc. கம்பியூட்டர்)
திரு. T.ஜெயந்தன் (B.Sc. விஞ்ஞானம்)
திரு. ஆதி (மல்ரி மீடியா அனிமேற்றர்)
திரு. ஜெயதாஸ் (மல்ரி மீடியா அனிமேற்றர்)
திரு. சசீகரன் (கம்பியூட்டர் டிசைனர்)
திரு. ராஜ்குமார் (கிராபிக்ஸ் டிசைனர்)

## தபால் மூலம் ஆங்கில அறிவு பெறலாம்

நவீன உலகின் தொடர்பாடலுக்கு ஆங்கில மொழி அவசியமானது.

தற்போதைய சூழ்நிலையில் உலகளாவிய ரீதியில் சகல தொடர்பாடல்களும் ஆங்கில மொழியில் இடம்பெறுவதே அதிகமாகும். இதனால் விரும்பியோ விரும்பாமலோ நாம் இம் மொழியை திறம்படக் கற்க வேண்டியது அவசியமாகின்றது.


கணினித்துறையில் படாநெறியைத் தொடர்வது என்றாலும் சரி, வர்த்தகம், வங்கித்துறை செயற்பாடுகளாயினும் சரி ஆங்கில மொழியே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. தவிரவும் இலங்கையில் நவீன மக்கள் வாழும் சூழ்நிலை அரச கரும பொது மொழியாக ஏன் சர்வதேச பொது மொழியாகவும் கூட ஆங்கில மொழியே அமைவதனால் நாம் அதில் கவனம் செலுத்தாது இருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது ஜீ.சீ.ஈ. உயர்தரத்திலும் ஆங்கிலப் பாடநெறி கட்டாய பாடமாக இருப்பதுடன் பல்கலைக் கல்வியைத் தொடருவதற்கு மிக இலகுவாகவும் இருக்கவல்ல இம் மொழியைக் கற்பது சாலச் சிறந்ததே.

எனவேஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை எழுதிவிட்டு 3 மாத விடுமுறையை ஜாலியாக கழித்துவிட இருக்கும் நீங்கள், மிகப் பயனுள்ள சிறப்பான வழியில் கழித்துவிட்டால் உங்கள் வாழ்விலும் வெற்றி உண்டு.

ஆகவே தற்போது Jaffwoolar Educational Institute ஊடாக தபால் மூலமான ஆங்கில பாடநெறியை கற்க முடியும். 3 மாத காலத்தில் ஆங்கில அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் ஆங்கிலத்தில் பேசுதல், இலக்கணம், கடிதம் எழுதுதல், கட்டுரை எழுதுதல், குறுக்கெழுத்துப் போட்டி என்பவற்றை உள்ளடக்கியதாகவே இப் பாடநெறி அமைந்துள்ளது.

அத்துடன் பாடநெறி முடிவில் Dip. In. English சான்றிதழ் வழங்கப்படுவதுடன், பாடநெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக English - Tamil Dictionary, Laminated bag,



File Cover என்பன வழங்கப்படுவதுடன் Spoken Sinhala இலவசமாக கற்பிக்கப்படும். எனவே தாமதமின்றி இச் சேவையை விரும்புவோர் J.E.I. Institude, P.o. Box. 119. Kandy எனும் முகவரிக்கு தொடர்பு கொண்டால் போதுமானதாகும்.

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது. உங்கள் பெயர் முகவரியுடன் 4 ரூபா முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பி மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதலே ஆகும். அதன் பின்னர் இப் பாடநெறியைத் தாங்கள் தொடர முடியும்.

இதனால் மூன்றே மூன்று மாத காலத்தில் நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசி, நவீன உலகின் போக்குக்கு ஈடினையாக வாழ்ந்து வெற்றி பெறுவீர்கள்.


## PROFESSIONAL COMPUTER COURSES

| | | |
|---|---|---|
| Diploma in MS. Office XP | 3 மாதங்கள் | ~~4000/=~~ 2000/= |
| Diploma in Computer Studies | 6 மாதங்கள் | ~~5000/=~~ 2500/= |
| Diploma in Web Designing | 4 மாதங்கள் | ~~6500/=~~ 3500/= |
| Advanced Diploma in Graphic Designing | 6 மாதங்கள் | ~~9500/=~~ 4750/= |
| Diploma in Hardware Eng | 4 மாதங்கள் | ~~6500/=~~ 3500/= |

| | | | |
|---|---|---|---|
| ~~6000/=~~ 3000/= | Diploma in Programming (3 மாதங்கள்) | C ++ (3 மாதங்கள்) | VB (3 மாதங்கள்) |
| | Diploma in Type Setting (3 மாதங்கள்) | Auto Cad (3 மாதங்கள்) | JAVA (3 மாதங்கள்) |

LONDON INFO TECH
Professional Computer Training College

LONDON INFO TECH
No: 36- 1/1 Station Road
Wellawatte, Colombo - 06
தொலைபேசி: 2598069

ஏழு நாட்களும் காலை 8.30 மணிமுதல்
இரவு 9 மணி வரை திறந்திருக்கும்





## O/L பரீட்சை முடிந்து விட்டது... அடுத்து என்ன?

*தபால் மூல ஆங்கில பாடநெறி.*

**2003 ஆம் ஆண்டு O/L பரீட்சை முடிவு பெற்று விட்டது. இனிவரும் 3 மாத விடுமுறையை சிறப்பாக கழிப்பதன் மூலம் நீங்கள் வெற்றி பெற முடியும்.**

**உயர்தர வகுப்பில் கல்வி கற்கப்போகும் உங்களுக்கு ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாகும். எனவே ஆங்கில அறிவை விருத்தி செய்வது மிக முக்கியமாகும்.**

Jaffwoolar Educational Institute **ஊடாக தபால் மூலம் ஆங்கில பாட நெறியை கற்பதனால் ஆங்கில அறிவை பெற்றுக் கொள்ளலாம். காலம் 3 மாதம். ஆங்கிலத்தில் பேசுதல், இலக்கணம், கடிதம் எழுதுதல் கட்டுரை எழுதுதல், குறுக்கெழுத்து போட்டி என்பவற்றை உள்ளடக்கியதாகும்.**

பாடநெறி முடிவில் Dip. in English சான்றிதழ் வழங்கப்படும். பாடநெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்.

- English - Tamil Dictionary.
- Laminated Bag.
- File Cover.
- Spoken Sinhala.



இலவசமாக கற்பிக்கப்படும்.

*மேலதிக விபரங்களுக்கு பெயர் முகவரி எழுதிய 4/= முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.*

***தொலைபேசி மூலம் பெற:- 081-2201 433.***



**J.E.I. Institute**
**P.O. Box No. 119, Kandy.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி உபாசகி அம்மாவின் அவதார மகிமை!

## டென்மார்க் பிராண்டா நகரில் தெய்வீக அவதார அற்புதம்


அபிராமி உபாசகி

இப்பரந்த நிலவுலகின் கண்ணே தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் அவதார புருஷர்கள் தோன்றி தர்மத்தை நிலை நாட்டுவது வழமை. அவ்வாறு அவதரிப்பவர்கள் மனிதர்களோடு மனிதர்களாக வாழ்ந்து தெய்வாம்சம் பொருந்தியவர்களாக விளங்கி மக்கள் மத்தியில் தெய்வீகமாகவே திகழ்வார்கள். தெய்வமாக மாறிவிடுவார்கள்.

### ஆதிபராசக்தியின் அம்சம்

டென்மார்க் பிரண்டா நகரில் சக்தியின் வெளிப்பாடாக, அபிராமி அம்பாளின் சொரூபமாக, ஆதிபராசக்தியின் அம்சமாக தோன்றி தம் சக்தியினால் அடியார்களை வசப்படுத்தி அபிராமி அம்பாளின் அனுக்கிரகத்தை – ஆளுமையை – உலகில் பிரகாசிக்கச் செய்து ஜொலிக்கின்றார் அபிராமி உபாசகி அம்மா அவர்கள்.


ஸ்ரீ அபிராமி அன்னையாரின் வயிற்றிலிருந்து உருவாகி வெளிவந்த அற்புதக் கருங்கல் சிவலிங்கம் உயிர்த்துடிப்பாய் உள்ள காட்சி

அவருடைய அவதார மகிமை சொல்லிலடங்காதது. அபிராமி அம்பாளின் மறுவடிவமாகத் திகழும் அன்னை பிரண்டா நகரிலே அருள்மழை பொழிந்து அடியார்களையெல்லாம் ஆனந்த மயமான அருள் வெள்ளத்தில் ஆழ்த்தி மகிழ்ச்சியில் திளைக்க வைத்திருக்கின்றார். பழக்கப்பட்ட மிருகங்களைப் பயன்படுத்தி புதிய மிருகங்களைப் பிடிக்குமாப் போல் அபிராமி அம்மை நம்மையெல்லாம் ஆட்கொள்ளும் பொருட்டே திருவவதாரஞ் செய்துள்ளார். அம்பாள் மானிட வடிவில் அவதரிப்பதற்கு அவள் மனிதர் மேல் வைத்த அன்பும் கருணையுமே காரணம். அதற்கு ஈடு இணையே கிடையாது.

### அருள் வெளிப்பாடு

டென்மார்க் பிராண்டா அபிராமி உபாசகி அம்மா வருடந்தோறும் டிசம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு திருவவதாரம் எடுப்பது வழமை. அப்போது அம்மாவின் திருமேனியில் உண்டாகும் மாற்றங்களினால் ஒவ்வொரு செயலிலும் அன்பு, அருள், கருணை, தூய்மை, அழகு, நன்மை என்பன வெளிப்படுகின்றன. அச்சமயம் அம்மாவின் திருவாய் மலர்ந்து லிங்கம் தோன்றும்.

அவதாரம் என்றால் இறங்கி வருதல் என்று பொருள்படும். இதனால் அடியார்கள் இன்பத்தில் திளைக்கின்றார்கள். பிரார்த்தனை, யோகம், தியானம், தவம், பஜனை முதலியவற்றினால் கிடைக்கின்ற தெய்வீக உறவு இந்த அவதார காலங்களில் உலகில் ஈடுபடுகின்ற ஆன்மாக்களுக்கு மிக எளிதில் கிடைத்து விடுகிறது. அம்மாவின் அவதாரம் பூரண அவதாரம் என்றே கொள்ள வேண்டும். சாதாரண மனிதரால் அவதார புருஷர்களின் அற்புதங்களை எளிதாகப் புரிந்திட முடியாது. ஒரு யுகத்தின் போக்கையே மாற்றியமைக்கும் வல்லமை பெற்றவர்கள் ஆகையால் ஆன்மீக ஞானத்தை அடியவர்களுக்கு சுலபமாக ஊட்டி விடுவார்கள்.

### காலத்தால் அழியாதது

லோகமாதாவான தெய்வீக அன்னையாம் மாதாஜி ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மாவின் உபதேசங்கள், அருள் வாக்குகள் அனைத்துமே மிகச் சிறந்தவை; காலத்தால் அழியாதவை. இந்த அம்மாவை உண்மையாக நம்புகின்றவர்கள் தம் வாழ்வில் சுபிட்சம் அடைகின்றார்கள். அம்மாவின் அவதார நாள் மிகவும் புனிதம் வாய்ந்தது. பிராண்டா நகரே விழாக்கோலம் தான்; மக்கள் மத்தியில் என்றுமில்லாத மகிழ்ச்சி பொங்கி வழியும். பல நாடுகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கே கூடிவிடுவார்கள். இந்த மாதம் கடுங்குளிராக இருந்தாலும் அதையும் பொருட்படுத்தாமல் அம்மாவின் அருட்பிரவாகத்தில் குளிப்பதற்காகக் குதூகலத்துடன் கோலாகலமாகக் கூடி விடுவார்கள். இன்று இந்தக் கிராமமே டென்மார்க்கில் பிரசித்தி பெற்ற கிராமமாக மாறியிருக்கின்றது.

### ஞானம் ஊட்டும் அன்னை

ஞானிகள், யோகிகள், முனிவர்கள், சித்தர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்ற ஓர் அம்மாவாகத் திகழும் இந்த அபிராமி உபாசகி மனிதர்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கி அருள் பார்வை நல்கி இறைவன் பால் ஈர்த்து ஆன்மீக ஞானத்தை ஊட்டி விடுகின்றார்கள்.

இவர்களைக் கண்டு தரிசித்தாலே பாவங்கள் தொலைந்து போகும். அவதார காலங்களில் பரமாத்மாவோடு ஜீவாத்மா நேரடியாக உறவுகொள்கின்றது. இத் தெய்வீக உறவு அவதார காலங்களில் மட்டுமே ஆத்மாக்களுக்கு சுலபமாகக் கிடைக்கும்.

'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்பதற்கிணங்க அபிராமித் தாய் அன்பே வடிவமாகத் திகழ்ந்து அருளை அள்ளி வழங்கும் அபிராமி உபாசகியாக அவதாரமெடுத்து தம்மிடையே வாழ்ந்து வருவதையிட்டு டென்மார்க் பிராண்டா மக்கள் பெருமிதம் அடைகின்றார்கள்.

### தெய்வீக நிகழ்ச்சி

இங்குள்ள ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயமாகும். அபிராமி அம்மாவின் அவதார மகிமை காண அடியார்கள் அனைவரும் பக்தி பூர்வமாகக் கூடிவிடுவார்கள். உபாசகி அம்மா ஞான நிலையில் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்ததும் ''ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய'' என்ற பக்திக் கோஷத்துடன் அடியார்கள் பக்தி வெள்ளத்தில் அமிழ்ந்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இரவு பன்னிரெண்டு மணி அடித்ததும் அம்மாவின் அருட்பொலிவு பன்மடங்காகிப் பொலிந்து பல்கிப் பெருகும். கண்கள் அகல விரிந்து ஆனந்த பாஷ்பம் சொரியும். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத தெய்வீக நிகழ்ச்சி இது.

அம்மாவுக்குப் புதிய காவியுடை உடுத்தி, தலைக்கு அழகான முடியும் வைத்து, கழுத்திலும் கைகளிலும் உருத்திராட்ச மாலைகள் அணிவித்து, தேசிக்காய் மாலையும் போட்டு, நெற்றியில் சூல வடிவமான குங்குமப் பொட்டு வைத்து, மலர் தூவி ''அரோகரா'' என்று சொல்லி பக்திப் பரவசம் எங்கும் நிரம்பி வழிய, வாழ்வில் பெரும் பாக்கியம் செய்தோமே இந்தக் காட்சியைக் காண என்று எல்லோரும் அதிசயித்து நிற்கும் அற்புதக் காட்சி மனதைத் தொடவல்லது.

### பூர்வீக புண்ணியம்

இந்த அருள்மயமான அவதாரக் காட்சியைக் காண்பதற்கு உண்மையில் கொடுத்து வைத்திருக்கவேண்டும். டென்மார்க் பிராண்டாவில் கூடும் அடியார் கூட்டம் பூர்வீக புண்ணியஞ் செய்த ஒரு திருக் கூட்டம் என்று கூறினால் மிகையாகாது. அது உண்மையில் அருட் பொலிவோடு விளங்கும் ஆனந்த மயமான பக்தர் கூட்டம் என்பதே சாலப் பொருந்தும்.


லிங்கம் திருவாய் மலர்ந்த அற்புத நிகழ்வு

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்









இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜனவரி.04 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org